SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:3, Issue:10, Pages:56
MAY-2024, Price Rs.20/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

மே 2024,
விலை ரூ.20/-



## திருப்பதி
## ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி
## பிரம்மோத்ஸவம்

2024 மே 16 முதல் 24 வரை

## 09-04-2024 அன்று குரோதி நாம தெலுங்கு வருடப் பிறப்பினை முன்னிட்டு திருமலை ஆலயம் மற்றும் தி.தி.தே. இணை ஆலயங்களில் நடைபெற்ற யுகாதி ஆஸ்தான நிகழ்ச்சிகள்


1


2


3


4


5


6


7

திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் கல்வி மற்றும் சுகாதார துறைக்கு புதிய இணைச் செயலாட்சித்தலைவராக திருமதி எம். கௌதமி ஐ.ஏ.எஸ். அவர்கள் 09-04-2024 யுகாதி (தெலுங்கு வருடப் பிறப்பு) தினத்தன்று பதவி ஏற்றபோது



*ந த்வேவாஹம் ஜாது நாஸம்*
*ந த்வம் நேமே ஜநாதி$_4$பா: |*
*ந சைவ ந ப$_4$விஷ்யாம:*
*ஸர்வே வயதம: பரம் ||*




இவ்விதம் நான்
எப்பொழுதும்
இருந்ததில்லை என்பது
இல்லவே இல்லை;
நீயும் இருந்ததில்லை;
இந்த அரசர்களும்
இருந்ததில்லை
என்பதும் இல்லை;
இனி மேலும், நாம்
அனைவரும் இருக்கப்
போவதில்லை என்பதும்
இல்லை.

*– ஸ்ரீமத் பகவத் கீதை 2–12*

*ஓராண்வழியா யுபதேசித்தார் முன்னோர்*
*ஏராரெதிராசரின்னருளாள் பாருலகில்*
*ஆசையுடையோர்க்கெல்லாம் ஆரியர்காள் கூறுமென்று*
*பேசி வரம்பறுத்தார்பின்*

உடையவர்க்கு முன்னேயிருந்த ஆசாரியர்கள் ஒரு ஆசாரியன் ஒரு சீடனுக்கு உபதேசிக்கும் முறைப்படி வழியாக அர்த்த விசேஷங்களை உபதேசித்துப் போந்தார்கள். அவர்களுக்குப் பிறகு சிறப்பு வாய்ந்த எம்பெருமானார் (தமது) பரமகிருபையினாலே, “ஆரியர்களே! என்று தம் அடியார்களை விளித்து நீங்கள் இப்பூமண்டலத்தில் அர்த்தங்கள் கேட்க ஆசையுடையாரெல்லார்க்கும் உபதேசியுங்கள் என்று நியமித்து முன்னோர்கள் வைத்துக் கொண்டிருந்த ஒரு வரம்பைப் போக்கி விட்டார்.

*-உபதேச ரத்தினமாலை 37*





திருமலை திருப்பதி தேவஸ்தானம்



# "ஸ்ரீவேங்கடேஸ்வரா அன்னப்பிரசாத அறக்கட்டளை"

*திருமலையிலும், திருச்சானூரிலும் தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு அன்னப்பிரசாதம் வழங்கப்படுவது அறிந்ததே. தற்பொழுது தி.தி.தே. அன்னப்பிரசாத அறக்கட்டளை பக்தர்களுக்கும், நன்கொடையாளர்களுக்கும் இதற்கு நன்கொடை அளிக்க நல்வாய்ப்பினை நல்குகின்றது. அதுவே,*

## ஒரு நாள் நன்கொடை திட்டம்

| | | |
|---|---|---|
| 1) | காலை சிற்றுண்டி | - 08 இலட்சம் |
| 2) | மதிய உணவு | - 15 இலட்சம் |
| 3) | இரவு உணவு | - 15 இலட்சம் |
| | மொத்தம் | - 38 இலட்சம் |

0877-2263001
0877-2263472

திருமலை திருப்பதி தேவஸ்தான அன்னப்பிரசாத அறக்கட்டளை இத்தொகையை நன்கொடையாளர்களிடமிருந்து பெற விழைகிறது. நன்கொடையாளர் / தனிப்பட்ட நபர் / நிறுவனங்கள் / நிறுமங்கள் / அறக்கட்டளைகள் இணைந்தும் இருக்கலாம்.

இவர்கள் ஒரு நாளைக்கு மொத்தம் ரூ.38 இலட்சமோ/காலை சிற்றுண்டிக்கு ரூ.8 இலட்சமோ/மதிய உணவிற்கு ரூ.15 இலட்சமோ/இரவு உணவிற்கு ரூ.15 இலட்சமோ அளிக்கலாம்.

தி.தி.தேவஸ்தானம் நன்கொடையாளர்களுக்கு அளிக்கும் வசதிகள் ஒரே விதமாகவே இருக்கும்.

**மேலும் தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்:**

**துணைச்செயலாட்சித் தலைவர் (நன்கொடையாளர் பிரிவு) எப்.ஏ.சி., தி.தி.தேவஸ்தானம், திருமலை, ஆந்திர மாநிலம்**

மின்னஞ்சல் : cdmc.ttd@tirumala.org
www.tirumala.org என்ற இணையதளத்திலும் விவரங்களைக் காணலாம்.

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

மே 2024

மலர் 03 இதழ் 10



## உள்ளுறை

| | பக்கம் |
|---|---|
| அருள்மிகு அழகிய சிங்கர் -திருமதி பிரேமா வரதன், புதுதில்லி. | 07 |
| அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை: சீதா பிராட்டியார் - திரு.எஸ்.ஸ்ரீதுரை, காஞ்சிபுரம். | 9 |
| அன்னமய்யாவின் ஸ்ரீராமபக்தி -திருமதி மைதிலிசம்பத், செகந்திராபாத். | 12 |
| திருப்பதி ஸ்ரீகங்கையம்மன் சித்திரைத் திருவிழா - திரு. வ.ஓ. சுரேஷ், சத்திரவாடா. | 14 |
| சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்: அவதாரம்–சம்ஹாரம் - படிமக்கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை. | 16 |
| யானைமலை நரசிங்கப்பெருமாள் -திரு. சி.ஸ்ரீரங்கம், திருச்சி. | 18 |
| திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப்பாசுரம்: மண்ணோர்க்கும் விண்ணோர்க்கும் கண்ணாவான் -பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி. | 20 |
| பதஞ்சலியின் யோக சூத்திரங்கள் -திரு. எம்.எஸ்.சுகுமார், சென்னை. | 25 |
| கல்யாண வாழ்வை அருளும் ஸ்ரீகல்யாண நரசிங்கப்பெருமாள் - திரு. அறந்தாங்கி சங்கர், சென்னை. | 31 |
| ஆதிசங்கரர் வாழ்வில் அற்புத மகளிர் -திருமதி. சுபா, சேலம். | 33 |
| ஆயுர்வேதம் : குரல் இனிமைக்கு -திருமதி வி.உஷா, திருப்பதி. | 37 |
| ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம் - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். | 38 |
| 108 திவ்வியதேச வைபவம் : திருக்காரகம் - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 40 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் : இராமாநுஜர் - ஸ்ரீ உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. | 42 |
| ஏகாதசி விரதம் புராண வரலாறுகளுடன்... - திரு.கிருஷ்ண துளசி, சென்னை. | 45 |
| ராசிபலன்கள் : மே 2024 -டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம். | 47 |
| நீதிக்கதை : நல்லதே பேசுங்கள்! -திரு.எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி. | 48 |
| சித்திரக்கதை : பக்தர்களைத் துன்புறுத்தாதீர் | 52 |

சிறப்பு ஆசிரியர் :
திரு. A.V. தர்மா ரெட்டி, ஐ.டி.இ.எஸ்.,
செயலாட்சித் தலைவர்(F.A.C.), தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K. ராதாரமணா, எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
திரு. பி.ராமராஜு, எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா

பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
“Sapthagiri”, T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360

நீங்கள் ஸப்தகிரி இதழை www.tirumala.orgயில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri.helpdesk@tirumala.org

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |

இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்

### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : உபய தேவியருடன் ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி, திருப்பதி.

பின்னட்டை : ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி, நாராயணவனம்.



# பசிப்பிணியைப் போக்கிடுவோம்!

'அன்னம் பரபிரம்ம ஸ்வரூபம்" என்பர் ஆன்றோர். தானங்கள் அனைத்திலும் சிறந்தது அன்னதானமேயாகும் என்பர் பெரியோர். அன்னதானம் செய்பவர்கள் தேவலோக பூஜையைப் பெறுவார்கள். உடல் வலிமைக்கு மிகத் தேவையானது உணவே. உணவு இல்லையெனில் உயிர்கள் வாழா. ஆதலால்தான் "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்" ஆகின்றனர். ஒருவருக்கு உயிரைக் கொடுப்பது என்பது எல்லாவற்றையும் கொடுப்பதற்கு சமமாகும். உணவு உட்கொண்டு அச்சக்தியால் எப்புண்ணியச் செயல் செய்தாலும் அதில் பாதியளவு புண்ணியம் உணவு அளித்தவருக்கும், மீதம் உள்ளவை அச்செயல் செய்தவருக்கும் கிடைக்கும் என்பர் சான்றோர்.

"மானிட சேவையே மாதவ சேவை" ஆகும். எனவே, பசித்தோருக்கு உணவளிப்பது என்பது யாகம் செய்ததன் பலனைத் தருவதாகும். ஒருவரை உணவின் மூலமே திருப்தியடையச் செய்ய முடியுமே தவிர பொன், பொருள் என எதைக் கொடுத்தாலும் ஆசை என்பது தீரவே தீராது. மேன்மேலும் வேண்டும் என்றே மனது சொல்லும். ஆனால், உணவு வழங்குவதன் மூலமாக மட்டுமே போதும் எனும் வார்த்தையை நாம் கேட்க முடியும். அன்னதானத்தால் மட்டுமே மூவுலகிலும் வெற்றியும், தேஜஸும், வலிமையும் கிட்டும் என்பது ஐதீகம். மேலும் அன்னதானம் பண்ணுவோருக்கே பரமபதத்தில் முதலிடம் என்பது பொன்மொழி ஆகும். திருமலை திருப்பதி தேவஸ்தானம் அப்பொன்னான வார்த்தையினை எழுத்தோடு அல்லாமல் நடைமுறை படுத்தியும் உள்ளது.

கோயில்களுக்கு வரும் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்குவது சனாதன தர்மத்தின் ஒரு சாம்பிரதாயமாகும். சில விழாக்கள் முழுக்க முழுக்க அன்னதானத்துடன் தொடர்புடையவை. அதாவது சைவ ஆலயங்களில் அன்னாபிஷேகமும், பொதுவாக பெரும்பாலான ஆலயங்களில் நடைபறுகின்ற "திருப்பாவாடை" உத்ஸவமும் அவ்வகையைச் சேர்ந்ததே ஆகும். திருமலை திருத்தலத்தில் பக்தர்களின் பசியைப் போக்க சாளுவ நரசிம்ம ராயன் அன்னதானக் கூடங்களை நிறுவினார். திருக்கந்தாடை ராமாநுஜ ஐயங்கார் மேற்பார்வையில் "இராமாநுஜக் கூடங்கள்" உருவாக்கப்பட்டன. உலகிலேயே பெரிய தார்மீகத் தலமான திருமலை திருப்பதி தேவஸ்தானம் நீண்ட காலமாக ஸ்வாமியைத் தரிசிக்க வரும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் சேவையைச் செய்து வருகின்றது.

இந்த சனாதன சாம்பிரதாயத்தை கடைபிடித்து வரும் திருமலை திருப்பதி தேவஸ்தானம் இப்புனித புண்ணியச் செயலை முதலில் 06-04-1985ஆம் ஆண்டு தொடங்கியது. இரண்டாயிரம் பக்தர்களுக்கு எனத் துவங்கப்பட்ட இத்திட்டம் படிப்படியாக விரிவடைந்தது. ஸ்வாமியைத் தரிசித்து விட்டு வரும் பக்தர்களுக்கு மட்டுமே இந்த அன்னப்பிரசாதம் வழங்கப்பட்டு வந்த நிலையில் 2006ஆம் ஆண்டு அன்றைய பொறுப்பாண்மைக்குழுவினர் ஸ்வாமி தரிசனத்திற்கு மட்டுமின்றி திருமலைக்கு வருகைத்தரும் அனைத்து பக்தர்களுக்கும் ஸ்வாமி பிரசாதமான இந்த அன்னப் பிரசாதத்தை அளித்தல் வேண்டும் என முடிவு செய்தனர்.

அதன்பிறகு தி.தி.தே. நித்ய அன்னதானத்திற்கு எனப் புதிதாக அன்னதான கட்டட வளாகத்தை நிறுவியது. முன்பு ஒரு காலத்தில் திருமலைக்கு வரும் பக்தர்கள் அனைவருக்கும் தாராளமாக அன்னதானம் வழங்கிய மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா பெயரையே இக்கட்டடத்திற்குச் சூட்டப்பட்டது. இந்த அன்னதான திட்டத்தினை விரிவுபடுத்தி திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் திருக்கோயிலிலும் நித்திய அன்னதானம் துவங்கப் பட்டது. மேலும் 29-02-2024 அன்று திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி திருக்கோயிலிலும் தினமும் காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நித்ய அன்னதானம் வழங்கும் திட்டம் துவங்கப்பட்டுள்ளது. பக்தர்கள் அனைவரும் இவ்வரிய அன்னதானச் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பசிப்பிணியைப் போக்கிடுவோம்! பரந்தாமனின் அருளைப் பெறுவோம்!!

# அருள்மிகு அழகிய சிங்கர்



எல்லா புராணங்களும் போற்றும் அவதாரம் நரசிம்ம அவதாரமாகும். அதேபோன்று எல்லா பக்தர்களும், புலவர்களும் துதிக்கும் அவதாரமும் அழகர்பிரானான நரசிம்ம அவதாரமேயாகும். அவ்வகையில் திருமங்கை ஆழ்வார் அஹோபில க்ஷேத்திரத்தில் கொலுவீற்று இருக்கும் நரசிம்ம ஸ்வாமியின் அழகைப்பாடுகிறார். இரண்யனை சம்ஹாரம் பண்ணியவன் அங்கே காட்சி அளிக்கிறான். ஆழ்வார் பார்க்கிற போது அவருக்கு என்ன தெரிகிறதாம் என்றால் அங்கே! சிம்மங்கள் எல்லாம் யானைகளை அடித்துத் தின்று விட்டு தந்தங்களை எல்லாம் வகைப்படுத்தி வைத்து இருக்கின்றதாம். ஒவ்வொரு தந்தமாகக் கொண்டு வந்து நரசிம்மனின் திருவடியிலே இட்டு "ஓம் நரசிம்மாய நம:" என்று அர்ச்சனை பண்ணுகிறதாம். சிம்மம் சிம்மத்தை அர்ச்சனை பண்ணும் காட்சி சிங்கவேள் குன்றத்திலே காணலாம்.

"நரசிம்மனைப் பாடாத பாட்டும் ஒரு பாட்டா? அவனைப் பேசாத நாவும் ஒரு நாவா? அவன் புகழ் கேளாத செவியும் ஒரு செவியாகுமா?" என்று கேட்கிறார் திருமங்கை ஆழ்வார்.

ஶ்ரீரங்கத்தில் ரங்கநாதர் ஆலயத்திலே கம்பராமாயணம் அரங்கேற்றிய மண்டபம் இருப்பது தெரியும். கம்பர் அழகிய சிங்கர் சன்னதிக்கு எதிரிலே போய் நின்று கொண்டார். **"ஒன்றே உரைக்கில் ஒன்றே யாம்..."** என்ற காப்புச் செய்யுளில் ஆரம்பித்துப் பாடவும் "ஆரடா சிரித்தாய்?" என்ற சொல் வந்த கட்டத்தில், ஆலயத்துள் விக்ரஹ ரூபியாய் இருக்கும் பெருமான் சிரித்து, தலையை ஆட்டி, இரு கைகளையும் தூக்கி, "நான் ஏற்கிறேன்" என்று இரணியன் வதைப் படலத்தை ஏற்றானாம்.

ஆகையினாலே இரணிய வதைப் படலம் கம்ப ராமாயணத்திலே இடம் பெற்று அரங்கேறியது. பகவானே அங்கீகரித்த அவதாரமாகிறது நரசிம்ம அவதாரம்.

நம்மாழ்வார் வாக்கிலே வருவதைப் பாருங்கள். அங்கே அப்பொழுதே அவன் வீயத்தோன்றியவன் என்கிறார். நினைத்த இடத்தில் நினைத்த கணத்தில் தோன்றியவனின் காருண்யத்தைச் சொல்கிறார். "என் சிங்கப் பிரான்" என்று அவனை அழைக்கிறார். அந்தப் பாசுரத்தைப் படியாகச் செய்து விட்டார் நம்மாழ்வார்.

காஞ்சி வரதராஜப் பெருமாளைப் பார்த்து "நரசிம்மா" என்கிறார் ஸ்வாமி தேசிகன். உலகத்தில் உள்ள எல்லா பொருட்களிலுமே அவன் நிறைந்து இருக்கிறான். என்றாலும், அவன் வெளிப்பட்டது ஒரு ஸ்தம்பத்தில் இருந்துதான். "காமாஸிகாஷ்டகம்" என்ற அவருடைய அற்புதமான சுலோகம் ஒன்று. த்வயி ரக்ஷதி. (சுலோ.8). அதில், காஞ்சி, வேகவதி நதிக்கரையில் எழுந்தருளி அருள்பாலிக்கும் நரசிம்மா! நீ ஒருவனைக் காப்பாற்ற நினைத்து விட்டால், வேறு யார் அழிக்க நினைத்தாலும் அழிக்க முடியாது. அதுபோல், நீ ஒருவனே அழிக்க எண்ணினால், வேறு யாராலும் அவனைக் காப்பாற்ற முடியாது! அதனால் நமக்கெல்லாம் அவனே கதி.

மூன்று நேத்திரங்களால் போற்றப்படக் கூடியவன் பரமசிவன். அதேபோல், மூன்று நேத்திரங்களால் சொல்லப்படக்கூடியவன் நரசிம்மன்.

**தபன இந்து அக்னி நயன:**
**தாபனீய ரஹஸ்யானாம் சார:**

–ஸ்வாமி தேசிகன்

தாபனீய உபநிஷத்தில் சொல்லப்பட்ட சமஸ்த ரகசியங்களின் சாரமாய் இருக்கக்கூடியவன். காமாஸிகா ஹரி:! இப்படி அமர வேண்டும் – இங்கே இருக்க வேண்டும் என்கிற கட்டாயமில்லாமல் பகவான் தானாகவே இஷ்டமாய் அமர்ந்திருக்கும் க்ஷேத்ரம் ஆனபடியால் 'திருவேளுக்கை' என்னும் க்ஷேத்திரம் 'காமாஸிகை' என்று பெயர் பெற்றது.


இங்கு அமர்ந்திருக்கிறானே! அந்த நரசிம்மன் எப்பேர்ப்பட்டவன்...?பகவானுக்கு ஒரு பக்கம் வலது திருநேத்திரம் – சூரியனே வலது திருநேத்ரமாக அமைந்துள்ளது. இடது திருநேத்திரம் சந்திரன். இடையிலே ஒரு நேத்ரம் அது அக்னி. எல்லோருக்கும் நேத்ரமாய் இருக்கக்கூடிய பரமாத்மாவுக்கு இந்த மூன்று தேவதைகள் நேத்ரமாய் இருக்கிறார்கள். *"முனியே நான்முகனே! முக்கண்ணப்பா..."* என்று நம்மாழ்வார் திருவாய் மொழியிலே ஈச்வரனான நரசிம்மனை விசேஷமாக அநுபவிக்கிறார்.

நரசிம்ம அனுஷ்டுப் மந்திரம் என்று ஒன்று உண்டு. அதிலே முப்பத்திரண்டு அக்ஷரங்கள். ஒவ்வொரு அக்ஷரமும் ஒரு பிரம்ம வித்தையை நமக்கு உபதேசம் பண்ணக்கூடியது. ஆகவே 32 பிரம்ம வித்தைகளாலும் ஆராதிக்கப்படுகிறவர் நரசிம்மர் என்று கொள்ளலாம். ஏதாவது ஒரு பிரம்ம வித்தையை நம்மால் அனுஷ்டிக்க முடியுமா? ஆனால் நரசிம்மனைப் பார்த்து "ஸ்ரீ நரசிம்மாய நம:" என்று ஒரு புஷ்பத்தைப் போட்டு அர்ச்சனை செய்ய முடியும். அப்படி தியானம் பண்ணிவிட்டால் எல்லா பிரம்ம வித்தையும் கிடைத்த பலன் நமக்கு உண்டாகும். அத்தனை பிரம்ம வித்தைகளின் நிலைக்களன் அந்த பரமாத்மாதான்!

**–திருமதி பிரேமா வரதன்,**
**புதுதில்லி, 98997 13565**

**திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பிரம்மோத்ஸவம்**

| தேதி | கிழமை | பகல் உத்ஸவம் | இரவு உத்ஸவம் |
|---|---|---|---|
| 15-05-2024 | புதன் | --- | சேனாதிபதி உத்ஸவம், அங்குரார்ப்பணம் |
| 16-05-2024 | வியாழன் | துவஜாரோஹணம் | பெரிய சேஷ வாகனம் |
| 17-05-2024 | வெள்ளி | சிறிய சேஷ வாகனம் | ஹம்ஸ வாகனம் |
| 18-05-2024 | சனி | சிம்ம வாகனம் | முத்துப்பந்தல் வாகனம் |
| 19-05-2024 | ஞாயிறு | கல்ப விருக்ஷ வாகனம் | சர்வ பூபால வாகனம் |
| 20-05-2024 | திங்கள் | மோகினி அவதாரம் | கருட சேவை |
| 21-05-2024 | செவ்வாய் | ஹனுமத் வாகனம் மாலை வஸந்தோத்ஸவம் | யானை வாகனம் |
| 22-05-2024 | புதன் | சூரியப்பிரபை வாகனம் | சந்திரப்பிரபை வாகனம் |
| 23-05-2024 | வியாழன் | திருத்தேர் | குதிரை வாகனம் |
| 24-05-2024 | வெள்ளி | அவப்ருதோத்ஸவம், சக்கர ஸ்நானம் | துவஜாவரோஹணம் |





*அலசுவோம்...*
*அறிவோம்...*
*ஆதிகாவிய நாயகர்களை...*

# சீதா பிராட்டியார்

– திரு.எஸ்.ஸ்ரீதுரை,
காஞ்சிபுரம், 9486139685

இவ்வுலகில் உயர்ந்த நற்பண்புகளுக்கு எடுத்துக்காட்டாக வாழும் ஒருவரை "உதாரண புருஷன்" என்று அழைப்பது வழக்கத்தில் உள்ளது.

இதே போன்று தங்களின் வாழ்நாள் முழுவதும் கருத்தொற்றுமையுடன் வாழ்கின்ற கணவனும் மனைவியும் "உதாரண தம்பதியர்" என்று அழைக்கப்படுவர். தேவர்களும், முனிவர்களும் சரணாகதி அடைந்து வேண்டிக் கொண்டதற்கு ஏற்ப திவ்ய தம்பதிகள் என்று போற்றி வணங்கப்படும் ஸ்ரீமந்நாராயணனும் ஸ்ரீமஹாலக்ஷ்மித் தாயாரும் திரேதா யுகத்தில் இப்பூவுலகில் அவதரித்து, விவாகம் செய்து கொண்டு, ஒருவரை ஒருவர் அநுசரித்து நடந்து காட்டிய அருமையான தாம்பத்தியமானது உலகிலுள்ளோர் அனைவருக்கும் ஒரு வழிகாட்டியாகவே அமைந்து விட்டது என்றால் அது மிகையாகாது.

*"காதல் ஒருவனைக் கைப்பிடித்தே அவன் காரியம் யாவினும் கை கொடுத்து"* என்று மகாகவி பாரதியார் கூற்றிற்கு இணங்க பல்லாயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பே உதாரணமாகத் திகழ்ந்தவள் நம் ஜகந்மாதாவாகிய சீதா தேவி.



ஸ்ரீராமரின் மாமனாராகிய ஜனகமஹாராஜர் தம்முடைய மகள் சீதா தேவியை ஸ்ரீராமபிரானுக்குக் கன்னிகாதானம் செய்து கொடுக்கும் பொழுது கூறிய வார்த்தைகள் ஆழமான பொருளுடையவை.

*"இயம் ஸீதா மம ஸுதா ஸஹதர்மசரீ தவ*
*ப்ரதீச்ச சைநாம் பத்ரம் தே பாணிம் க்ருஹ்ணீஷ்வ பாணிநா"*

என்கின்ற இந்த சுலோகத்துக்குக் கற்றறிந்த பெரியோர்கள் நூற்றுக்கும் மேற்பட்ட வியாக்கியானங்களைக் கூறுகின்றனர். முற்காலங்களில் ஸ்ரீமத்ராமாயண உபந்யாசம் என்பது மாதக்கணக்கில் தொடர்ச்சியாக நடைபெறும். அதிலும் ஸ்ரீமத்வால்மீகி ராமாயணம் என்றால் குறைந்தபட்சம் மூன்று மாத காலம் அவ்வுபன்யாசம் நடைபெறுவது வழக்கம்.

ஸ்ரீமத்ராமாயணத்தில் மிகவும் முக்கியமான நிகழ்வாகிய சீதா கல்யாண வைபவம் பற்றிய உபந்யாசம் மட்டும் மூன்று அல்லது நான்கு நாட்கள் தொடர்ந்து நடைபெறும். உபந்யாசம் செய்கின்ற வித்வான்கள், மேற்கண்ட சுலோகத்திற்குப் பலவிதமான பொருட்செறிவுள்ள விளக்கங்களைக் கூறுவதே அதற்குக் காரணமாகும். அவ்விளக்கங்கள் லௌகீகரீதியிலும், ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தரீதியிலும் என இருவிதமாகவும் அமைவது உண்டு.

"ஹே ராமா! என்னுடைய மகளாகிய இந்த சீதா உன் வாழ்க்கையில் நீ கடைபிடிக்கின்ற தர்மத்தை அநுஷ்டிப்பதற்கு உறு துணையாக இருக்கக் கூடியவள். திருமகளாகிய இவளுடைய திருக்கரத்தை உன்னுடைய திருக்கரத்தால் பற்றிக் கொள்வதன் மூலம் இவளை உன் வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொள்வாயாக!" என்பது இந்த சுலோகத்தின் எளிய

பொருளாகும். தன்னுடைய தகப்பனார் ஜனக மகாராஜர் கூறிய இந்த வார்த்தைகளை ஜகந்மாதா வாகிய சீதாபிராட்டி எவ்விதம் உண்மையாக்கினாள் என்பதை அறியும்பொழுது நமது மனம் மிகவும் பூரிப்படைகின்றது.

சீதா பிராட்டியின் கணவராகிய ஸ்ரீராம பிரான் அறத்தின் உருவமாகவே அவதரித்தருளினார். அவர் தம்முடைய திருவவதார காலத்தில் கடை பிடித்த அறங்கள் அனைத்திலும் முக்கியமாகக் கருதியது சரணாகதி ரக்ஷணம் ஒன்றையே.

அதனால்தான், சுக்ரீவன், ஜாம்பவான் உள்ளிட்ட பலரும் எதிர்த்த பொழுதிலும் விபீஷண னுக்கு அடைக்கலம் அருளினார் ஸ்ரீராமபிரான்.

இந்நிலையில் இருக்கையில், ஸ்ரீராமபிரான் வழங்கிய அடைக்கலத்திற்கு எதிராகப் பேசியே அவ்வடைக்கலத்திற்கு உரமூட்டிய நிகழ்வு ஒன்றை இங்கே காண்போம்.

கைகேயியால் வனத்திற்கு அனுப்பப்பட்ட ஸ்ரீராமபிரான், தண்டகாரண்ய வனத்தில் இருக்கும் ரிஷிகளின் கோரிக்கையை ஏற்று, அரக்கர்களால் அவர்களுக்கு ஏற்படும் இன்னல்களைக் களைவதாக அபயம் அளித்தார். அரக்கர்களால் ஏற்படும் இன்னல்களைப் போக்குவது என்றால், அவ்வரக்கர் களை அழிப்பது என்பதே அதன் பொருளாகும்.

அனைத்து உயிர்களிடமும் எவ்விதமான பாரபட்சமுமில்லாத தாயன்பு கொண்டுள்ள சீதாபிராட்டியார் "நம்முடன் நேரடியாகப் பகை கொள்ளாத அரக்கர்களை வதைப்பதாக வாக்களிப் பது சரியல்ல" என்று ஸ்ரீராமபிரானிடம் எடுத்துரைத் தாள். மனைவியின் சொல்லைக் கேட்டு நடந்தால், தாம் வழங்கிய அபயப்பிரதானத்திலிருந்து ஸ்ரீராம பிரான் பின் வாங்குவதாக ஆகுமன்றோ?

எனவே சீதாபிராட்டியாருக்கு பதிலுரைத்த ஸ்ரீராமபிரான்,

*"அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம் த்வாம் வா*
*ஸீதே ஸலக்ஷ்மணாம்*
*ந ஹி ப்ரதிஜ்ஞாம் ஸம்ச்ருத்ய*
*ப்ராஹ்மணேப்யோ விசேஷத:"*




**திருமாலின் அவதாரங்களில் 2வது அவதாரம் கூர்ம அவதாரமாகும். தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபோது மேரு மலையைத் தன் முதுகில் பெருமாள் தாங்க வேண்டியதாயிற்று. பாற்கடல் கடைந்ததால் காமதேனு உச்சைசிரவஸ், ஐராவதம், தேவமரங்கள், அப்சரஸ் கன்னிகைகள், வருணி, சுரா தேவி தொடர்ந்து ஸ்ரீதேவியாகிய ஸ்ரீமகாலட்சுமி, சந்திரன், சிந்தாமணியுடன் கடைசியாகத் தன்வந்திரி அமிர்தத்துடன் தோன்றினார். இதை,**

*திகழ்ஒளி முந்நீர் கடைந்தக்கால் வெற்புத்*
*திகழ்பெழ வாங்கித்தம் சீர்சிரத்தேற்றி மகர மறிகடல் வைத்து நிறுத்து*

**என்று பரிபாடல் திரட்டு (1.64–66) குறிப்பிடுகின்றது.**

**காஞ்சிபுரத்திலுள்ள கச்சபேஸ்வரர் கோயில், ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயில், தூத்துக்குடி அகரம் தசாவதாரக்கோயில் ஆகியவற்றில் கூர்மவதாரப் பெருமாளை வணங்கலாம். இந்தியா வில் கூர்ம அவதாரத்துக்கென்று இருக்கும் ஒரே ஒரு ஆலயம் அருள்மிகு கூர்ம நாதர் ஆலயமாகும். ஆந்திர மாநிலம், ஸ்ரீகாகுளம் அருகே இக்கோயில் அமைந்து இருக்கின்றது.**

**– முனைவர் பிரியாகிருஷ்ணன், சென்னை, 7299587879**




“என் பிரியத்துக்குரிய சீதையே! நான் என்னுடைய உயிரை விட்டாலும் விடுவேன், உன்னையும், என் தம்பி லக்ஷ்மணனையும் விட்டாலும் விடுவேனே தவிர, இங்கே தவம் செய்யும் ரிஷிகளுக்குக் கொடுத்துள்ள வாக்குறுதியை ஒரு பொழுதும் கைவிட மாட்டேன்” என்று கூறிவிட்டார்.

ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆசிரமத்தின் ஒன்பதாவது பீடாதிபதியாக விளங்கிய திருக்குடந்தை ஆண்டவன் என்னும் ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜ மஹாதேசிகன் ஸ்வாமிகள் இது பற்றி விளக்குகையில், ஸ்ரீராமன் அபயப்பிரதானம் அருளுவதைத் தடுப்பதற்காகவன்றி, அவருடைய மன உறுதியைப் பரீக்ஷிப்பதற்காகவே சீதா பிராட்டியார் இந்த இடத்தில் ஆட்சேபம் தெரிவித்ததாக அழகுற விவரிக்கின்றார்.

“அரக்கர்களை எதிர்ப்பதன் மூலம் எல்லா விதமான சங்கடங்களும் வரக்கூடும். அவற்றையெல்லாம் எதிர் கொள்வதன் மூலமே ரிஷிகளுக்கு அளித்த அபயப்ரதானத்தை நிறைவேற்ற முடியும் என்பதை எம்பெருமானுக்கு நினைவூட்டி, அவருக்குள் ஓர் உத்வேகத்தைத் தூண்டினாள் தாயார்” என்பது பெரியோர்களின் கருத்தாகும்.

இது மட்டுமா?

ஸ்ரீராம–இராவண யுத்தம் முடிந்தபிறகு அசோக வனத்திலிருந்த சீதா பிராட்டியை அழைத்து வரச் சென்ற ஆஞ்சநேயர், “தாயே, இவ்வளவு காலம் தங்களைத் துன்புறுத்திய அரக்கிகளை அடியேனுடைய கைகளால் கொல்வதற்குத் தாங்கள் அனுமதிக்க வேண்டும்!” என்று வேண்டினார்.

அதற்கு பதிலளித்த பிராட்டி,

*“பாபாநாம் வா சுபாநாம் வா வதார்ஹாணாம் ப்லவங்கம*
*கார்யம் கருணம் ஆர்யேன ந கஸ்ச்சிந் ந அபராத்யதி”*

“ஹே வானர வீரனே! இவ்வுலகில் ஒரு பொழுதும் பாவமே செய்யாதவர்கள் என்று யாரேனும் உண்டா என்ன? எனவே, மரண தண்டனைக்குரியவராக இருந்தாலும் அவர்களைக் கருணையுடனே நடத்த வேண்டும்!” என்று கூறிவிட்டாள். இதன் உண்மையான பொருள் என்ன தெரியுமா?

ஸ்ரீராமபிரானாவது தன்னிடம் சரணாகதி அடைபவர்களுக்கு மட்டுமே அபயப்பிரதானம் அருள்கின்றார். ஆனால், அவருடைய ஸஹதர்ம சரிணியாகிய சீதா பிராட்டியோ, “அபயம் அருள்வாய்!” என்று தன்னைச் சரணம் அடையாத அரக்கிகளுக்கும் தானே முன் வந்து அபயப் பிரதானம் அளித்தருளுவதன் மூலம், ஸ்ரீராம பிரானை விட ஒரு படி மேலாகவே சிறந்து விளங்குகின்றாள்.

பொதுவாகத் திருமணம் ஆகிப் புக்ககம் செல்லும் பெண்களுக்கு அவர்களுடைய பெற்றோர்கள் பல புத்திமதிகளைக் கூறி வழியனுப்புவர். அவ்வறிவுரைகளைப் பின்பற்றி நடந்து கொள்ளும் பெண்கள் நிறைவாக வாழ்வதுடன் தங்களின் பெற்றோருக்கும் பெருமை சேர்க்கின்றனர்.

சீதாபிராட்டியோ, தன்னுடைய திருமணத்தில் மிகவும் முக்கியமான அங்கமாகிய கன்யாதானம் நிகழ்கையில் தன்னுடைய தந்தையார் ஜனகர் *‘‘ஸஹதர்மசரீ தவ!’’* என்று ஸ்ரீராமபிரானிடம் சொன்னதையே தனக்குக் கூறப்பட்ட அறிவுரையாக ஏற்றுக் கொண்டு கடைபிடித்ததன் மூலம் தன்னுடைய கணவர், தந்தை இருவருக்கும் பெருமை சேர்த்திருக்கிறாள்.

இவ்விதம், ஜகந்மாதாவாகிய சீதா பிராட்டி நம் பாரதபூமியில் பிறந்த பெண்கள் அனைவருக்கும் ஒரு சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்கின்றாள்.

*தொடர்ந்து அலசுவோம்...*



# அன்னமய்யாவின் ஸ்ரீராமபக்தி

பதகவிதாபிதாமகர் என்று போற்றப்படும் தாளப்பாக்கம் அன்னமய்யா ஒரு சிறந்த திருவேங்கடவனின் பக்தர் என்பதும், திருவேங்கடவனின் மீது ஆயிரக்கணக்கான பாடல்கள் இயற்றி உள்ளார் என்பதும் அனைவருக்கும் தெரியும். அவர் நரசிம்மர், இராமர், கிருஷ்ணர் என அனைத்து தெய்வங்கள் மீதும் அற்புதமான கிருதிகள் இயற்றியுள்ளார் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? ஸ்ரீராமர் மேல் அவர் இயற்றியுள்ள அழகான கீர்த்தனைகள் சிலவற்றை அனுபவிப்போம்.

*"ராமுடு ராகவுடு ரவிகுலடிதடு"* என்ற கீர்த்தனையில் சூரிய வம்சத்தில் பிறந்து, மனித குலத்திற்கே செல்வமாய் விளங்குபவன், சீதா தேவியின் கணவன் என்றெல்லாம் பல்லவியில் இராமனைப் புகழும் இவர் இந்தப் பாடலுக்கு மூன்று சரணங்களை இயற்றியுள்ளார்.


முதல் சரணத்தில் தசரதன் செய்த புத்ரகாமேஷ்டி யாகப் பிரசாதமான பாயசத்தால் பிறந்தவன். தேவர்களைக் காத்து அசுரர்களை அழிக்கப் பிறந்தவன் என இராமனின் அவதார காரணத்தைக் கூறுகிறார். இரண்டாவதில் யோகிகளின் இதயத் தாமரையில் எப்போதும் வசிப்பவன். அவன்தான் வேத, தத்துவ, விஞ்ஞானமனைத்துக்கும் முதல்வன். ஆதி அந்தமில்லா அவனே திருவேங்கடவனாகவும் வடிவெடுத்தவன். அனைவராலும் வணங்கப்படுபவன். ஸ்ரீராமனின் பெருமைகளை இதை விட அருமையாக எடுத்துச் சொல்ல முடியுமா!

அடுத்ததாக *"நமோ நமோ ரகுகுல நாயகா"* என்ற இந்தப் பாடலை அழகாக ஸ்ரீராகத்தில் பொருத்திப் பாடி வருகின்றனர். ரகு குலத்தின் நாயகனான ஸ்ரீராமனை வணங்குகிறேன். அவன்தான் தருமத்தைக் காப்பாற்றப் பிறந்தவன். வானத்திலேயே வாழும் தாடகை போன்ற அரக்கிகளை அழித்தவன். அகலிகையை சாபத்தில் இருந்து காப்பாற்றியவன். விஸ்வாமித்திரருடைய யாகத்தைக் காத்தவன். அவனுக்கு வணக்கம் என்று முதல் சரணத்தில் சொல்கிறார்.

சீதையைத் திருமணம் செய்து கொண்ட அவன் கர, தூஷணர்களுக்கு எதிரி. வாலியின் கர்வத்தை அடக்கி சுக்ரீவனுக்கு அபயம் அளித்தவன். கடல் நடுவே தன் இளவல் இலக்குவனுடன் சேர்ந்து பாலம் அமைத்தவன் எனச் சொல்லுகிறார்.

அடுத்த சரணம் இராவணனை அழித்து விபீஷணனை ஆசிர்வதித்தவன். தனக்கிணை இன்றி ஸாகேதபுரத்தில் வசித்தவன். திருவேங்கடவனின் தாமரை போன்ற திருக்கண்களில்





இருப்பிடம் கொண்ட அவனையே தேவர்களும், இன்னும் பார்வதியும், சிவனும் கூட ஆராதிக்கின்றனர்.

*"தேவ தேவம் பஜே"* என்ற பின்வரும் பாடலில் ஸ்ரீராமனே சிறந்த அரசன் என்றும், அசுரர்களை அழித்து தருமத்தை நிலை நிறுத்தியவன் என்றும் போற்றுகிறார். வீரத்தில் சிறந்த இராவணனை அழித்த அவனே தெய்வங்களுக்கெல்லாம் தெய்வம் என்றும் சொல்கிறார். அவன் சூரிய வம்சத்தின் சந்திரன், மிக அழகான தேகக் கட்டுடையவன், பரசுராமனின் வில்லை வளைத்தவன். நீல நிறமுடைய அவனே தாமரை போன்ற கண்களுடன் குறை இல்லாத தேகமுடையவன். அவனுடைய நாபியும் தாமரையைப் போன்றது. சர்ப்பங்களை அழிக்கும் கருடன் அவனது வாகனம். அவனே தருமத்தை நிலை நிறுத்தியவன். ஆதிசேஷன் மீது சயனித்து இருப்பவன். அவனே ஸ்ரீமந் நாராயணன். ஜனகர் வைத்து இருந்த சிவதனுசை ஒடித்து, இலங்கையை வென்று விபீஷணனுக்கு ஆறுதல் அளித்து முனிவர்களால் பூஜிக்கப்படும் வேங்கடவனும் அவனே. அன்னமய்யாவிற்கு இராமனும் வேங்கடவேனே! அவன் புகழ் பாடுவதில்தான் எத்தனை ஆனந்தப்படுகிறார்.

*"அவதாரு ரகுபதி"* என்ற ஒரு அபூர்வமான கீர்த்தனை. இதில் எவரும் வைக்காத கோரிக்கை ஒன்றை இராமனுக்கு வைக்கிறார் அன்னமய்யா. "உனக்காக சேவை செய்பவர்களை சற்றே நோக்குவாய்" என்று கேட்டு, எவரெவர் என்னென்ன சேவை செய்கிறார்கள் என்றும் எடுத்துரைக்கிறார். நாரதர் தன் கானத்தினாலும், ரம்பை போன்றோர் நாட்டியத்தினாலும், முனீந்திரர்கள் தங்கள் ஆசிகளாலும், இலக்குவன் பின்புறம் நின்று கவரி வீசியும், பரதன் முன்னால் நிற்கவும், வானரங்கள் பணிந்து உன்னைப் பார்க்கவுமாக உன்னை மகிழ்விக்கிறார்களே! ஆக, இராமனுடைய கம்பீரத்தை விவரித்தல் சாத்தியம் இல்லை என்கிறார்.

*"ஜய ஜய ராமா"* என்று ஆரம்பிக்கும் பாடலில் என்றும் வெற்றியைப் பெறுபவன், பயத்தை நீக்கிப் பக்தர்களைக் காப்பவன் என்று பல்லவியில் சொல்பவர் முதல் சரணத்தில் இலக்குவனை துணை கொண்டு சமுத்திரத்தை அடக்கிய இராமன், சுக்ரீவனைப் பாதுகாத்த அயோத்யா இராமன், சிவனின் வில்லை ஒடித்த சீதாராமன், யாகங்களைக் காத்த கௌசல்யா ராமன்" என்றும் போற்றுகிறார். இராமனின் பல பெயர்களைச் சொல்வதில் அவருக்குத்தான் என்ன ஆனந்தம்.



சூரிய வம்சத்தில் பிறந்த அவன், தன் புத்திரர்களான லவ குசர்களுக்கு மிகவும் பிரியமானவன். நற்குணங்களின் இருப்பிடம். மனுவின் வம்சத்தில் வந்த அவன் என்றும் நம் மனதில் நிற்பவன். எண்ணற்ற சக்திகளை உள் அடக்கிய அவன் என்றும் நம் உள்ளங்களில் இருப்பான். அனைவரும் போற்றும் வேங்கடவனும் அவனே என்று மூன்றாவது சரணத்தில் மீண்டும் சொல்லி முடிக்கிறார். இதைவிட சிறந்த முறையில் இராமனுடைய பெருமைகளை யாராவது உரைக்க முடியுமா.

ஸ்ரீராமபிரான் மீது அன்னமய்யா பாடியுள்ள பக்தி மிகு கீர்த்தனைகள் மூலம் அந்த ஸ்ரீராமபிரானே இக்கலியுக மக்களைக் காத்திட திருமலையில் வேங்கடவனாக எழுந்தருளி தன்னை நாடி வரும் பக்தர்களின் பாவங்களைப் போக்கி வருகின்றான் என்பதை அறிய முடிகிறது.

**– திருமதி மைதிலி சம்பத்,**
**செகந்திராபாத்,**
**81256 16876**



தெலுங்கு மூலம் :
டாக்டர் ஆ. விபீஷ்ண சர்மா, திருப்பதி
தமிழாக்கம் :
திரு. வ.ஒ. சுரேஷ், சத்திரவாடா.

கலியுக வைகுந்தமான திருமலை சேஷாசல மலையின் அடிவாரத்தில், திருப்பதி மாநகரில் வைகுந்தநாதனின் சகோதரியாக வணங்கப்படும் தாதய்யகுண்டா கங்கை அம்மன் கொலுவீற்று இருக்கின்றார். இங்கு அருள்பாலிக்கும் கங்கை அம்மனுக்கு வருடம்தோறும் சித்திரை மாதத்தில் மிகச் சிறப்பாக ஒரு வாரத்திற்கு சித்திரைத் திருவிழா நடபெறும். அதுபோது ஒரு வார காலம் திருப்பதி நகரமே திருவிழாக் கோலம் பூண்டிருக் கும்.

இத்திருவிழா எப்பொழுதிலிருந்து கொண் டாடப்பட்டு வருகின்றது என்பது அறியப்பட வில்லை. ஆனால், திருவிழாவிற்கான கதைகள் மட்டுமே கூறப்பட்டு வருகின்றன. திருப்பதி சிறு கிராமமாக இருந்தபோது இதன் தலைவராக இருந்த பாளையக்காரர் இக்கிராமத்தில் வசிக்கும் பெண்களுக்கு பல இன்னல்கள் கொடுத்து வந்தான்.

மக்கள் அனைவரும் பாளையக்காரரிடமிருந்து தங்களைக் காத்தருள அன்னையை வேண்டினர். இவர்களின் வேண்டுதல்களை ஏற்று திருப்பதிக்கு அருகில் அவிலாலா எனும் கிராமத்தில் ஆதிபரா சக்தியான அன்னை அவதரித்தாள். மக்களின் இன்னல்களைப் போக்க சர்வதிகாரியாகத் திகழ்ந்த ஊர்த் தலைவரை அழிக்க அவன் இல்லம் சென்றாள் அன்னை. அங்கு தன் சக்தி வடிவினை காட்டிட, அப்பாளையக்காரர் தன் உயிரினை காப்பாற்றிக் கொள்ள அங்கிருந்து ஓட்டம் பிடித்தான்.

அப்பாளையக்காரரை அழிக்க அவனைத் தேடி அன்னையும் ஒவ்வொரு நாளும் வெவ்வேறு வேடங்களில் சென்று தேடினார். இவ்வாறாக ஏழு நாட்களும் பாளையக்காரனைத் தேடினார். இறுதியாக திருப்பதியில் தாதய்யகுண்டா அருகில் அவனை அழித்தார். அவனை அழித்தது தமிழ் மாதமான சித்திரை மாதமாகும்.

பாளையக்காரனின் இன்னலில் இருந்து தம் கிராமத்தைக் காத்த அன்னையை இங்கேயே எழுந்தருளுமாறு மக்கள் வேண்டினர். அன்னையும் கிராமத்தினரின் வேண்டுதலுக்கிணங்கி தாதய்ய குண்டா அருகில் எழுந்தருளியதால் தாதய்ய குண்டா கங்கையம்மன் என அழைக்கப்பட்டாள். இதனை நினைவு கூறும் விதத்தில் இன்றும் சித்திரை மாதத்தில் பக்தர்கள் ஏழு நாட்கள் வெவ்வேறு வேடங்கள் பூண்டு அன்னையைத் தரிசிப்பது என்பது வெகு காலமாக நடைபெற்று வருகின்றது.



**திருப்பதி ஸ்ரீகங்கையம்மனுக்கு சித்திரைத் திருவிழாவினை முன்னிட்டு தி.தி.தே. சார்பில் வருடந்தோறும் பட்டு வஸ்திரங்கள் சமர்ப்பிக்கப் படுகின்றன. இந்த சீரானது திருவிழா நடைபெறுகின்ற வாரத்தில் சனிக்கிழமையன்று ஊர்வலமாக கொண்டு வரப்பட்டு அம்மனுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.**

திருப்பதியில் நடைபெறும் கங்கையம்மனின் இச்சித்திரைத் திருவிழாவைப் போன்று வேறு எங்கும் நடைபெறுவதில்லை என்றே கூறலாம். பெரியோர், சிறியோர், ஆண், பெண் எனும் பேதமின்றி பக்தர்கள் நாள்தோறும் ஒவ்வொரு வேடம் அணிந்து சிறிய தெருக்கள் முதல் பெரிய சாலைகள் வரை சுற்றி வந்து ஆலயத்தை அடைந்து அன்னையை வணங்குவது காண்பதற்கே கண்கொள்ளாக் காட்சியாக அமையும்.



பைராகி (நாம கட்டியால்) வேடம், பண்ட (சிவந்த வண்ணப் பொடியைப் பூசிக்கொள்ளுதல்) வேடம், தோட்டி (அடுப்புக் கரி பொடியைப் பூசிக்கொள்ளுதல்) வேடம், துரை (சந்தனப் பொடியைப் பூசிக்கொள்ளுதல்) வேடம், சுண்ணப்ப குண்ட மோசே (மண் பாண்டத்தை சுமந்துச் செல்லுதல்) வேடம், மாதங்கி (பெண் வேடம்– தலை தெரியாத வண்ணம் மல்லிகை மலர் மாலைகளைச் சுற்றிக் கொண்டு) வேடம், சப்பரால (அலங்கார சப்பரங்களை சுமந்துச் செல்லுதல்) வேடம் என ஒவ்வொரு நாளும் ஒரு வேடமணிந்து வருவர்.



கடந்த வருடம் 01–05–2023 முதல் 05–05–2023 வரை யந்திர, விக்ரஹ சிகர கலசம், ஸ்திர பிரதிஷ்டை என மகாகும்பாபிஷேகமும் மிகச் சிறப்பான முறையில் நடந்தேறியது.

அதுபோது காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீஸ்ரீஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள், விசாக ஸ்ரீசாரதா பீடாதிபதி ஸ்வரூபானந்தேந்திர சுவாமிகள், அவதூத தத்த பீடாதிபதி கணபதி சச்சிதானந்தம் சுவாமிகளும் கலந்து கொண்டனர்.

இவ்வருடம் மே மாதத்தில் கங்கையம்மனின் இந்த சித்திரைத் திருவிழா நடைபெறும். மிகச்சிறப்பாக நடை பெறும் இச்சித்திரைத் திருவிழாவில் நாமும் பங்கு கொண்டு ஸப்தகிரி வாசனாகத் திகழும் திருவேங்கடவனின் சகோதரியான கங்கை அம்மனின் திருவருளைப் பெற்றிடுவோம்.







ராஜகம்பீர வடிவில் அருளும் ஸ்ரீ நரசிம்ம மூர்த்தியைவணங்கி மகிழும் கருடபகவான் - வேலூர்

அருளும் ஸ்ரீலட்சுமி நரசிம்மர் - வேலூர்



பிரகலாதன் அன்பில் ஒளிர்ந்த ஸ்ரீநரசிம்மமூர்த்தி- வேலூர்



சிந்தை மயக்கும் விந்தை கற்சிற்பங்கள்

# அவதாரம் - சம்ஹாரம்

- படிமக்கலைஞர் திரு.ப.சரவணன், குடந்தை,
8610819456.

ஸ்ரீமந்நாராயணனின் ஸ்ரீவைகுந்த லோகத்தின் சுவர்ண வாயில்களை காவல் காக்கும் காவலர்களான துவார பாலகர்களின் பெயர்கள் ஜயன், விஜயன் என்பதாகும்.

ஒரு சமயம் இவர்கள் தங்களுடைய காவல் பணியில் ஈடுபட்டு இருந்தபோது ஸ்ரீமந்நாராயணனை தரிசிக்க வந்த சனக, சனந்தனாதி ரிஷிகளான நால்வரையும் தடுத்து நிறுத்தியதால் கோபம் கொண்ட ரிஷிகள் சாதாரண மானுடர்கள் போல் நினைத்து தங்களைத் தடுத்த ஜயன், விஜயன் ஆகிய இருவரையும் பூமியில் பிறக்கும்படி சபித்துச் சென்றார்கள். அதனை கண்டு அதிர்ச்சி அடைந்த இருவரும் ஸ்ரீவைகுந்தத்தில் இருந்த ஸ்ரீமந்நாராயணன் திருவடியில் சரணடைந்து ரிஷிகள் தந்த சாபம் நீங்க வழி ஒன்று அருளுமாறு வணங்கி நிற்க, அதற்கு பகவான் எனக்கு நண்பனாக பூமியில் நூறு ஜென்மம் வேண்டுமா? அல்லது பகைவனாக மூன்று ஜென்மம் வேண்டுமா என்று கேட்ட போது, ஜயன், விஜயன் இருவரும் சீக்கிரமாக ஸ்ரீவைகுந்தத்தை அடைய வேண்டும் என்ற ஆசையால் மூன்று ஜென்மமே போதும். தங்களுக்குப் பகைவனாகப் பிறந்த போதிலும் தங்களை மறவாது இருக்கும் பாக்கியம் இருந்தால் போதும் என்று வேண்டிக் கொண்டார்கள்.

அதன்படி ஜயன், விஜயன் முதல் பிறவியில் காசிபர் மகரிஷி, திதி தேவி தம்பதிகளுக்கு அசுர மழலைகளாகப் பிறந்தார்கள். அவர்களில் மூத்தவன் இரண்யகசிபு, இளையவன் இரண்யாட்சன் ஆவார்கள். தேவர்களையும், ரிஷிகளையும் துன்புறுத்தி ஆணவத்துடன் அசுர ராஜ்யத்தை அரசாண்ட இவ்விருவரில் ஒருவனான இரண்யாட்சனை வதம் செய்தது, பூமாதேவியை மீட்டது ஸ்ரீபூவராக (பன்றி முகம்) அவதாரமாகும். மற்றொருவனான இரண்யகசிபுவை வதம் செய்தது, தனது பக்தனான பாலகன் பிரகலாதனை (இரண்யகசிபுவின் மகன்) காத்தருளியது ஸ்ரீநரசிம்ம அவதாரமாகும்.

**இரண்டாவது பிறவியில்,**

விஸ்ரவஸ் மகரிஷி அன்னை கைகசி தம்பதிகளுக்கு இராவணனாகவும், கும்பகர்ணனாகவும் அசுர மழலைகளாகப் பிறந்து, தவம் பல புரிந்து, வரம் பல பெற்று இலங்காதிபதியாக அரசாண்டு வந்த இவர்களின் அசுர குணத்தால் யாரையும் மதியாமல் மமதையுடன் பல உயிர்களுக்கு எமனாக உலா வந்தார்கள். அதனால் ஸ்ரீமகாவிஷ்ணு தசரத சக்ரவர்த்தி கௌசல்யா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்து ஸ்ரீராம அவதாரம் எடுத்து இராவணன், கும்பகர்ணன் ஆகிய இருவரையும் வதம் செய்து இரண்டாம் பிறவிக்கு மோட்சம் அளித்தார்.

**மூன்றாவது பிறவியில்,**

சேதி நாட்டரசனான தமகோஷ மன்னன், சாத்துவதி தம்பதியின் மகன் சிசுபாலன் ஆவான். இவனின் தாயார் சாத்துவதி வாசுதேவரின் தங்கையாதலால் கிருஷ்ணனுக்கு அத்தை மகனாவான். இவன் பிறந்த காலத்தில் மூன்று கண்களும், நான்கு கரங்களுமாக விகாரமான தோற்றத்தோடு காணப்பட்டான். அதைக் கண்டு தாய் கலங்கினாள். அப்போது அசரீரீ, இந்த பிள்ளையை யார் மடியில் வைத்தால் இவனுடைய மூன்றாவது கண்ணும், அதிகமாக உள்ள கரங்களும் மறைகிறதோ அவரால் சிசுபாலனுக்கு மரணம் ஏற்படும் என்று கூறியது. அதன்படி பலர் மடியில் அவனை அமர வைத்து பார்த்து வருகையில் கிருஷ்ணன் மடியில் அமரும் சமயம் அவனது மூன்றாவது கண்ணும், அதிகமாக இருந்த கரங்களும் மறைந்தது. அதனைத் தொடர்ந்து சிசுபாலன் தாயார் தன் மகனுக்கு உயிர் பிட்சைக் கேட்க கிருஷ்ணனும் நூறு முறை அவன் செய்யும் குற்றங்களை மன்னிப்பதாகவும், அதனைத் தாண்டும் பட்சத்தில் வதம் செய்வதாகவும் வாக்கு அளித்தார்.

அதனைத் தொடர்ந்து சிசுபாலன் பலவித அக்கிரமங்களைச் செய்து வந்தான். அதனின் எண்ணிக்கை நூறைக் கடந்தது. அதைக் கண்டித்த கிருஷ்ணன் மீது சிசுபாலன் யுத்தம் தொடங்க அந்த யுத்தத்தில் சக்கராயுதத்தை ஏவி, அவனை வதம் செய்தார் கிருஷ்ண பகவான். அப்பொழுது ஒரு அதிசயம் நிகழ்ந்தது. சிசுபாலனுடைய தேகத்திலிருந்து ஒரு ஜோதி வெளிப்பட்டு வந்து கிருஷ்ணனை வலம் வந்து அவருடைய உடலில் ஐக்கியமாகி மறைந்தது.

சிசுபாலனின் மரணத்தைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த அவனது தம்பி முறை உடையவனான தந்தவக்கிரன் என்பவன் கிருஷ்ண பகவானுடன் யுத்தம் செய்ய வந்தான். அவனையும் வதம் செய்தார் கிருஷ்ணன். அதனை தொடர்ந்து தந்தவக்கிரன் தேகத்திலிருந்தும் ஒரு ஜோதி வெளிப்பட்டு வந்து கிருஷ்ணனை வலம் வந்து அவருடைய உடலில் ஐக்கியமாகி மறைந்தது. அதன் காரணம் என்னவென்றால் சிசுபாலன் முதலாவது ஜென்மத்தில் இரணியனாகவும், அடுத்த ஜென்மத்தில் இராவணனாகவும் இருந்தவன் துவார பாலகனான விஜயனாவான். அதன்படியாக அவர்கள் அடைந்த மூன்றாவது ஜென்ம பூலோக வாசம் முடிந்து விட்டபடியால் அவர்களுடைய ஆன்மா கிருஷ்ண பரமாத்மா விடம் ஐக்கியமாயிற்று. இத்துடன் இவர்களின் சாபம் நிவர்த்தி அடைந்தது. மீண்டும் பரமபத வாசல் காவல் பணிக்கு திரும்பினார்கள் என்பது ஸ்ரீமத் மஹாபாகவத புராணமாகும்.

ஜயன், விஜயன் ஆகிய இருவரின் வேண்டுதலுக்குச் செவி சாய்த்து ஸ்ரீவராகர், ஸ்ரீநரசிம்மர், ஸ்ரீராமர், ஸ்ரீகிருஷ்ணர் என நான்கு அவதாரங்கள் எடுத்து அவர்களை சம்ஹாரம் செய்து மோட்சம் நல்கிய ஸ்ரீமந்நாராயணன் மற்ற மூன்று அவதாரங்களை விட நரசிம்ம ஸ்வாமி அவதாரத்தில் மிக மிக உக்கிரமாக வெளிபட்ட மூர்த்தி ஆவார். ஆனாலும் பாலகனின் அன்புக்கு (பக்தர்களின் பக்திக்கு) சிற்ப வடிவங்கள் பல தென்னிந்திய திருக்கோயில்கள் முழுவதும் நிறைந்துள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது.



திருவிடந்தை

சங்கு சக்கரம் ஏந்திய தசபுஜங்களுடன்
ஸ்ரீ ஹிரண்ய சம்ஹார நரசிம்மமூர்த்தி- ஸ்ரீரங்கம்



பின் கரங்களில் சங்கு , சக்கரம் ஏந்தி,
முன் இரு கரங்களில் ஜ்ஞான முத்ரையுடன்
அருளும் ஸ்ரீ நரசிம்மமூர்த்தி - மாடம்பாக்கம்



# யானைமலை நரசிங்கப் பெருமாள்

– திரு.சி. ஸ்ரீரங்கம், திருச்சி, 98654 17982.

தமிழ்நாட்டில் மதுரை நகரிலிருந்து மேலூர் செல்லும் சாலையில் 8 கி.மீ. தொலைவில் ஒத்தக் கடை அருகே நரசிங்கத்தில் யானைமலை அடிவாரத்தில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது யோக நரசிங்கப் பெருமாள் கோயில். இது குடவரை கோயிலாகும். சமணம் சைவம் வைணவ சமயத்தவரின் வழிபாட்டுத் தலங்கள் ஒருங்கே அமைந்த சமயச் சிறப்பு வாய்ந்தது.

இந்த மலையில் வைணவம் காலூன்றியது தொடர் ஆண்டு 770 காலகட்டத்தில் ஆகும். அப்போதிருந்து யானைமலை நரசிங்கப் பெருமாள் கோயில் சிறப்பு பெற்று விளங்குகிறது. தாமரை பூத்த பெருந்தடாகத்தின் கரையில் கோயில் அமைந்து உள்ளது.

மூலவர் நரசிங்கப் பெருமாளாகவும், தாயார் நரசிங்கவல்லித் தாயாராகவும் இங்கு கொலு வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகின்றனர்.

தாயார் சன்னதியைத் தாண்டி நரசிங்கப் பெருமாள் கோயிலுக்குள் நுழைந்தவுடன் கருட மண்டபம் காணப்படுகிறது. அடுத்து சிம்மங்களைத் தாங்கி நிற்கும் அணியொட்டிக் கால்களைக் கொண்ட பெரிய, சிறிய தூண்களைக் கொண்ட மகா மண்டபம் அமைந்து உள்ளது.

மகா மண்டபத்தை தாண்டி குடவரைக்கு முன்புள்ள சிறிய மண்டபத்திற்குச் சென்றால் யானை மலையில் யோக நரசிம்மர் கம்பீரமாக பக்தர்களுக்குக் காட்சி தருவதைப் பார்க்கலாம். யோகாசன நிலையில் கம்பீரமான காட்சி பின்னிரு திருக்கரங்களில் சங்கு, சக்கரம் திகழ, முன் திருக்கரங்களை முழங்கால் மீது வைத்தபடி காட்சி தருகிறார் யோக நரசிம்மர்.

நரசிங்கவல்லித் தாயார் தெற்கு நோக்கி திருக்கரங்களிலும் தாமரை மலர்களை ஏந்தி முன் வலது, இடது புறம் வரம் அளிக்கும் வகையில் வரத முத்திரையில் அருள் பாலிக்கிறார்.

இக்கோயிலில் கொடிமரம் இல்லாததால் உற்சவர் கோயிலுக்கு வெளியே வருவதில்லை. ஆண்டுதோறும் திருமோகூர் காளமேகப் பெருமாள் இங்கு எழுந்தருளும் போது கஜேந்திர மோட்ச திருவிழா சிறப்பாக நடைபெறும்.

கோயில் காலை 6 மணி முதல் பகல் 12 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையும் திறந்திருக்கும். தினமும் 3 கால பூஜைகளும் நடைபெறுகிறது. பக்தர்கள் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் ஒத்தக்கடை யோக நரசிம்மரை தரிசிக்கத் திரளாக வருகிறார்கள்.

மனதில் ஒரு பிரார்த்தனையை வைத்துக் கொண்டு வாரம் தவறாமல் யோக நரசிம்மரையும், நரசிங்கவல்லித் தாயாரையும் கண்ணாரத் தரிசித்து, மனதாரப் பிரார்த்தனை செய்து வந்தால் அவர்களின் பிரார்த்தனைகளை நிறைவேற்றி தந்தருள்வார்கள் நரசிங்கரும் தாயாரும் என்று சிலிர்ப்புடன் பக்தர்கள் தெரிவிக்கின்றனர்.



# पाठ : द्वात्रिंशः ஸம்ஸ்க்ருதம் அறிவோம் பாடம்-32

| | | | | | |
|---|---|---|---|---|---|
| तस्मै | = அவனுக்காக, அவனுக்கு | चलितुम् | = நகர்தல், நகர்வதற்கு | अस्तु नाम | = ஆகட்டும் போ |
| तस्मात् | = அவனால், அவனிடமிருந்து | भूत्वा | = ஆகி (அவனாகி) | यच्छति | = கொடுத்துக்கொண்டிருக்கிறான் |
| तेभ्यः | = அவர்களுக்காக, அவர்களால் | भवितुम् | = ஆதல், (ஆவதற்கு) | दास्यति | = கொடுக்கவல்லவன் |
| त्वत् | = உன்னால், உன்னைவிட | चलित्वा | = நகர்ந்து | कारयति | = செய்ய வைக்கின்றான் |
| मत् | = என்னால், என்னைவிட | उषित्वा | = இருந்து | | |
| भवतु नाम | = ஆகட்டும் போ | वस्तुम् | = இருத்தல், இருப்பதற்கு | | |

## வினாக்கள்

1. अहं मर्कटाय अन्नं यच्छामि।
2. त्वं तस्मै पानीयं दास्यसि किम्?
3. क्षीरं कुत्रास्ति वा?
4. बालकेभ्यः अद्य प्रातः क्षीरं कः दास्यति?
5. त्वं शीघ्रं गत्वा मम जनकं स्नानं कारय।
6. त्वं न चेत् कः कारयिष्यति?
7. गृहात् बहिः अनेके ब्राह्मणाः सन्ति।
8. तेभ्यः सर्वेभ्यः भोजनं यच्छत।
9. तव जनकाय एषः फलं यच्छतु।
10. अस्तु नाम कः यच्छति चेत्किम्?
11. तथैव भवतु।
12. अहम् अद्यैव खलु फलम् अयच्छम्।

1. குரங்குகள் மலையில் செல்கின்றன.
2. பல குரங்குகள் மரத்திலிருந்து விழுந்தன.
3. நீங்கள் எங்களோடு எதற்குச் சண்டையிடுகிறீர்கள்?
4. நாங்கள் உங்களோடு எப்போதும் சண்டையிட மாட்டோம்.
5. நீங்களே எங்களோடு சண்டையிடுவதற்கு வருகின்றீர்கள்.
6. அவர்கள் யாரும் இங்கு இல்லை.
7. அந்த மலையில் எத்தனை குரங்குகள் உள்ளன.
8. ஏதோ யார் பார்த்தார்கள்.
9. அய்யோ! அந்தப் பூனைக்குச் சிறிது பால் கொடுங்கள்.
10. இந்த வேளை நான் ஊருக்குப் போவதனால் விரைவாகச் சமையலைச் செய்யுங்கள்.
11. முதலில் நீங்கள் நீரை எடுத்து வந்தால் நான் சமையலைச் செய்ய முடியும்.
12. அந்த பிராமணர்களை நல்ல நீரை எடுத்து வரச்சொல்.

## விடைகள்

1. நான் குரங்கிற்காக அன்னம் கொடுத்துக் கொண்டிருக்கிறேன்.
2. நீ அவனுக்குத் தண்ணீரைக் கொடுப்பாயா?
3. பால் எங்குள்ளது?
4. சிறுவர்களுக்காக இன்று காலை பால் எவன் கொடுப்பான்?
5. நீ உடனே போய் என்னுடைய தந்தையைக் குளிப்பாட்டு.
6. நீ இல்லையென்றால் எவன் செய்விப்பான்?
7. வீட்டின் வெளியே பல பிராமணர்கள் இருக்கிறார்கள்.
8. அவர்கள் அனைவருக்கும் சாப்பாடு கொடுங்கள்.
9. உன்னுடைய தந்தைக்கு இந்தப் பழத்தைக் கொடு.
10. ஆகட்டும் போ யார் கொடுத்தால் என்ன?
11. அப்படியே ஆகட்டும்.

1. मर्कटाः पर्वतेषु गच्छन्ति।
2. बहवः मर्कटाः वृक्षेभ्यः अपतन्
3. यूयं अस्माभिः किमर्थं युद्धं कुरुथ?
4. वयं युष्माभिः कदापि युद्धं न कुर्मः।
5. यूयमेव अस्माभिः युद्धं कर्तुम् आगच्छथ।
6. ते केपि अत्र न सन्ति।
7. तस्मिन् पर्वते कति मर्कटाः सन्ति।
8. कः दृष्टवान्?
9. अहो! तस्मै मार्जालाय क्षीरं ददतु।
10. अद्य मया ग्रामं गन्तव्यं शीघ्रं पाकं कारयतु।
11. यूयं प्रथमं जलं आनयथ चेत् अहं पाकं कारयिष्यामि।
12. तान् ब्राह्मणान् जलम् आनयन्तु इति वदत।

தெலுங்கு மூலம் : திரு. காசி கிருஷ்ணாசாரி,
தொகுப்பு : திரு.கே. ராமசூர்ய நாராயணா, தமிழாக்கம் : டாக்டர் கே.கே.ஏ.ரங்கராஜன்



# மண்ணோர்க்கும் விண்ணோர்க்கும் கண்ணானவன்

**– பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,**
**புவனகிரி, 94434 39963.**

நம்மாழ்வாரின் ஜென்ம நட்சத்திரம் வைகாசி விசாகம், குருவின் நட்சத்திரம். ஆழ்வார் லோககுரு அல்லவா. விசாகத்தின் பெருமையைச் சொல்ல முடியுமா என்ன?

மணவாள மாமுனிகள் தமது உபதேச ரத்தின மாலையில் விசாகத்தின் பெருமையைப் பேசுகிறார்.

*உண்டோ வைகாசி விசாகத்துக்கு*
*ஒப்பொருநாள்?*
*உண்டோ சடகோபர்க்கு*
*ஒப்பொருவர்? உண்டோ*
*திருவாய்மொழிக்கு ஒப்பு?*
*தென்குருகைக்குண்டோ*
*ஒரு பார்தனில் ஒக்கு மூர்?*

வைகாசி மாச விசாக நக்ஷத்திரத்திற்கு சமமாக ஒரு தினமாவது உண்டோ? நம்மாழ்வாருக்குச் சமமாக ஒருவர் உண்டோ? திருவாய்மொழிப் பிரபந்தத்துக்குச் சமமான பிரபந்தம் ஒன்று இப்புவியில் உண்டோ? இந்தப் பூமியில், தென் திசையில் இருக்கும் ஆழ்வார் திருநகரிக்குச் சமமாக ஒரு ஊர் உண்டோ?

திருவாய்மொழி ஆழ்வாரின் சரம (கடைசி) பிரபந்தம் ஆகும். பற்பல திவ்ய தேசத்து எம்பெருமான்களும் ஆழ்வாரைத் தேடிச் சென்று அருந்தமிழ்ப் பாசுரங்களைப் பெற்றதாகக் கூறுவர்.

திருவேங்கடம் விஷயமாக நம்மாழ்வாருக்கு ஈடுபாடு அதிகம். அங்கே தாயாருடன் கூடிய எம்பெருமானிடம் புகல் ஒன்றுமில்லா அடியேன் உன் அடிக்குள் அமர்ந்து புகுந்தேனே என்று தீர்க்க சரணாகதி செய்கிறார். நம்மாழ்வாரின் திருவாய்மொழி துவய மந்த்ரார்த்தத்தைக் கூறுகின்றது.

துவய மந்திர அர்த்தம் என்பது தீர்க்க சரணாகதிதான். அதை அனுஷ்டித்துக் காட்டியவர் நம்மாழ்வார். ஆகையினால் நம்மாழ்வாருக்கு திருவேங்கடம் மீது மிக அதிக ஈடுபாடு உண்டு. அதில் ஒன்றாம் பத்து எட்டாம் திருவாய் மொழியில் ஓடும் புள்ளேறி என்ற அற்புதமான திருவாய்மொழியில் ஓர் அழகான பாசுரம்.

*கண்ணா வானென்றும் மண்ணோர் விண்ணோர்க்கு*
*தண்ணார் வேங்கட விண்ணோர் வெற்பனே.*

இனி பதவுரை காண்போம்.

மண்ணோர் – மண்ணுலகத்தார்க்கும், விண்ணோர்க்கு – விண்ணுலகத்தார்க்கும், என்றும் – எப்போதும், கண் ஆவான் – கண்ணாயிருப்பவன், (அவன் யார் தெரியுமா?) தண் ஆர் – குளிர்ச்சி நிறைந்த, வேங்கடம் – திருவேங்கடமென்கிற பெயரை உடைய, விண்ணோர் வெற்பன் – நித்யசூரிகட்கிடமான திருமலையையுடையவன்.

“விண்ணோர்க்கு” என்றும், “விண்ணோர் வெற்பனே” என்றும் விண்ணோர் பதத்தை இரண்டு முறை ஆழ்வார் பயன்படுத்தி இருக்கிறார்.

பொதுவாக பூமிக்கு மேல் உள்ள உலகங்கள் விண்ணுலகங்கள் என்று வழங்கப்படும். அதிலே தேவர்கள் உண்டு. முனிவர்கள் உண்டு. அதற்கும் மேலே நித்திய சூரிகள் உண்டு. இவர்கள் அனைவரும் எம்பெருமானைத் தேடி விண்ணில் இருந்து கீழே மண்ணுக்கு வருகின்றார்களாம். காரணம், எம்பெருமான் மண்ணுலகத்தில், திருவேங்கடத்தில் அல்லவா வந்து நிற்கின்றான்.

மேலுள்ளவர்கள் சிறிது தூரம் பயணமெடுத்து வந்து சேரும் படியாய், கீழுள்ளவர்களும் சிறிது தூரம் சென்று சேரும்படியாய் *''தானோங்கி நிற்கின்றான் தண்ணருவி வேங்கடமே, வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு''* (நான்முகன் திருவந்தாதி), என்கிறபடியே இருதலையார்க்கும் நிதியாகவுள்ள திருவேங்கடமலையில் சந்நிதி பண்ணியிராநின்றான்.

உரையாசிரியர்கள் விண்ணோர்களை நித்ய ஸூரிகள் என்றும், மண் உலகத்தில் உள்ளவர்களை சம்சாரிகள் என்றும் குறிப்பிடுகிறார்கள். மண்ணுலகத்தில் உள்ள ஆயிரக்கணக்கான சம்சாரிகள் அவரைக் காண தினசரி மலையேறிச் சென்று அவனை தரிசிக்கின்றார்கள்.

கீழே உள்ள சம்சாரிகள் மலையேறவும், மேலே உள்ள விண்ணோர்கள் கீழே இறங்கி வரவும் பொதுவான இடமான திருவேங்கடத்தில் அவன் எழுந்தருளி இருக்கின்றான்.

இதனை உரையாசிரியர் ஓர் அழகான உவமை கொண்டு விளக்குகின்றார். ஒரு தாய்க்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. ஒரே நேரத்தில் பிறந்த அந்தக் குழந்தைகளை அவள் மாறுபாடு இன்றி கவனிக்க வேண்டும். ஒரு குழந்தையைப் புறக்கணித்து விட்டு இன்னொரு குழந்தையைக் கவனிக்க முடியாது. தாய்ப்பால் கொடுக்கும் பொழுது இரண்டு குழந்தைகளையும் அணைத்து முலை கொடுப்பாள். அதற்காக தனது வலது பக்கத்தில் ஒரு குழந்தையையும், இடது பக்கத்தில் ஒரு குழந்தையையும் வைத்துக் கொள்வாள், நடுவில் அவள் இருப்பாள்.

அதைப்போல எம்பெருமான் நடுவில் இருக்கின்றானாம். மண்ணுலகத்துக் குழந்தைகளும், விண்ணுலகத்துக் குழந்தைகளும் என இரு குழந்தைகளும் இணைந்து தாய்ப்பாலை அனுபவிப்பது போல, அவனுடைய அமிர்தமயமான கருணையை அனுபவிக்கின்றார்களாம். இரண்டு குழந்தைகளுக்கும் தாய் கண்ணாக இருப்பது போல நித்திய சூரிகளுக்கும், சம்சாரிகளுக்கும் கண்ணாக இருக்கின்றான். "விண்ணோர் தாம் பரவும் வேதியன் அவன் கண்ணாவான்'' என்பது பல கோணத்தில் சிந்திக்க வேண்டிய சொல். கண் என்ற சொல்லுக்கு விழி என்ற பொருள் உண்டு. அவன் தன் விழிகளால் எல்லாவற்றையும் காண்கிறான். அதனால்தான் உன் விழி என்மேல் விழாதா என்று பிரார்த்திக்கிறோம்.

கண்ணுக்குக் கண்ணோட்டம் என்று ஒரு பொருள் உண்டு. கண்ணின்று பெயர்ப்பினும் என்பது தொல்காப்பியம். "கண்ணாவான்" என்பதை, பெயர்ச் சொல்லாகவுங்கொள்ளலாம். வான் விகுதி பெற்ற வினையெச்சமாகவுங்கொள்ளலாம். பெயர்ச் சொல்லாகக் கொண்டால் "கண்ணாயிருப்பதற்காக" என்றபடி – *''சக்ஷுர் தேவநாமுத மாத்யானாம்''* என்கிற வேத வாக்கியத்தை மொழி பெயர்ப்பன போலுள்ளன முதலிரண்டடிகள் வியாக்கியானம்.

*மங்களம் கோஸலேந்த்ராய*
*மஹநீயகுணாத்மனே।*
*சக்ரவர்த்திதனூஜாய*
*ஸார்வபௌமாய மங்களம் ॥*

**கௌசலை செல்வனும், சிறப்புமிகு குணமுடையவனும், சக்கரவர்த்தி திருமகனும், மாமன்னனுமாகிய இராமனுக்கு மங்களம்.**



**மங்கள சுலோகங்கள்**




*ஒன்றென்று இரு; தெய்வம் உண்டென்று இரு;*
*உயர்செல்வமெல்லாம்*
*அன்றென்று இரு; பசித்தோர் முகம் பார்;*
*நன்றென்று இரு; நடுநீங்காமலே நமக்கிட்டபடி*
*என்றென்று இரு; மனமே! உனக்கே உபதேசம் இதே!*

– பட்டினத்தார்

பொருள் : மனமே! உனக்கு ஒரு உபதேசம் சொல்கிறேன். கேள்! தெய்வம் ஒன்று என்று இரு! அதாவது எல்லாத்தெய்வங்களும் ஒன்றே என்பதை அறிக! அத்தெய்வம் என்றும் உண்டு என்று நம்பியிரு! உயர்ந்த செல்வங்கள் நிலையில்லாதவை என்று இரு! பசித்தவர் முகத்தை இரக்கத்தோடு பார்த்து அவர்களுக்கு உன்னால் இயன்ற அளவு அன்னதானம் செய்! நல்ல தர்மமும், நல்ல நட்பும் என்றும் நன்மை தரும் என்று உறுதி கொண்டிரு! நடுநிலை தவறாமல் நாம் செய்த வினைக்குத் தக்கவாறு, இறைவன் விதித்தபடி, இவ்வளவு கிடைத்ததே என்று திருப்தியாய் இரு.

வாழ்க்கைக்கான கருத்து : வேதங்கள் எல்லாம் “கடவுள் ஒருவனே” என்று அறுதியிட்டு உரைத்தலால், அதை உணர்ந்து வழிபாடு செய்ய வேண்டும். நல்ல தர்மம் செழிக்க அறவழி நின்று, நல்ல நட்பைக் கொண்டு நல்லறம் செய்ய வேண்டும். நமது வாழ்க்கைக்குக் கிடைத்த மட்டில் திருப்தி அடைவதே அருள் வழி நிற்பதாகும். இவற்றைக் கடைபிடித்தால் இறையருள் எளிதாகக் கிட்டும் என்பதாம்.

*-தொகுப்பு :முனைவர் ச.செந்திலாண்டவன், சென்னை*

கண் என்ற சொல்லுக்கு இடம் என்று பொருள் உண்டு. எல்லா இடத்திலும் பரவி இருக்கிறான். எங்கும் உளன் கண்ணன் என்று நரசிம்மவதாரத்தை ஆழ்வார் குறிப்பிடுகிறார்.

*“எங்கும் உளன் கண்ணன் என்ற மகனைக் காய்ந்து*
*இங்கு இல்லையால் என்று இரணியன் தூண்புடைப்ப*
*அங்கு அப்பொழுதே அவன் வீயத் தோன்றிய என்*
*சிங்கப்பிரான் பெருமை ஆராயும் சீர்மைத்தே?”*

திருமால் எங்கும் எப்பொழுதும் எல்லாப் பொருள்களிலும் உள்ளும் புறமும் வியாபித்து இருக்கிற உண்மையை கண் என்ற சொல் காட்டுகிறது. கண்ணுக்கு அருள் என்ற பொருளும் உண்டு.

திருவேங்கடமுடையான் தன் விழியால் அருள் தரவே குளிர்ச்சியான வேங்கடமலை மேல் நிற்பவன். *‘‘தண்ணார் திருவேங்கடம்’’* என்பது அருமையான சொல் குளிர்ச்சி நிறைந்த வேங்கடம் என்று பொருள்.

எதற்காக இந்தக் குளிர்ச்சி? எப்படி ஏற்பட்டது? குளிர்ச்சிக்கு காரணம் மலையை மேகங்கள் தழுவிச் செல்கின்றன. நிறைய மரங்கள், அருவிகள், மலைகள் இருக்கின்றன. எனவே குளிர்ச்சி இயல்பாக இருக்கிறது. இது வெளிப்படையான காரணம்.

ஆனால், அங்கே எல்லோருடைய தாபத்தையும் (மன வெப்பத்தையும்) தீர்க்கக் கூடிய குளிர்ச்சி பொருந்திய அருள் விழிகளோடு கூடிய எம்பெருமான் எழுந்தருளியிருக்கின்றான்.

அதனால்தான் சம்சாரிகள் தங்களுடைய வெப்பத்தைத் தீர்த்துக் கொள்ள திருமலைக்குச் செல்கிறார்கள். நித்திய சூரிகள் எம்பெருமானைப் பிரிந்ததால் ஏற்படும் தாபத்தைத் தீர்த்துக் கொள்ள திருமலைக்கு வருகின்றார்கள்.

எனவே விண்ணோர்க்கும் மண்ணோர்க்கும் தாபத்தைத் தீர்க்கும் மலையாக திருமலை

இருக்கிறது. இதில் இன்னொரு நுட்பமும் உண்டு. பகவான் தன்னை தரிசிக்க வருகின்ற சம்சாரிகளையும், நித்ய சூரிகளையும் பார்த்து குளிர்ச்சியோடு இருக்கின்றானாம். அதனால் குளிர்ச்சி பொருந்திய திருவேங்கடமாக இருக்கிறது.

இன்னொரு நுட்பமும் உண்டு. நாம் ஒருவரை நம்முடைய கஷ்டம் தீர சந்திக்க இருக்கின்றோம். அவரைச் சந்தித்தவுடன் நம் உள்ளம் குளிர்கிறது. கஷ்டம் தீருகின்றது. அதைப் போல நம்மைப் பார்த்தாலும் நம்முடைய கஷ்டத்தைத் தீர்த்தாலும் எம்பெருமானுடைய உள்ளமும் குளிர்கிறது.

எனவே இரண்டு உள்ளங்களும் குளிர்ந்த இடமாக திருவேங்கடம் இருக்கிறது என்றும் நயம் சொல்லலாம். அடுத்து அங்கே இருக்கக்கூடிய மலைகள் அருவிகள் என ஒவ்வொரு பொருளும் நித்ய சூரிகளைக் குறிக்கும். அவர்கள் பகவானை சதாசர்வ காலமும், ஸதா பச்யந்தி என்று பார்ப்பதாலும், பகவான் அவர்களைக் கடாக்ஷிப்பதாலும் திருவேங்கடம் தண்ணார் திருவேங்கடமாக இருக்கின்றது.

அந்தத் திருவேங்கடம் நமக்கெல்லாம் கண்ணாக இருக்கின்றது.

பாசுரம் அறிவோம்...

தி.தி.தே.

## ஸ்ரீவேங்கடேஸ்வரா பக்திச் சேனல்

ஸ்ரீவேங்கடேஸ்வரா பக்தி சேனலானது திருமலையின் ஏழு மலைகளின் அரசனான திருவேங்கடவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு முக்கிய ஆன்மீகச் சேனலாகும். முதன் முதலில் எஸ்.வி.பி.சி. சேனலானது தெலுங்கு மொழியில் முதன்மையாக ஒளிபரப்பப்பட்டு வந்தது. அதன் பின்னர் அண்டை மாநில மொழிகளான தமிழ், கன்னடம் மட்டுமல்லாமல் இந்தியிலும் சேனல்கள் ஏற்படுத்தப்பட்டு அந்தந்த மொழிகளிலே ஒளிபரப்பப்பட்டு வருகின்றது.







உலகம் முழுவதிலிருந்தும் பக்தர்கள் பலர் திருமலைக்கு தங்களால் செல்ல இயலவில்லையே எனும் மனக்குறை இல்லாமல் திருமலையப்ப ஸ்வாமியே தமது இல்லத்திற்கு வந்து அருள் புரியும் விதத்தில் திருமலையில் நடக்கும் நிகழ்ச்சிகளை நேரலையாக காணும் வாய்ப்பினை தி.தி.தே.வின் எஸ்.வி.பி.சி. சேனல் நமக்கு அளிக்கிறது.

இந்தச் சேனலில் நேரலை ஒளிபரப்பு மட்டுமின்றி சனாதன கலாச்சாரத்தின் ஒரு அங்கமான இசை, நடனம், நாட்டியம், நாடகம், சமயக் கருப்பொருள்கள் அடங்கிய தொடர்கள், நமது திருத்தலம் என்ற வரிசையில் இதர ஆலயங்களின் விவரங்கள் போன்றவற்றோடு, திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயம், திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஆலயம் மற்றும் தி.தி.தே. ஆலயங்களில் நடைபெறும் சிறப்பு நிகழ்வுகளையும் நேரலையாகவோ, தொகுப்பு நிகழ்ச்சிகளாகவோ காட்சியமைத்து ஒளிபரப்பி வருகின்றது.

# வைணவக்குறுக்கெழுத்துப் புதிர் -94

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | 2 |
| | | | | | | | | | | | 3 |
| | | | 4 | | 5 | | | | | | |
| | | | | | | 6 | | | | | |
| | | | | | | | | | 7 | | |
| | | | | | | 8 | | | | | |
| | | | | | | 9 | | | | | |
| | | | | 10 | | | 11 | 12 | | | |
| 13 | | | | 15 | | | | | | 14 | |
| | | 15 | | | | | | | | | 16 |
| | 17 | | | | | | | | | | 18 |

தொகுப்பு : திரு.டி.ஆர், மனோகர், தஞ்சாவூர், 99426 44807

புதிருக்கு விடை அறிய 26ம் பக்கம் பார்க்கவும்...

### இடமிருந்து வலம்

1. திருமால் எடுத்த நரசிம்ம அவதார வரிசை.......(9)
4. ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாசன் திருக்கல்யாணத்தின் போது ....(9) ருக்கு உணவு நிவேதனம் செய்யப்பட்டது.
6. நரசிம்ம அவதாரம் நிகழ்ந்த தமிழ் மாதம்....(6)
8. அகோபில க்ஷேத்திரத்தின் மற்றொரு பெயர்....(5) குன்றம்.
9. நாகப்பட்டிணத்தில் அருள்பவர்....(5) நரசிம்மர்
11. அகோபில க்ஷேத்திரத்தில்....(2) நரசிம்மர்கள் அருள்கின்றனர்.
12. சிம்மாசலத்தில் நின்ற திருக் கோலத்தில்....(3) நரசிம்மர்.
13. திருநீர்மலையில் அமர்ந்த திருக்கோல...(3) நரசிம்மர்.

### வலமிருந்து இடம்

2. கம்ப ராமாயணத்தை ஆமோதித்த ஸ்ரீரங்க நரசிம்மர்....(11)
3. ஆந்திர மாநிலம் அகோபிலத்தில் உள்ள மூர்த்தி.....(10)
7. சோளசிங்கபுரத்தில் உள்ள கிடைத்தற்கறிய பழமான யோக நரசிம்மர்.....(6)
14. நரசிம்ம மூர்த்தியால் வதம் செய்யப்பட்டவர்.....(7)
16. மகாலட்சுமித் தாயாரை மடியில் அமர்த்தியுள்ள அகோபில மூர்த்தி....(9)
18. மதுரையில் அருள்பவர்....(10) பெருமாள்.

### மேலிருந்து கீழ்

1. இரண்யகசிபுக்கு வரம் வழங்கியவர்....(9)
4. சென்னை திருவல்லிக்கேணியில் அருளும் பிரான்.....(8)
5. நரசிம்ம மூர்த்தியின் அருளை முதலில் பெற்றவர்...(6)

### கீழிருந்து மேல்

10. நரசிம்ம பகவான் ஜனித்த நட்சத்திரம்....(3)
15. இரண்யனை வதைத்து அகோபிலத்தில் அமர்ந்தவர்..(9)
17. பிரகலாதனுக்கு யோகம் கற்பித்த மூர்த்தி....(11)
18. நரசிம்ம மூர்த்திக்கு சுவாமி தேசிகன் அருளியது....(8)

## 2024, ஜூன் மாதப் பண்டிகைகள் மற்றும் பருவ தினங்கள்

| | |
|---|---|
| 01 | ஹனுமத் ஜெயந்தி |
| 02 | கார்வேடி நகரம் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி கருட சேவை |
| 16-25 | அப்பளாயகுண்ட்டா ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 17-21 | திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் தெப்போத்ஸவம் |
| 19-21 | திருமலையப்ப ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம் |
| 27-29 | திருச்சானூர் ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமி அவதாரோத்ஸவம் |



# பதஞ்சலியின் யோக சூத்திரங்கள்

- திரு.எம்.எஸ்.சுகுமார்,சென்னை, 8838252312.

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

**சூத்திரம் 50 :** *“தஜ்ஜ: ஸம்ஸ்காரோ அன்யஸம்ஸ்கார ப்ரதிபந்ததீ:”*

சித்தத்தை தூய்மைபடுத்திய பின் தியானப் பயிற்சியைத் தொடர்ந்து செய்தால் ரிதம்பரா பேரறிவு உதயம் ஆகும்போது அனைத்துலக ஞானமும், சத்தியத்தை உணர்ந்த பின் சுகம் தரும் விஷயங்களும் துன்பமயமானவை என அறிந்த பின் வைராக்கியம் உண்டாகிறது. ஆசைகளை முற்றிலும் ஒழித்து பகையும் சித்தத்தில் அறவே ஒழிந்து விடுவதால் மோட்சத்திற்கு தகுதியைப் பெறுகிறது.

**சூத்திரம் 51 :** *“தஸ்யாபி நிரோதே ஸர்வ நிரோதான் நிர்பீஜ: ஸமாதி :”*

ரிதம்பரா ப்ரக்ஞாவின் ஆற்றலால் சித்தத்தில் இருந்த சமஸ்காரங்கள் முற்றிலும் ஒழிந்து பின் கர்வத்தால் உண்டாகும் அகங்காரமும், பற்றும் அழிந்து போகும். மீண்டும் பிறப்பிற்கு வித்திடும் எல்லாவித ஆசைகள், பற்று, பகை சித்தத்தில் இல்லாமல் துடைக்கப்படுவதே “நிர்பீஜ சமாதி” சித்தியாகும்.

**சமாதி பாதம் நிறைவு பெற்றது.**

## சாதன பாதம் - 55 சூத்திரங்கள்

சாதன பாதத்தில் ஆரம்பப் படியிலிருந்து கிரமமாக யோக பயிற்சி செய்யப்போகும் சாதகன் எப்படி நடந்து கொள்ள வேண்டும், எந்த நியமங்களைக் கடைபிடிக்க வேண்டும் என்பதை கூறுகிறார்கள்.

**சூத்திரம் 01 :** *“தப: ஸ்வாத்யாயேச்வர ப்ரணிதாணிதானானி க்ரியா யோகம்”*

தவம், ஸ்வாத்யாயம், ஈசுவரபிரணிதானம் இவை மூன்றும் சேர்ந்தது “கிரியா யோகம்” எனக் குறிப்பிடுகிறார்கள். நான் என்கிற அகந்தையை விட்டொழித்து, அன்றாடக் கடமைகளைச் சரிவர செய்து, விரதங்கள், நாம ஜபம் இவையெல்லாம் தவம் ஆகின்றன. ஸ்வாத்யாயம் நல்ல அறநூல்கள் வேத சாஸ்திரம் இஷ்ட தெய்வ வழிபாடு ஈசுவரபிரணிதானம் – தன்னையே அர்ப்பணம் செய்து ஈஸ்வரனை சரணடைவது யம நியமாதியில் அடக்கம்.

**சூத்திரம் 02 :** *“ஸமாதி பாவணார்த்த: க்லேசதனூகரணார்த்தஷ்ச”*

இந்த கிரியா யோகம் சமாதி சித்தி அடைய துணையாக இருக்கிறது. அவித்யா முதலிய கிலேசங்களை அழிக்க காரணமாக உள்ளது. அதனால் மோட்ச நிலை வரை கொண்டு போக வல்லதாக இருக்கின்றது.

**சூத்திரம் 03 :** *“அவித்யாஸ்மிதா ராகத் வேஷாபிநிவேசா: க்லேசா:*

அவித்யா, அஸ்மிதா, ராக, துவேஷ, அபிநிவேச என்ற ஐந்து கிலேசங்கள் ஜீவாத்ம புருஷனை ஜனன மரண சூழலில் சிக்க வைக்கும் செயல்களாகும். மகா துக்கத்தை தருவதால் இதனை “கிலேசங்கள்” என்பார்கள்.

**சூத்திரம் 04 :** *“அவித்யா க்ஷேத்ரமுத்தரேஷாம் ப்ஸுப்ததனு விச்சின்னோதாராணாம்”*

அவித்யா முதலிய கிலேசங்கள் நான்கு நிலைகளைப் பெறுகின்றது. 1) பிரஸுப்த – சித்தத்தின் அடிதளத்தில் அந்த கிலேசங்கள் தூங்கும் நிலையில் உள்ளன. 2) தனு– யோக சாதனையின் பயிற்சியாலும், தியானத்தாலும் அந்த கிலேசங்கள்

பலவீனப்பட்டு கஷ்டத்தைக் கொடுக்கச் சக்தியற்று இருக்கும். 3)விச்சின்ன – ஒரு கிலேசம் மேலோங்கி, ஒரு கிலேசம் அமுக்கப்பட்டு விடும். 4) உதாரம் – எந்த கிலேசம் அனுபவத்தில் பலனைத் தரு கின்றதோ அந்நிலையை உதாரம் என்று கூறுகிறார்கள்.

**சூத்திரம் 05 : *''அநித்யாசு சிதுக் கானாத்மஸ<sup></sup> நித்ய சுசி - ஸுகாத்மக்யாதிர வித்யா''***

தூய்மை இல்லாத, நிலையற்ற, துக்கமயமான ஆத்மாவை விட்டு வேறு பட்ட வஸ்துக்களில் – தூய்மை உள்ள தாக, நித்தியமானதாக, சுகமுள்ளதாக அதுவே ஆத்மா என்று நினைப்பது அவித்யா அல்லது அஞ்ஞானமாகும்.

இந்த தூய்மையற்ற ஜட சரீரம் ஆத்மா இல்லை என்பதே 100 சதவிகித உண்மை ஆகும்.

**சூத்திரம் 06 : *''த்ருக்தர்சன சக்த்யோரேகாத்மதேவாஸ்மிதா:''***

பார்வையில் இருக்கும் சக்தியும், காணப்படும் காட்சியும் ஒன்று என்று உணரும்போது அஸ்மிதா என்ற பொய் ஞானம் உண்டாகிறது.

சாதகன் யோகப் பயிற்சி மூலமாக அவித்யாவை நாசப்படுத்தி அஸ்மிதா என்ற அஞ் ஞானத்தையும் அழிக்க வேண்டும். அதன்பின் மோட்ச நிலை கிட்டும்.

**சூத்திரம் 07 : *''ஸுகானுசயீராக:''***

உலக சிருஷ்டியில் மனிதன் தனக்கு அனுகூலமாக அல்லது தன் விருப்பத் திற்கு ஏற்ற பொருள் கிடைக்கும் போது அதில் பற்றுக் கொண்டு சந்தோஷத்தை யும், சுகத்தையும் அடையும் போது அதுவே “பற்று ராகம்” எனப்படுகிறது. அந்த “பற்று ராகம்” கிடைக்காவிட்டால் அது கிலேசமாக மாறுகிறது.

**சூத்திரம் 08 : *''துக்கானுசயீ த்வேஷ:''***

மனிதனுக்கு தன் விருப்பத்திற்கு மாறாக நடக்கும்போது கோபமும், துவேஷமும் ஏற்படுகிறது. துவேஷத்தினால் பகை உண்டாகிறது. இறுதியில் துவேஷம் கிலேசமாக மாறுகிறது.

**சூத்திரம் 09 : *''ஸ்வரஸவாஹி விதுஷோ அபி ததாரூகே புபிநிவேச:''***

இயற்கையாகவே மனிதன் உட்பட சகல ஜீவராசிக்குள்ளும் பயம் என்ற ஒன்று குடிகொண்டுள்ளது. மனிதனுக்குப் பல விஷயங்கள் பயத்தின் காரணங்களாகின்றன. மனிதனுக்கு அவன் நலமாகயிருக்கும் சித்தத்தின் அடிதளத்தில் மரண பயம் குடிகொண்டிருக்கிறது. ஞானத்தில் பக்குவப்படாதவனுக்கும் மனத்தில் பயம் இருக்கத்தான் செய்யும். இது காலம் காலமாக தொடர்ந்து வருவதால் இதை அபிநிவேசம் என்பார்கள்.

**சூத்திரம் 10 : *''தே ப்ரதிப்ரஸவஹேயா: ஸுக்ஷ்மா:''***

கிரியா யோகத்தாலும், தியான யோகத்தினாலும் படிப் படியாக பெரியதாக இருந்த கிலேசங்கள் சூட்சுமமாகி குன்றிப் போகும். இறுதியில் காண்பவனுக்கு (ஆத்மாவுக்கும்) காட்சி யாக விளங்கும் சித்தத்திற்கும் தொடர்பு இல்லாமல் போகும். போனவுடன் கிலேசங்கள் முற்றிலும் அழிந்து போகும்.

*சூத்திரம் தொடரும்....*

## வைணவக்குறுக்கெழுத்துப்புதிர் 94க்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 நா | ன் | கா | ம் | அ | வ | தா | ர | ம் | | | |
| ன் | ர் | க | ங் | சி | ய | கி | ழ | அ | டு | ட் | 2 மே |
| மு | ம | ர் | ம | ம் | சி | ர | ந | ர | க் | யா | 3 வி |
| க | ம் | ம | 4 அ | கோ | 5 பி | ல | ந | ர | சி | ம் | ம |
| க் | சி | ம் | ழு | | ர | 6 வை | கா | சி | மா | த | ம் |
| க | ர | சி | கி | னி | க | ர | கா | க் | 7 அ | | க |
| ட | ந | ர | ய | தி | லா | 8 சி | ங் | க | வே | ள் | ட |
| வு | த | ந | சி | வா | த | 9 அ | ஷ் | ட | பு | ஜ | ஷ் |
| ள் | ந் | லா | ங் | 10 சு | ன் | | 11 ந | 12 வ | ரா | ஹ | கா |
| 13 சா | ன | வா | க | பு | சி | க | ய | ண் | ர | 14 இ | ஸி |
| ந் | கா | 15 ஜ் | ர் | ம | ம் | சி | ர | ந | ல | லோ | 16 மா |
| த | 17 யோ | ப் | க | ங் | சி | ய | கி | ழ | ட | ட் | 18 கா |



# ஐச்வர்யம் பெருக ஸ்ரீகனகதாரா ஸ்தோத்திரம்

**இயற்கை எழில் நிறைந்த கேரள மாநிலம், காலடியில் பிறந்த ஆதி சங்கரர் தமக்கு நெல்லிக்கனியை அன்புடன் பிக்ஷையிட்ட பெண்மணியின் வறுமை நீங்கிட, "கனகதாரா ஸ்துதி"யை துதித்து மகாலக்ஷ்மித் தாயாரின் அருளால் பொன் மழையைப் பெய்வித்தார்.**

*அங்கம் ஹரே: புலக பூஷண மாஸ்ரயந்தீ*
*ப்ருங்காங்கநேவ முகுலாபரணம் தமாலம் |*
*அங்கீக்ராதாகில விபூதி ரபாங்கலீலா*
*மாங்கல்யதாஸ்து மம மங்கள தேவதாயா: ||*

மகாலக்ஷ்மித் தாயே! தாங்கள் ஸ்ரீமந்நாராயணனின் அங்க சௌந்தர்யத்தைப் பார்த்து சந்தோசிப்பதற்காக, வெட்கத்துடன் கடைக்கண்ணால் பார்க்கின்றீர்கள். கருவண்டு போல் கருத்ததாகவும், குளுமை பொருந்தியதாவும் இருக்கின்ற தங்களது கடைக்கண் பார்வை நீருண்ட மேகம் போல் கருத்த பகவானுடைய திருமேனியில் பட்டதும் அவரது தேகமெல்லாம் அதிக சோபை வாய்ந்ததாய் ஆகிறது. தன்னைத் துதிப்பவர்களுக்கு சகல செல்வத்தையும் கொடுப்பதில் திடமான சங்கல்பம் உள்ளதாகவும் இருக்கின்றது. அந்தக் கடைக்கண் பார்வையானது எனக்கு மங்கலத்தைக் கொடுக்கட்டும்.

*முக்தா முஹுர்விதததீ வதநே முராரே:*
*ப்ரேமத்ரபா ப்ரணிஹிதாநி கதாகதாநி |*
*மாலாத்ருஸோர் மதுகரீவ மஹோத்பலே யா*
*ஸா மே ச்ரியம் திசது ஸா கரஸம்பவாயா: ||*

மகாலக்ஷ்மித்தாயே! மலர்ந்த நீலோத்பல மலரினைப் போலுள்ள பகவானுடைய திருமுக மண்டலத்தின் அழகைப் பார்த்து சந்தோஷிப்பதற்காக தங்களால் அனுப்பப்பட்ட கடாக்ஷமானது மத்தியில் பகவானின் கடாக்ஷத்தை சந்தித்து வெட்கத்துடன் திரும்பி விடுகிறது. கொஞ்ச காலம் கழித்து மறுபடியும் பகவானின் முகத்தில் சஞ்சரிக்கின்றது. இவ்விதம் மலர்ந்த நீலோத்பல மலரின் பெண் வண்டு போல் பகவான் முகமண்டலத்தில் சஞ்சரிக்கும் தங்களுடைய அருட்பார்வையானது எனக்கு செல்வங்களை அளித்திட வேண்டும்.

*விஸ்வாமரேந்த்ரபதவிப்ரம தாநதக்ஷம்*
*ஆநந்த ஹேது ரதிகம் முரவித்விஷோஅபி |*
*ஈஷந்நிஷீதது மயி க்ஷண மீக்ஷணார்த்தம்*
*இந்தீவரோதர ஸஹோதர மிந்திராயா: ||*

மகாலக்ஷ்மித் தாயே! தங்களது கடைக்கண் பார்வையானது ஸ்ரீமந்நாராயணனுக்கு அதிகமாய் ஆனந்தத்தைக் கொடுக்கக் கூடிய நீலோத்பல மலரின் மத்யபாகம் போல் கருத்தான அந்த அருட்பார்வையானது கொஞ்ச காலம் அடியேன் மேல் விழ வேண்டும்.

*ஆமிலிதாக்ஷ மதிகம்ய முதா முகுந்த*
*மாநந்த கந்த மநிமேஷ மநங்க தந்த்ரம் |*
*ஆகேகர ஸ்தித கநீநிக பக்ஷமநேத்ரம்*
*பூத்யை பவே ந்மம புஜங்க ஸயாங்கநாயா: ||*

மகாலக்ஷ்மித் தாயே! ஸ்ரீமந்நாராயணன், தங்களது கடைக்கண் பார்வையின் அமிழ்தில் முழுகி ஆதிசேஷ தல்பத்தில் படுத்து அவரது இரண்டு திருக்கண்களும் தானாகவே மூடிக்கொண்டு விடுகின்றன. அப்பொழுது தங்களது கடைக்கண் பார்வையானது எவ்வித தடையும் இல்லாமல் இமைக் கொட்டுவதைக் கூட விலக்கி பகவானுடைய ஒவ்வொரு அவயவங்களிலும் யதேச்சமாய் சஞ்சரிக்கின்றதோ, அந்த அருட்பார்வையானது எனக்கு செல்வத்தை அளித்திட வேண்டும்.

*காலாம்புதாளி லலிதோரஸி கைடபாரே:*
*தாராதரே ஸ்புரதி யா தடிதங்கனேவ |*
*மாது ஸ்ஸமஸ்தஜகதாம் மஹநீயமூர்த்தி:*
*பத்ராணி மே திஸது பார்க்கவநந்தநாயா: ||*

மகாலக்ஷ்மித்தாயே! ஸ்ரீமந்நாராயணனின் திருமார்பில் தங்களது திருமேனியானது நீருண்ட மேகத்தில் மின்னல் போல் பிரகாசிக்கின்றதோ அந்த மங்கலகரமான தாங்கள் எனக்கு தாமதமின்றி அருள் புரிந்திட வேண்டும்.

*பாஹ்வந்தரே முரஜித: ச்ரித கௌஸ்துபே யா*
*ஹாராவளீவ ஹரிநீலமயி விபாதி |*
*காமப்ரதா பகவதோபி கடாக்ஷமாலா*
*கல்யாணமாவஹது மே கமலாலயாயா: ||*

தாயே! தங்களுடைய இந்திர நீலம் போல் கருத்த கடைக்கண் பார்வையானது கௌஸ்துபம் என்ற ரத்தினத்தால் அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீமந்நாராயணனுடைய திருமார்பில் விழுகிறது. இவ்விதம் விழுந்த கடாக்ஷங்களுடைய வரிசையானது கௌஸ்துப ரத்தினத்தை நடுநாயகமாய் இந்திர நீல ரத்தினத்தால் கட்டப்பட்ட ஹாரங்கள் போல் விளங்குகிறது. அந்த தங்களது அருட்பார்வையானது எனக்கு நற்பலன்களைக் கொடுக்கட்டும்.

*ப்ராப்தம் பதம் ப்ரதமத: கலு யத்ப்ரபாவாத்*
*மாங்கல்யபாஜி மதுமாதினி மந்மதேந |*
*மய்யாபதே த்த திஹ மந்தர மீக்ஷணார்த்தம்*
*மந்தாலஸம் ச மகராலய கந்யகாயா: ||*

மகாலக்ஷ்மி தேவியே! பயமடைந்த மன்மதன் எந்த தங்களது கடாக்ஷத்தால் ஸ்ரீநாராயணனையும் ஜயித்தானோ, மங்கலமான வஸ்துக்களுக்கும் மங்கலத்தைக் கொடுக்கும் தன்மையானது ஸ்ரீநாராயணனுக்கு எந்த தங்களது கடாக்ஷ விசேஷத்தால் ஏற்பட்டதோ அந்த தங்களுடைய அருட்பார்வையானது என்னிடம் கொஞ்சம் விழவேண்டும்.

*தத்யா த்தயாநுபவநோ த்ரவிணாம்புதாராம்*
*அஸ்மிந்ந கிஞ்சந விஹங்கஸிஸௌ விஷண்ணே |*
*துஷ்கர்மகர்ம மபநீய சிராய தூரம்*
*நாராயண ப்ரணயிநீ நயநாம்புவாஹ: ||*

மகாலக்ஷ்மித் தாயே! காற்றினால் தூண்டப்பட்ட நீருண்ட மேகம் அதிகமாய் மழையைப் பொழிந்து தாகத்தைத் தீர்த்து எவ்வித சுகத்தைக் கொடுக்குமோ அவ்விதம் தங்களுடைய அருட்பார்வையானது ஏழையான என் விஷயத்தில் தயையால் ஏவப்பட்டதாய்க் கொண்டு அதிகமான செல்வத்தினைக் கொடுத்து வெகு காலமாய் அனுபவிக்கப்பட்டு வரும் தாரித்ரிய கஷ்டத்தை விலக்கி சுகத்தைக் கொடுக்க வேண்டும்.

*இஷ்டவிஸிஷ்டமதயோபி யயா தயார்த்ர*
*த்ருஷ்ட்யா த்ரிவிஷ்டபபதம் ஸுலபம் லபந்தே |*
*த்ருஷ்டி: ப்ரஹ்ருஷ்டகமலோதரதீப் திரிஷ்டாம்*
*புஷ்டிம் க்ருஷீஷ்ட மம புஷ்கரவிஷ்டராயா: ||*

ஸ்ரீதேவியே! சாஸ்திரங்களில் சொல்லிய முறைப்படி ஆராதனம் செய்யத் தெரிந்து கொள்ளாமல், அவரவர்களுக்குத் தோன்றியபடி பூஜை செய்யும் பக்தர்களுக்கும், தயாரஸத்தால் நனைக்கப்பட்ட தங்களது அருட்பார்வையானது சுவர்க்கம் முதலான சுக போகங்களைக் கொடுக்கின்றதோ அத்தகைய மகிமை வாய்ந்ததும், மலர்ந்த தாமரை மலரினைப் போலிருப்பதுமான அவ்வழகிய அருட்பார்வையானது தனம், தான்யம், சந்தானம் முதலியவைகளில் மேன்மையடையச் செய்யட்டும்.

*கீர்தேவ தேதி கருடத்வஜ ஸுந்தரீதி*
*ஸாகம்பரீதி ஸஸிஸேகர வல்லபேதி |*
*ஸ்ருஷ்டிஸ்திதி ப்ரளய கேளிஷு ஸம்ஸ்திதா யா*
*தஸ்யை நமஸ்த்ரிபுவநைகுரோ ஸ்தருண்யை ||*

உலகங்களைப் படைக்கும் சமயத்தில் சரஸ்வதி என்ற பெயருடனும், அழிக்கும் காலத்தில் ஸாகாம்பரி என்ற பெயருடனும், பரிபாலிக்கும் சமயத்தில் லக்ஷ்மீ என்ற பெயருடனும் விளங்கி படைத்தல், காத்தல், அழித்தல் என்ற லீலைகளைச் செய்து கொண்டு இருக்கிறாளோ அந்த பரப்ரும்மத்தின் மஹிஷியான ஸ்ரீதேவிக்கு மூன்று காரணங்களாலும் வணங்குகிறேன்.

*ஸ்ருத்யை நமோஅஸ்து ஸுபகர்மபலப்ரஸூதயை*
*ரத்யை நமோஅஸ்து ரமணீய குணார்ணவாயை |*
*ஸக்த்யை நமோஅஸ்து ஸதபத்ர நிகேதநாயை*
*புஷ்ட்யை நமோஅஸ்து புருஷோத்தம வல்லபாயை ||*

வேதமாதாவாகவும், ரூபம், லாவண்யம், மாதுர்யம் முதலிய நல்ல குணங்களுக்கு சமுத்திரமாகவும், தேவியின் உருவமாகவும், சக்தியின் வடிவமாகவும், தாமரை மலரினை வீடாக உடையவளும், புஷ்டியின் வடிவமாக இருப்பவளுமான ஸ்ரீமந்நாராயணனின் பத்னியான ஸ்ரீதேவியே! சுபகர்மங்களை அனுஷ்டிக்கும்படி உபதேசித்து அதன் மூலம் நல்ல பலன்களை உண்டு பண்ணட்டும்.

*நமோஅஸ்து நாலீக நிபாநநாயை*
*நமோஅஸ்து துக்தோததி ஜன்மபூம்யை |*
*நமோஅஸ்து ஸோமாம்ருத ஸோதராயை*
*நமோஅஸ்து நாராயண வல்லபாயை ||*

தாமரை மலருக்கு சமமான முகத்தினை உடைய வளே! பாற்கடலைப் பிறப்பிடமாக உடையவளே! சந்திரன், அமுதம் இவர்களை சகோதரர்களாக உடையவளே! ஸ்ரீமந்நாராயணனின் பத்னியே! உன்னை வணங்குகிறேன்.

*நமோஅஸ்து ஹேமாம்புஜ பீடிகாயை*
*நமோஅஸ்து பூமண்டல நாயிகாயை |*
*நமோஅஸ்து தேவாதி தயாபராயை*
*நமோஅஸ்து சார்ங்காயுத வல்லபாயை ||*

தங்கத் தாமரையில் வீற்றிருக்கும் மகாலக்ஷ்மிக்கு வணக்கம். பூமியின் தலைவியான மகாலக்ஷ்மிக்கு வணக்கம். தேவதைகளுக்கும், சாதுக்களுக்கும் மிகுந்த கருணைக் காட்டிடும் குளிர்ந்த தாயாருக்கு வணக்கம். சாரங்கத்தையும், வில்லையும் தரித்த விஷ்ணுவின் அன்புக்குரியவளான மகாலக்ஷ்மியை வணங்குகிறேன்.

*நமோஅஸ்து தேவ்யை ப்ருகுநந்தனாயை*
*நமோஅஸ்து விஷ்ணோருரஸி ஸ்திதாயை |*
*நமோஅஸ்து லக்ஷ்மியை கமலாலயாயை*
*நமோஅஸ்து தாமோதர வல்லபாயை ||*

பிருகு முனிவரின் திருமகளாகவும், ஸ்ரீமகா விஷ்ணு வின் திருமார்பில் வீற்றிருப்பவளுமான பத்மாசன தேவியை வணங்குகிறேன். யசோதா தேவியினால் உரலில் கட்டப்பட்ட கேசவனின் பிரியமானவளான மகாலக்ஷ்மிக்கு என் வணக்கங்கள்.

*நமோஅஸ்து காந்த்யை கமலேக்ஷணாயை*
*நமோஅஸ்து பூத்யை புவன ப்ரஸூத்யை |*
*நமோஅஸ்து தேவாதிபி ரர்சிதாயை*
*நமோஅஸ்து நந்தாத்மஜ வல்லபாயை ||*

ஒளிரும் வடிவமுடையவள்; உலகமனைத்திற்கும் தாயானவள்; செல்வங்களின் வடிவமாக விளங்குபவள்; தேவதைகளால் பூஜிக்கப்படுபவள். நந்தகோபனின் திருக்குமாரனான ஸ்ரீகிருஷ்ணனின் அன்புக்குரியவளான மகாலக்ஷ்மியை வணங்குகிறேன்.

*ஸம்பத்கராணி ஸகலேந்த்ரிய நந்தநாநி*
*ஸாம்ராஜ்யதாநவிபவானி ஸரோருஹாக்ஷி |*
*த்வத்வந்தநாநி துரிதாஹரணோத்யதாநி*
*மாமேவ மாத ரநிஸம் கலயந்து மாந்யே ||*

ஜகன்மாதாவே! தங்களை எவன் முக்கரணங்களா லும் அதாவது மனம், மெய், வாக்கால் வணங்குகின் றானோ அவனுக்கு அதிகமான செல்வங்கள் உண்டாகும். எந்த இந்திரியத்திற்கும் கெடுதல் ஏற்படாது பாவங்கள் விலகிவிடும். சக்ரவர்த்தியாகக் கூட ஆகி விடலாம். தங்களை வணங்குவதால் இவ்வளவு பலன் கள் ஏற்படுவதாயிருந்த போதிலும் தங்களது தூண்டுதல் இல்லாவிடில் தங்களை நமஸ்கரிப்பதில் பிரவிருத்தி உண்டாகாது. ஆதலால் என்னிடம் தயை கூர்ந்து பிரவிருத்யை உண்டு பண்ண வேண்டும்.

*யத்கடாக்ஷஸமுபாஸநாவிதி:*
*சேவகஸ்ய ஸகலார்த ஸம்பத: |*
*சந்தநோதி வசனாங்கமாநஸை:*
*த்வாம் முராரி ஹ்ருதயேஸ்வரீம் பஜே ||*

தாயே! ஸ்ரீமகாலக்ஷ்மி! உன்னைத் துதிப்பவர் களுக்கு உன் அருட்பார்வையானது அனைத்தையும் வழங்க வல்லது. ஸ்ரீஹரியின் பிராண நாயகியான தாயே! உன்னை முக்கரணங்களாலும் துதிக்கின்றேன். எனக்கு அருள் புரியுங்கள்.

*ஸரஸிஜநிலயே ஸரோஜஹஸ்தே*
*தவளதமாம்ஸுக கந்தமால்யஸோபே |*
*பகவதி ஹரிவல்லபே மநோஜ்ஞே*
*த்ரிபுவந பூதிகரி ப்ரஸீத மஹ்யம் ||*

தாமரை மலரில் வீற்றிருந்து, தாமரை மலரினைத் திருக்கரங்களில் ஏந்திக் கொண்டு, மிகவும் வெண்மை யான வஸ்திரம், சந்தனம், மாலை இவைகளால் பிரகாசிக் கின்ற அழகும் நிறைந்த ஐச்வரியமும் உடையவளே! விஷ்ணுவுக்குப் பிரியமாயிருப்பவளே! மனதைக் கவருகின்றவளே மூன்று உலகத்திற்கும் செல்வத்தைக் கொடுப்பதுபோல் என் பொருட்டும் பிரசன்னமாக வேண்டுகிறேன்.

*திக்கஸ்திபி: கநக கும்ப முகாவஸ்ருஷ்ட*
*ஸ்வர்வாஹிநீ விமலசாருஜலா ப்லுதாங்கீம் |*
*ப்ராத ர்நமாமி ஜபதாம் ஜநநீ மசேஷ*
*லோகாதிநாதக்ருஹிணீ மம்ருதாதி புத்ரீம் ||*

காலையில் எழுந்ததும் ஸ்ரீதேவியை திக்கஜங்கள் தனது துதிக்கையில் தங்கமயமான குடத்தைத் தாங்கி

ஆகாச கங்கையின் சுத்தமான தீர்த்தத்தால் அபிஷேகம் செய்வதாகவும், சர்வ ஜகன்மாதாவாகவும், பாற்கடலின் திருமகளாகவும் உள்ள ஸ்ரீதேவியை வணங்குகின்றேன்.

*கமலே கமலாக்ஷவல்லபே த்வம்*
*கருணாபூரதரங்கிதை ரபாங்கை: |*
*அவலோகய மா மகிஞ்சநாநாம்*
*ப்ரதமம் பாத்ர மக்ருத்ரிமம் தயாயா: ||*

கமலவல்லித் தாயே! தயையுள்ளவர்களுக்குள் தன்னை முதலாவதாகவும், தீனர்களுக்குள் தன்னை முதலாவதாகவும் கணிக்கவேண்டியிருப்பதால் உண்மையில் மிகவும் ஏழையான என்னிடம் தயாரஸம் நிறைந்த தங்களுடைய அருட்பார்வையைச் செலுத்தி அருள் புரிய வேண்டும்.

*ஸ்துவந்தி யே ஸ்துதிபி ரமூபி ரந்வஹம்*
*த்ரயீமயீம் த்ரிபுவநமாதரம் ரமாம் |*
*குணாதிகா குருதரபாக்ய பாகிநோ*
*பவந்தி தே புவி புத பாவிதாஸயா: ||*

இச்சுலோகங்களால் வேதஸ்வரூபிணியைத் தினந்தோறும் துதிக்கின்றவர்கள் நல்லொழுக்கத்தால் எல்லோருக்கும் மேலாக இருக்கும் தன்மையையும், தனம், தான்யம், சந்தானம் முதலிய பாக்கியங்களையும், வித்வான்களால் போற்றத்தக்க புத்தி வலிமையையும் பெற்று இம்மையில் சுகமாய் வாழ்ந்து மறுமையிலும் சுவர்க்காதி போகங்களை அனுபவிப்பார்கள்.

*ஸுவர்ணதாரா ஸ்தோத்ரம் யச்சங்கராசார்ய நிர்மிதம்*
*த்ரிஸந்த்யம் ய: படேந்நித்யம் ஸ குபேர நமோ பவேத்*

எவரொருவர் சங்கரபகவத்பாதாள் ஆசாரியரால் இயற்றப்பட்ட இந்த கனகதாரா ஸ்தோத்திரத்தை காலை, மதியம், மாலை என மூன்று வேளைகளிலும் துதிக்கின்றனரோ அவர்கள் நவநிதிகளுக்கு நாயகனான குபேரனுக்கு நிகராவர்.

**கத்யம்**

*இதி ஸ்ரீமத்பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய*
*பர்யஸ்ய ஸ்ரீமச்சங்கர*
*பகவத: க்ருதிஷு கனகதாரா ஸ்தோத்ரம்*
*சம்பூர்ணம்*

பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யரான ஸ்ரீசங்கர பகவத்பாதாள் இயற்றிய இந்த கனகதாரா ஸ்தோத்திரம் நிறைவுற்றது.

ஸ்ரீவாவிள்ளா வெளியீட்டாளர் வெளியிட்ட கனகதாரா ஸ்தவத்தில் பனை ஓலைச் சுவடிகளில் இருந்து சேகரிக்கப்பட்டு மற்றும் வெளியிடப்பட்ட மேலும் சில சுலோகங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

*பில்வாடவீ மத்யலஸத்ஸரோஜே*
*ஸஹஸ்ரபத்ரே சுகஸந்நிவிஷ்டாம்*
*அஷ்டாபதாம்போருஹ பாணீபத்மாம்*
*சுவர்ணவர்ணாம் பரணமாமி லக்ஷ்மீம்*

வில்வ வனத்தின் நடுவே ஆயிரம் இதழ்கள் கொண்ட தாமரையில் வீற்றிருப்பவளும், அழகிய தாமரைகளைத் திருக்கரங்களில் ஏந்திக் கொண்டு இருப்பவளும், பசுமையான ஒளி பொருந்திய தேகத்தை உடையவளுமான ரமா தேவியை வணங்குகிறேன்.

*கமலாஸந பாணிநா லலாடே*
*லிகீதா மக்ஷரவங்தி மஸ்ய ஜந்தோ:*
*பரிமார்ஜய மாத ரங்ரிணா தே*
*தநிக த்வார நிவாஸ து:க தோக்த்ரீம்*


தாயே! செல்வந்தர்களின் வீட்டு முற்றத்தின் முன்பாக நின்று யாசித்து, அவர்கள் அளிக்கும் தனத்தால் வாழ வேண்டும் என பிரம்ம தேவன் எழுதிய எழுத்தை உம் திருப்பாதங்களால் அழித்து அருள் புரியுங்கள்.

*அம்போருஹம் ஜன்மக்ருஹம் பவத்யா*
*வக்ஷஸ்த்லம் பர்த்ரு க்ருஹம் முராரே:*
*காருண்யத: கல்பய பத்மவாஸே*
*லீலாக்ருஹம் மே ஹ்ருதயார விந்தம்.*

தாயே! தாங்கள் பிறந்த இடம் தாமரை மலராகும். வீற்றிருப்பது ஸ்ரீமந்நாராயணனின் திருமார்பாகும். அவ்வாறே என் இதயத்தாமரையை தங்களின் விளையாட்டு இடமாக ஆக்கிக் கொள்ளுங்கள் தாயே!

*ஆதிசங்கராசாரியர் அருளிய இந்த*
*கனகதாரா ஸ்தோத்திரத்தை அக்ஷயத்தி*
*ருதியை அன்று மட்டுமன்றி*
*நாள்தோறும் துதித்து வந்தால்*
*ஸ்ரீமஹாலக்ஷ்மித் தாயாரின் அஷ்ட*
*வடிவங்களின் அஷ்ட ஐச்வர்யமும்*
*பெற்று வாழ்வில் இன்புறலாம்.*

# கல்யாண வாழ்வை அருளும் ஸ்ரீகல்யாண நரசிங்கப் பெருமாள்







-திரு.அறந்தாங்கி சங்கர், சென்னை,
9444160161

ஒரு மனிதன் வாழ்வை முழுமையாக வாழ்கிறான் என்றால் அது திருமணமாகி குழந்தைகளைப் பெற்று, அவர்களை வளர்த்து, திருமணம் செய்து கொடுத்து, பேரன் பேத்திகளையும் கண்டு ஆனந்தமடைவது ஆகும். ஆனால், எத்தனையோ ஆண்களும், பெண்களும் திருமண வாழ்க்கை அமையாமல் துன்பப்படுகிறார்கள். அப்படி திருமண வாழ்க்கை அமையாமல் கஷ்டப்படும் மனித இனத்துக்கு பல்வேறு தலங்களிலே ஆண்டவன் அமர்ந்து திருமண வரத்தை அருளிக் கொண்டிருக்கிறான். அப்படிப்பட்ட ஒரு அற்புதமான திருமண வரம் அருளும் திருத்தலத்தை பற்றித்தான் இங்கு காணப் போகிறோம். குஜிலியம் பாறையில் இருந்து 4 கி.மீ. தொலைவில் “ராமகிரி” (வேடசந்தூர், திண்டுக்கல் மாவட்டம்) என்ற ஊர் உள்ளது. இங்கு 1,200 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஸ்ரீகல்யாண நரசிங்கப் பெருமாள் கோயில் அமைந்து உள்ளது. நரசிம்மர் என்ற பெயரில் இருந்தாலும், பெருமாளின் நரசிம்ம வடிவம் இத்தலத்தில் கிடையாது. மூல மூர்த்தி சங்கு சக்கரத்துடன் அபய வரத முத்திரைகள் காட்டியபடி ஸ்வாமி திருமணக் கோலத்தில் காட்சி தருகிறார்.

நீண்ட காலமாகத் திருமணம் ஆகாதவர்கள் இங்கு வந்து வழிபட்டால் நரசிம்மரின் அருளால் திருமணத் தடை நீங்கும் என்பது இக்கோயிலின் சிறப்பு அம்சம். திருமணக் கோலத்தில் உள்ள நரசிம்ம மூர்த்தியை வணங்கினால், திருமணத் தடை நீங்கி திருமணம் இனிதே நடைபெறும். தனிச் சன்னதியிலுள்ள “கமல வல்லித் தாயாரை” வணங்கினால் வறுமை நீங்கி பொருள் சேர்க்கை, தொழில் அபிவிருத்தி ஏற்படும்.

பிரகலாதன் கதை நாம் அனைவரும் அறிந்ததுதான். இரண்யனை வதம் செய்த பிறகும் நரசிம்மரின் உக்ரம் (கோபம்) தணியவில்லை. நரசிம்மரின் கோபத்தைத் தணிக்க அவரை குடும்பஸ்தராக்க வேண்டும் என்பதால் அவருக்கு ஸ்ரீதேவி, பூதேவி என இரு தேவிகளையும் திருக்கல்யாணம் செய்து வைத்தார்கள் சிவ பெருமானும், பிரம்ம தேவரும். அதன்படி நரசிம்மரின் ஆவேசம் தணிந்து திருக்கல்யாணம் நடந்த இடம் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள ராமகிரி எனும் இவ்விடத் தில்தான் என்று கூறுகின்றனர்.

இங்கு பெருமாள் ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீகல்யாண நரசிங்கப் பெருமாளாகக் காட்சி தருகிறார். மேலும், சன்னதி முன் மண்டபத்தில் சிவபெருமானின் லிங்க வடிவம் காட்சி அளிக்கின்றது. இக்கோயில் குடகனாற்றின் கிழக்குக் கரையில் அமைந்துள்ளது. இங்கு ஆறு தெற்கிலிருந்து

வடக்கு நோக்கி உத்தரவாகினி யாக ஓடுவது விசேஷம்.

இந்த ஆலயத்தில் வீற்றிருக்கும் விஷ்ணு துர்கையை ராகு காலத்தில் விளக்கேற்றி வணங்கினால் செய்த பாவங்கள், தோஷங்கள் நீங்கும். திருமணத்தடை அகலும்.

வாசலில் தெற்கு நோக்கி உள்ள ஆஞ்சநேயருக்கு வடை மாலை, துளசி மாலை சாற்றி வழிபட்டால் எக்காரியமும் தடையின்றி வெற்றியடையும்.

இங்கு வேதநாயகனாக விளங்கும் பெரிய திருவடியான கருட பகவானுக்கு 16 மோதகம் தயிர் அன்னம் வைத்து பூஜித்தால் நாகதோஷம், பக்ஷி தோஷம் விலகி நன்மைகள் உண்டாகும்.

இந்த ஆலயத்தில் வந்து பெருமாளை சேவித்தாலே போதும் ஸ்ரீகல்யாண நரசிங்கப் பெருமாளின் கருணையால், அருளாசியால், தடைபடும் சுபகாரியங்கள் அனைத்தும் இனிதே நடக்கிறது என்கிறார்கள் பக்தர்கள்.

# நாத நீராஜன மண்டபம்







**திருமலையில் பிரதான ஆலயத்தின் தென்கிழக்கு திசையில் நாதநீராஜன மண்டபம் அமைந்துள்ளது. இந்நாதநீராஜன மண்டபத்தில் நாள்தோறும் ஆன்மீக நிகழ்ச்சிகள் பல நடந்தவண்ணம் இருக்கும். இந்நாதநீராஜன மண்டபத்தில் பஜனைகள், சொற்பொழிவுகள், நடனம், பரத நாட்டியம், நாடகங்கள் போன்ற ஆன்மீக நிகழ்ச்சிகள் நடைபெறும்.**

**பக்தர்கள் எம்பெருமானை தரிசித்த பின்பு சிறிது நேரம் ஓய்வு பெறும் நோக்கத்தில் ஆலய சுற்றுப்புறத்தில் அமர்ந்து இந்த நிகழ்ச்சிகளைப் பார்க்கலாம். இந்த நிகழ்ச்சிகளை எஸ்.வி.பி.சி. தொலைக்காட்சி நேரலையாகவும், தொகுப்பு நிகழ்ச்சியாகவும் ஒளிபரப்பு செய்கிறது. இதன் மூலம் நாம் உலகத்தில் எந்த மூலையில் இருந்தாலும் நாத நீராஜன மண்டபத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளை கண்டு தரிசிக்கலாம். யக்ஷ கானம், சுந்தர காண்ட பாராயணம், கருட புராணம் பாராயணம் போன்ற நிகழ்ச்சிகளையும் தி.தி.தே. தர்ம பிரசார பரீஷத் ஏற்பாடு செய்து நடத்தி வருகிறது. இந்நிகழ்ச்சிகளில் ஆன்மீகத்தில் சிறந்த நபர்கள்,வேத பண்டிதர்கள், தி.தி.தே.யின் உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டு ஆன்மீக உரையாற்றுவர்.**





# ஆதிசங்கரர் வாழ்வில் அற்புத மகளிர்


திருமதி சுபா,
சேலம்

சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் உலகில் ஞானமார்க்கம் குறைந்ததைக் கண்டு தேவர்களும், மகரிஷிகளும் கைலாயத்தில் மோன ஞானதவத்தில் இருந்த தட்சிணாமூர்த்தியின் திருப்பாதம் பணிந்து, பூலோகத்தின் நிலையைக் கூறி மானிடர்களுக்கு நல்ல அறிவையும், ஞானத்தையும் அருள்பாலிக்க வேண்டினர். ஞானத்தின் பிறப்பிடமான தட்சிணாமூர்த்தியும் உலகில் மானிட அவதாரம் செய்வதற்கு இசைந்து மழலைச் செல்வம் இன்றி வேதனைப்பட்ட தன் பக்தர்களான கேரளாவின் காலடி கிராமத்தைச் சேர்ந்த சிவகுரு ஆரியாம்பாள் தம்பதியருக்கு மகவாக ஜனிக்க திருவிளையாடல் புரிந்து சங்கரராக அவதரித்தார்.

3 வயதில் அமுதமொழிகளைத் தடையின்றி பேசி 8 வயதில் குருகுலத்தில் அனைத்து சாஸ்திரங்களையும் கற்றுத் தேர்ந்தவரான ஆதியந்தம் அற்ற ஆதிசங்கரரின் அவதார நோக்கம் இந்தப் பூவுலகில் பயணிக்கத் தொடங்கியது. ஆண்டவனே என்றாலும் எடுத்துக்கொண்ட மானிட அவதாரத்தில் மகளிரைத் தவிர்க்க முடியாதல்லவா! ஆதிசங்கரர் வாழ்வில் வந்த தெய்வீக மகளிரை இங்கு காண்போம்.

## ஆர்யாம்பாள்

ஆதிசங்கரருக்கே அன்னையாகும் பாக்கியம் பெற்றவள் ஆர்யாம்பாள். ஒரு நாள் தன் வீட்டருகே இருந்த நதியில் இறங்கிய சங்கரன் அலற "என்னடா சங்கரா என்ன" என்று அலறினாள் கரையில் இருந்த ஆர்யாம்பாள். ஒரு முதலை சங்கரனின் காலைக் கவ்விக் கொண்டிருக்கிறது. அதைப் பார்த்த ஆர்யாம்பாள் செய்வதறியாமல் துடிதுடித்தாள். சங்கரனோ கதறுகிறான். சங்கரன் கதறுவதைக்





கண்ட ஆரியாம்பாள் நிலை மரணத்தை விடக் கொடியதாக இருந்தது. தன் கண் எதிரே ஆசை மகனின் மரணத்தைச் சந்திக்க வேண்டுமா? என்று அவளும் கதறுகிறாள். "அம்மா நீ மனம் வைத்தால் இப்போது என்னைக் காப்பாற்ற முடியும்" என்றான் குழந்தை. "என்னடா சொல்கிறாய் அவலமான நான் எப்படி உன்னைக் காப்பாற்றுவது?".

அம்மா, "நான் துறவு போக நீ அனுமதித்தால் இந்த முதலை வாயில் இருந்து தப்ப ஒரு வாய்ப்பு கிடைக்கலாம் என்றார் சங்கரன். "ஆண்டியாகவோ, பரதேசியாகவோ எங்கேயாவது ஒரு மூலையில் நீ உயிரோடு இருந்தால் போதுமடா கண்ணே" என்று கண்ணீரிடையே கூறினாள். இதோ அன்னையின் வாயிலிருந்து சங்கரன் விரும்பிய அனுமதியைப் பெற்றுவிட்டான்.

சன்னியாசிக்கு உலகமே வீடு. பிச்சையிடுகிற பெண்கள் எல்லோரும் தாய். உபதேசம் செய்பவர்கள் சகலரும் தந்தையர். சீடர்களே புத்திரர்கள். கேளிக்கை என்பது தன்னிலேயே அடங்கி இன்புறுவதுதான் தாயே. கல்யாணம் என்றாயே துறவியான நான் சாந்தியை மணந்தாயிற்று. உள்ளத்தில் ஊறும் அன்பின் மனதை நான் பரப்ப வேண்டும். அம்மா எனக்கு உத்தரவு கொடுங்கள்" என்றார் சங்கரர்.

மேலும், அம்மா கடைசியாக நினைவிழக்கும் முன் நீ என்னை நினைத்துக் கொள். நான் இந்த உலகில் எந்த மூலையில் இருந்தாலும், எந்த அகால நேரமாக இருந்தாலும், எவ்வளவு முக்கியமான அனுஷ்டானம் செய்து கொண்டிருந்தாலும் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் உடனே தங்களைக் காண ஓடி வந்து விடுகிறேன். இறுதி வினாடிகளில் தங்களை என் மடியில் சாய்த்துக் கொண்டு ஆசுவாசப்படுத்துகிறேன். தங்களுக்கு உத்தமமான உயர்கதி கிடைக்கச் செய்து, நானே அந்திமக் கிரியையும் செய்கிறேன்" என்றார் சங்கரர். தாய்க்குத் தந்த வாக்கின்படியே தேசமெங்கும் பிரவேசித்து வேதங்களையும், நன்னெறிகளையும் பரப்பி வந்த சங்கரர் தாயின் அந்திமத்தை தன் ஞானத்தினால் உணர்ந்து அக்கணமே தாயைத் தேடி வந்து அவர் சிரத்தைத் தன் மடியில் தாங்கி, தான் குடியிருந்த தாயின் உடலுக்கு ஈமக் கிரியைகளைச் செய்து மரணத்தை மகத்துவமாக்கினார்.

## தர்ம சீலை

ஏகாதசி விரதம் இருந்த சங்கரர் மறுநாள் துவாதசி அன்று வீடு வீடாகச் சென்று பிச்சை வாங்கி வரச் செல்கிறார். சோமதேவர் எனும் வறிய அந்தணருடைய வீட்டு வாசலில் வந்து "பவதி பிட்சாம் தேஹி" எனும் கானக் குரலைக் கேட்கிறாள் அந்தணரின் மனைவி தரும சீலை. பிச்சை



இடுவதற்காக பானைகளில் அரிசி மணிகள் உள்ளதா எனத் துழாவுகிறாள்.

பாம்பின் விஷத்தை விடக் கொடிய தான வறுமை அங்கு தாண்டவமாடியது. தருமசீலை துடித்தாள். மனமும் உடலும் நடுங்கியது. இறைவனின் பிரகாசத்துடன் வாசலில் வந்து நிற்கும் பாலகனுக்கு ஈய ஒன்றுமில்லையே? என வருந்தினாள். கணவர் துவாதசிக்காக வைத்திருந்த அழுகிய நெல்லிக்கனி அவள் கண்களுக்குத் தென்பட்டது. உடனே நெஞ்சு நிறைய அன்புடன் அந்த நெல்லிக்கனியை சங்கரனின் பிச்சைப் பாத்திரத்தில் போட்டாள்.

சங்கரன் அந்த நெல்லிக்கனியைப் பார்த்தான். உள்ளங்கை நெல்லிக்கனி போல அந்த ஏழைப் பெண்ணின் உள்ளமும் அதில் தெரிந்தது. உள்ளம் கொள்ளாமல் நிரம்பி வழியும் அன்புச் செல்வத்தை ஸ்தூலமான பொருள் உருவில் வெளிக்காட்ட முடியாமல் அந்த மாது மனம் குழைந்தது கண்டு சங்கரனின் இதயம் குழைந்தது.

அந்த உருக்கம் அமர பாஷை பாக்களாக வெளி வந்தது. சின்னஞ்சிறு

திருவாயால் பாடிய பாக்கள் செல்வத் திருமகளிடம் அவரது கடைக்கண் பார்வை இந்த ஏழையின் பக்கம் திருப்ப சமயோஜிதமாகப் பாடுகிறார் குழந்தை சங்கரர். "மக்களின் கரும வினையை அவர்களுடைய அன்பு அறுத்துக் கொண்டு போகும் காலமே உண்டு. நெல்லிக் கனியை எனக்கு உகந்தபோது இந்த வேதிய பெண்ணின் உள்ளத்தில் சுரந்த அன்பு வெள்ளம் அவர்களுடைய ஜன்மாந்திர கரும வினைகளை அடித்துத் தள்ளி விடுமே?" என்று தெளிவான பதில்களை கனகதாரா ஸ்தவமாக தம் பாமாலையில் மலர விடுகிறார். அழுகிய ஒரு நெல்லிக்கனி ஈந்த அந்த ஏழைப் பெண்ணின் வீட்டு முற்றத்தில் அழகிய பொன் நெல்லிக்கனிகளை மழையாகப் பொழிந்து தள்ளினாள் மகாலட்சுமித் தாயார்.

கனகதாரா ஸ்தவம் தோன்ற அடிப்படை காரணமாக இருந்த அந்த ஏழை மாது தர்மசீலை சங்கரரின் வாழ்வில் வந்த மானுடப் பெண்டிரில் ஸ்தோத்திரம் உள்ளவரை நிலைத்த புகழைப் பெறுகிறார்.

**சரசவாணி**

மண்டனமிஸ்ரரைக் காண நர்மதைக் கரையிலிருந்த மாஹிஸ்மதி நகருக்கு சங்கரர் வருகை தந்தார். சங்கரருக்கு மண்டனமிஸ்ரரின் வீட்டை அடையாளம் காட்ட அங்கு இருந்த அறிவுமிகு பெண்கள் "எந்த வீட்டுத் திண்ணையில் இருக்கும் பெண் கிளிகள் கருமமே பலன் தருமா? கடவுள் என்பவர் பலனளிக்கிறாரா? என்பது போன்ற பெரிய விஷயங்களை விவாதித்துக் கொண்டிருக்குமோ அந்த இல்லம்தான்" என்றனர்.



சங்கரர் கதவு மூடியிருந்த ஒரு வீட்டில் அந்தக் கிளிகளின் பேச்சைக் கேட்டார். அந்நேரம் தன் மூதாதையருக்கு திதி அளிக்கும் நிகழ்வில் இருந்த பட்டரிடம் மூடிய கதவைத் தாண்டி சென்று குறும்புடன் விவாதத்தில் இறங்கினார் சங்கரர். வந்திருப் பது யார் என்பதை அறிந்தாலும் தன் மீமாம்சை கொள்கையிலிருந்து வழுவாமல் அவருடன் வாதம் புரியத் தயாரானார் மண்டனமிச்ரர்.

விவாதத்திற்கு பண்டிதர் தன் மனைவி சரசவாணியை நடுவராக இருக்குமாறு பணித்தார். இல்லற தர்மமே பெரிய தருமம் எனப் பண்டிதரும், துறவு வாழ்வே ஆன்மீக வழி தரும் எனவும் இருவரும் விவாதிக்கத் தலைப்பட்டனர். இதில் யார் தோல்வி அடைகிறாரோ அவர் வெற்றி பெற்ற அடுத்த வர் கொள்கைக்கு மாறி விட வேண்டும் என்பது போட்டியின் விதி ஆனது. இருவர் கழுத்திலும் மாலையை அணிவித்துக் கொள்ளச் சொன்ன உபயபாரதி வாதத்தில் யார் கழுத்தில் உள்ள மாலை வாடுகிறதோ அவரே தோற்றவர் என்றும் அறிவித்தார்.

வாதம் நாட் கணக்கில் செல்கிறது. ஒரு கட்டத்தில் சங்கரர், "இந்த உலக விஷயங் களில் காரியங்கள் பண்ண வேண்டியது முறைதான். இந்த நியதிகளில் இருந்து ஒருத் தரை விலக்க நினைத்தால் அவரால் விட முடி யாது. கர்ம மார்க்கம் முக்கியம்தான். ஆனால் வயதாக ஆக மனது தானாக கனிந்து பக்குவ மான ஆத்மாவுக்கு இது போன்ற உலகக் காரியங்கள் எல்லாம் கடைசி வரை தேவையில்லை. அவருள் சாந்தமும், ஞானமும், கருணை யும் நிரம்பி இருக்கும்போது இந்த உலகக் காரியங்களை விட்டு, பிரம்மத்தைச் சிந்தனை பண்ணி ஞானத்தை அடையறதுக்குத் தான் முயற்சி பண்ணும். இது தான் வேதத்தின் நிஜ தாத்பர்யம்" எனத் தெளிவாக உரைக்கிறார்.

இதைக்கேட்க கேட்க மண்டனமிஸ்ரருக்கு அதுதான் சத்தியம் என புத்தியை ஏற்க வைக்கிறது. அவ்வளவுதான் அவர் கழுத்தில் இருந்த மாலை வாடுகிறது. ஆதி சங்கரர் ஜெயித்தவராகிறார்.

கணவரை தோற்றவராக நேரடியாக அறிவிக்க அதிலும் சந்நியாசம் ஏற்கச் சொல்ல மனைவியால் முடியுமா? சரசவாணி சமயோஜிதமாக "இரண்டு பேரும் பிச்சைக்கு வாருங்கள்" என்றார். அதாவது தோற்ற இல்லறவாசியான கணவரும் போட்டி விதிப்படி இனி சந்நியாசியே என்பதால் இருவரையும் பிட்சைக்கழைத்துப் போட்டியை நிறைவு செய்தார்.

**திருப்பதி சுற்றுப்பகுதிகளில் உள்ள தி.தி.தே. ஆலய அமைவிடம் திருப்பதி ஆர்.டி.சி. பேருந்து நிலையத்திலிருந்து கி.மீ.களில்**

1) ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயம், திருச்சானூர்...05 கி.மீ.
2) ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், ஸ்ரீநிவாச மங்காபுரம்...12 கி.மீ.
3) ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஆலயம், திருப்பதி...01 கி.மீ.
4) ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி ஆலயம், திருப்பதி...2.3 கி.மீ.
5) ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலயம், திருப்பதி...03 கி.மீ.
6) ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், அப்பளாய குண்டா...18 கி.மீ.
7) ஸ்ரீவேதவல்லி சமேத ஸ்ரீவேத நாராயண ஸ்வாமி ஆலயம், நாகுலாபுரம்...65 கி.மீ.
8) ஸ்ரீபத்மாவதி சமேத ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், நாராயணவனம்...37 கி.மீ.
9) ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி ஆலயம், கார்வேடி நகரம்...48 கி.மீ.
10) ஸ்ரீகோதண்டராமாலயம், ஒண்டிமிட்டா, கடப்பா மாவட்டம்...116 கி.மீ.

இந்த இடத்தில் சரசவாணி தன்னையும் சங்கரர் ஜெயிக்க வேண்டும் என விரும்பி சந்நியாசியான சங்கரரிடம் இல்லற வாழ்வு குறித்து விளக்க வேண்ட, அனைத்தையும் கற்றுத் தேர்ந்திருந்தாலும், இல்லறத்தையும் அனுபவித்துத் தெளிவு பெற, மாண்ட மன்னனின் உடலுக்குள் கூடு விட்டுக் கூடு பாய்ந்து, பின் சரசவாணிக்கு இல்லறம் குறித்து விளக்கி வெற்றி பெற்றதாக ஒரு கதை உண்டு.

அதில் வரும் மன்னனின் மனைவியான அரசியாலும் வாழ்வியல் அனுபவத்தைக் கற்றார் என்கிறது அந்தச் சம்பவம். சங்கரர் வரலாற்றில் சரசவாணிக்கு ஒரு தனி இடம் உண்டு.

ஆதிசங்கரர் சரசவாணியிடம் "கலைத்தாயான தாங்கள் இப்பூமியிலேயே சாந்நித்தியத்தோடு இருந்து எல்லோருக்கும் ஞானத்தை அனுக்கிரஹம் செய்ய வேண்டும். அத்துடன் நாங்கள் செல்லும் இடமெல்லாம் எங்கள் பின் வாருங்கள் எந்த இடம் என்பதை முடிவு செய்யலாம் என வேண்ட, சரி என்று சரசவாணியும் "நீங்கள் எங்கு நின்று திரும்பி பார்க்கிறீர்களோ நான் அங்கேயே சிலையாக நின்று அருள் பாலிக்கிறேன்" என்றார்.

இப்படி ஒரு முடிவுடன் மூவரும் அங்கியிருந்து கிளம்பி துங்கா நதிக் கரையில் சிருங்கேரி எனும் இடத்தில் கர்ப்பிணியான ஒரு தவளைக்கு பாம்பு ஒன்று அதன் மேல் வெயில்படாமல் இருக்க குடை போல் படம் விரித்த காட்சியைக் கண்டு எதிரிகளான மிருகங்கள் கூட அவ்விடத்தில் ஒன்றுடன் ஒன்று அன்போடு இருப்பதைப் பார்த்து அங்கே நின்றார்.

அந்த துங்கா நதியின் மணலில் அம்பாள் நடந்து வரும்போது சலங்கை சத்தமும் கேட்காமல் போக ஆதிசங்கரர் திரும்பி பார்க்கிறார். அங்கு சரசவாணி சிலையாக நிற்பதைப் பார்த்து மகிழ்ந்து அம்பாளாக பிரதிஷ்டை செய்து அங்கே சாரதாம்பாள் கோயில் கட்டி ஸ்ருங்கேரி மடத்தை நிறுவினார் ஆதிசங்கரர்.

மண்டனமிஸ்ரர் மனைவியாக, பண்டிதம் மிக்க பெண்ணாக சங்கரரையே வாதத்தில் தடுமாற வைத்து இன்று சாரதாம்பிகையாக வணங்கப்படும் உபயபாரதி சங்கரர் வாழ்வில் வந்த தெய்வாம்ச மகளிரில் ஒருவராகிறார். ஆதிசங்கரர் அருளிய கனகதாரா ஸ்தோத்திரத்தை அக்ஷயத் திருதியை அன்று துதித்து அன்னை மஹாலக்ஷ்மியின் அருளைப் பெறுவோம்.

தெலுங்கு மூலம் : டாக்டர். சி.மதுசூதன சர்மா, 90007 61390
தமிழாக்கம் : திருமதி வி.உஷா, 99850 02156

ஆன்மீகச் சொற்பொழிவாற்றுபவர்கள், ஆசிரியர்கள், பாடகர்கள், மேடைப் பேச்சாளர்கள், வர்ணனையாளர்கள் தம் குரல் ஆரோக்கியத்தை மிகவும் பாதுகாப்பாக காப்பாற்றிக் கொள்ள வேண்டும். இவர்கள் அதிகமாகத் தம் குரலைப் பயன் படுத்துவதால், தொண்டை கரகரப்பு, வலி ஆகியவை ஏற்படுகிறது. இதனால் குரல் இனிமை குறைகிறது. சாதாரணமாக இப்பாதிப்பு பலருக்கு ஏற்படுகிறது. சிலருக்கு விரைவில் குறைகிறது. சிலருக்கு அப்படியே ஒரு நோயாக மாறி விடுகிறது.

புகைப்பிடித்தல், மதுபானம் அருந்துதல் போன்றவற்றால் மூக்கு தொண்டையில் அலர்ஜி, சுவாசக்கோளாறுகள், தைராய்டு, மனக்கோளாறு போன்ற வியாதிகள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம்.

**வீட்டு வைத்தியம் :**

நாள்தோறும் 2,3 முறை ஒரு வேளைக்கு 50 மி.லி. சூடான பாலில் 4.5 இடித்த மிளகு பொடி, இரண்டு சிட்டிகை மஞ்சள் ஆகியவற்றைச் சேர்த்துக் குடிக்க வேண்டும்.




கிராம்பு, ஏலக்காய், மிளகு ஆகியவற்றை சம அளவு எடுத்துக்கொண்டு, தூளாக்கி மூன்று வேளை – ஒரு வேளைக்கு சிறிய ஸ்பூன் அளவு எடுத்து தேனுடன் கலந்து உட்கொள்ள வேண்டும். நாள் தோறும் காலை, மாலை வேளைகளில் வேளைக்கு ஒரு கிராம் வீதம் நாககேசர பொடி அல்லது கந்தக சோரல பொடி அல்லது புஷ்கரமாலா பொடி அல்லது நெல்லிக்கனி பொடியை நீர் அல்லது தேனுடன் கலந்து உட்கொள்ள வேண்டும். நாள்தோறும் மூன்று வேளை திப்பிலி பொடியைத் தகுந்தளவு தேனுடன் கலந்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஆயுர்வேத மருந்துக் கடையில் கிடைக்கும் லவங்காதிவடி, ஏலாதிவடி, கதிராடிவடி என்ற மருந்துகளில் ஏதேனும் ஒன்றை மூன்று வேளை, வேளைக்கு ஒன்றிரண்டு மாத்திரைகள் வீதம் உட் கொண்டால் நல்ல பலன் உண்டாகும்.

**கடைபிடிக்க வேண்டியவை**


குரல் இனிமையைக் காப்பாற்றிக் கொள்ள நீரினை சிறிது சிறிதாக அதிக முறை குடிக்க வேண் டும். தண்ணீர் நிறைந்த பழங்கள், இளநீர் போன்றவை குரல் ஆரோக்கியத்திற்கு உதவும். பிராணாயாமம் செய்வது மிகவும் நல்லது.

கொதிக்கும் நீரில் சிறிதளவு கற்பூரப் பொடி அல்லது 10–15 துளிகள் நீலகிரி தைலம் போட்டு ஆவிப்பிடித் தால் தொண்டை வலி, கரகரப்பு ஆகி யவை குறையும். குளிர் சாதனப் பெட்டியில் வைத்த உணவுப் பொருட் களை வெளியே எடுத்த உடனே சாப்பிடக் கூடாது. ஐஸ்கிரீம், குளிர் பானங்கள், அதிக சூடு உள்ள திரவங்கள், பேக்கரி உணவு வகைகள், தயிர், புளிப்பு வகைகள் போன்ற உணவுப் பொருட் களை உண்ணுதல் கூடாது.

அதிகமாக எண்ணெய்யில் வறுத்த உணவு வகைகள், இனிப்பு வகைகள் மற்றும் தயாரிக்கப் பட்டு நீண்ட நாட்களான உணவு வகைகள் போன்ற வற்றை உண்பதால் தொண்டை பாதிக்கும். சமீபத்தில் தயாரிக்கப்பட்ட உணவுகளுடன் இயற்கையாகக் கிடைக்கும் உணவு வகைகள் உட்கொண்டு வந்தால் நீண்ட ஆரோக்கியமான வாழ்வு வாழலாம்.

மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா அருளிய

# ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியம்



சென்ற இதழின் தொடர்ச்சி...

திருமலையில் ஒரு குகையில் வானரங்கள் ஒரு அற்புதக் காட்சி கண்டன. தாம் கண்ட காட்சியைக் குறித்து தங்களுக்கு இடையே வெவ்வேறு விதமாக கருத்துக்களைக் கூறி வந்தன. வானரங்களின் உரையாடலை கவனித்த இராமபிரான், அவ்வானரங்கள் ஸ்வாமியைக் கண்டதையும், திருமலையின் பெருமைகளையும் வானரங்களுக்கு இராமர் தொடர்ந்து விளக்கிக் கூறினார்.

இராம மனோகரன் இந்த இடத்தில் இல்லை என்று சொல்ல முடியாது. ஹரி, கிரி மகிமைகள் ஹரிக்கே தெரியும். தேவர்கள் கூட அந்த மகிமைகளை அறிய மாட்டார்கள். இந்த வேங்கடாசலத்தின் மகிமை என்பது அனேகம். இதன் முடிவை அறிந்து கொள்ள வேண்டும் என்று முயல்வது சரியல்ல. இருந்தாலும் ஒன்றை சொல்கிறேன் கேளுங்கள். நீங்கள் எல்லோரும் புண்ணியவான்கள். நீங்கள் குகையில் மாதவனை தரிசித்தீர்கள். ஸ்வாமி தரிசனத்தால் நீங்கள் அனைவரும் புண்ணியவான்கள் ஆனீர்கள் என்றார்.

வேங்கடாத்ரியில் ஒரு நாள் இருந்து விட்டு பிறகு தென்திசையை நோக்கி அனைவரும் பயணத்தைத் தொடர்ந்து கடற்கரையை வந்து அடைந்தனர். இராமர் வானர வீரர்களின் உதவியோடு கடலில் சேது பாலத்தை நிர்மானித்தார். ஸ்ரீராமன் வானர வீரர்களுடன் சேது வழியாகக் கடலைக் கடந்து இலங்கையை வந்தடைந்தர். அசுரபலத்தை அழித்தார். கும்பகர்ணனைக் கொன்றார். சீதையைச் சிறை வைத்த இராவணனையும் கொன்று அழித்தார். அதன் பிறகு சீதையைக் கண்டு மீட்டார். தனக்குப் போரில் உதவியாக இருந்த விபீஷணனுக்கு இலங்கையைக் கொடுத்துப் பட்டாபிஷேகம் செய்து ஆளச் செய்தார். பிறகு, சீதா, லக்ஷ்மணனுடன் தனக்கு உதவி புரிந்த வானர வீரர்களுடன் புஷ்பக விமானத்தில் ஏறிச் சாகேதரபுரம் வந்தடைந்தார். பரதனும், சத்ருக் கனும் வணங்கி நிற்க இராமன் பட்டத்தரசனாக வீற்றிருந்தார். அதன் பிறகு, மக்கள் யாவரும் மகிழ்ச்சி அடையும்படி இராம ராஜ்ஜியம் எனும் வகையில் ஆட்சியை நடத்தி வந்தார் என்று சூத மகரிஷி கதையைச் சொல்லி முடித்தார்.

இக்கதை முழுதும் கேட்ட சௌனகாதி முனிவர்கள் மிக்க மகிழ்ச்சியுடன், முனிவரே! எங்க ளுக்கு ஒரு சந்தேகம் குகைக்குள் வானரங்கள் தரிசித்த திவ்விய மங்கள உருவங்கள் யார் என்று வினவினர். அதற்கு விடை தரும் விதமாக சூத மகரிஷி கூறலானார்.

உங்கள் சந்தேகத்தைப் போக்கு வது என்னுடைய தர்மம். அதை நான் உங்களுக்குச் சொல்கிறேன். வைகுண்டத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீமந்

நாராயணனே வேங்கடகிரி வாசன் ஆவான். அவரே வானரங்களுக்குக் குகையில் காட்சி கொடுத்தவர். தான் வைகுண்ட வாசனே என்று தெரியப் படுத்தவே அவர்களுக்கு ஸ்வாமி அவ்வாறு காட்சி கொடுத்தார். சாதாரண மக்களுக்கு இந்த உண்மை விளங்காது. வைகுண்டமே இந்தக் குகைக்குள் காட்சி கொடுத்த காரணத்தால் இக்குகை “வைகுண்ட குகை” என்றே பெயர் பெற்றது. இந்தக் குகையின் சிறப்பை அறிந்தவர்கள் கலியினால் பீடிக்கப்பட மாட்டார்கள். மக்கட்பேறும் சந்ததியினர் வளர்ச்சியும் உண்டாவது நிச்சயம். மேலும், எல்லா வளங்களும் நலங்களும் பெற்று கடைசியாக மோக்ஷபேறும் அடைவார்கள் என்று சூதமகரிஷி விளக்கமாக எடுத்துரைத்து அவர்கள் சந்தேகத்தைப் போக்கினார்.

தெலுங்கு மூலம் : பேராசிரியர் கே சர்வோத்தம ராவ்.
தமிழாக்கம் : டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர்.

*பெருமை அறிவோம்...*




“அக்ஷய” என்றால் “குறைவில்லாத” என்ற பொருளுக்கேற்ப, குறைவில்லாத செல்வத்தையும், வளர்ச்சியையும் தரும் நாளாக அக்ஷய திருதியை கருதப்படுகிறது. வீடு செல்வச் செழிப்புடனும், சௌபாக்யத்துடனும், ஐஸ்வர்யத்துடனும் விளங்கவும், அதிக வரவு ஏற்படவும், மஹா லக்ஷ்மி தேவியின் கடாக்ஷம் கிடைக்கவும் அன்னதானம், ஜலதானம், வெள்ளி, தங்கம், கரும்புச்சாறு முதலியன தானம் செய்வது மிகவும் விசேஷம். சூரிய தேவன், யுதிஷ்டிரனுக்கு அளவில்லாத எண்ணிய உணவு தரவல்ல “அக்ஷய பாத்திரத்தை” அளித்த அத்தினமே அக்ஷய திருதியை தினமாக அனுசரிக்கப்படுகிறது.

விஷ்ணு அவதாரமான “பரசுராமரின்” ஜன்ம தினமாகவும், வியாச முனி மகாபாரதத்தை ஸ்ரீமகாகணபதி எழுதக் கூறிய நாளும், குசேலர் ஸ்ரீகிருஷ்ணரைக் காண துவாரகை செல்ல அங்கு அவருக்கு அளவில்லா செல்வம் பகவான் அருளிய நாளாகவும், “குபேரன்” செல்வங்களுக்கெல்லாம் அதிபதியாக நியமிக்கப்பட்ட நாளாகவும், கங்கா தேவி பூமியில் இறங்கிய நாளாகவும் அக்ஷய திருதியை கொண்டாடப்படுகிறது.

பூரியில் உள்ள உலகப் புகழ் பெற்ற ஜகந்நாதர் கோயிலின் இரத யாத்திரைக்கு அக்ஷய திருதியை அன்றுதான் இரத நிர்மாணப் பணி துவங்கப்படுகிறது. அக்ஷய திருதியை நாளில்தான் “கங்கோத்ரி”, “யமுனோத்ரி” கோயில்கள் திறக்கப்படுகின்றன. ஆந்திராவிலுள்ள சிம்மாசலம் ஸ்ரீநரசிம்ம ஸ்வாமியின் சந்தனோத்ஸவம்/நிஜரூப தரிசனம் இந்நாளில்தான் கிடைக்கும்.



# திருக்காரகம்

– உருப்பட்டூர் சௌந்தரராஜன்,
சென்னை.

**புராண வரலாறு :**

'மேகநிகேதன ரிஷிக்கு, இந்த திவ்ய தேச எம்பெருமான் அருளிய காரணத்தால் இத்திவ்ய தேசம் திருக்காரகம் என்ற திருப்பெயருடன் விளங்கு வதை ஸ்ரீவிஷ்ணு ஸ்தலாதர்சம் என்ற நூலில் சொல்லப்படுகிறது. இத்திவ்ய தேசத்தை திருமங்கை ஆழ்வார் "உலகம் ஏத்தும் காரகத்தாய்!" என்கிறார்.

உலகம் முழுவதும் புகழத்தக்க நிலையில் திருக்காரகத்தில் நின்று அருளியவன் என்பது இத்தொடரின் பொருள். எம்பெருமான் வாமனனாகத் தோன்றி, மகாபலியிடம் மூவடி மண்ணை யாசித்துப் பெறுபவனாய் அவன் தாரை வார்த்தவுடன், வெகு விரைவில் திருவிக்கிரமனாக வளர்ந்தபோது, எல்லா உலகங்களும் அப்பெருமானை அடைந்து உய்யத் தக்க நிலையில் எம்பெருமான் எப்படி நின்றானோ அந்நிலையை நினைவுபடுத்தும் முறையில், இங்கே திருக்காரகம் என்னும் திவ்ய தேசத்தில் அனைத்து உலகத்தவராலும் அடையத்தக்க நிலையில் எம்பெருமான் விளங்குகிறான் என்கிறார்.

ஸ்ரீபெரிய வாச்சான் பிள்ளை, இதனை "லோக விக்ராந்த சரணௌ" என்ற ஸர்வ லோகங்களும் வழக்குப்பேசி ஆச்ரயிக்கலாம்படி த்ரைவிக்ரமா பதானம் பண்ணின ஆயனுடைய (திருக்கோவலூர் எம்பெருமானாகிய) ஸ்ரீஸர்வ ஸமாச்ரயணீயதைக்கு ஸ்மாரகமாய் இருக்கிறது" என்று வியாக்யானம் செய்கிறார்.

உலகளந்த பெருமாளின் இத்தகைய தொடர்பி னால் தான், காஞ்சியிலும், உலகளந்த பெருமாள் சந்நிதியில், திருக்காரக எம்பெருமான் நித்ய வாஸம் செய்கிறான்.

**சிறப்புகள் :**

காஞ்சி நகரில் உள்ள திவ்யதேசங்களில் திருமங்கையாழ்வாரால், ஒரே தொடரால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற திவ்யதேசம். கார்ஹ மகரிஷிக்கு இப்பெருமான் காட்சி அருளியவர் ஆதலால் கார்ஹரின் அகத்தில் இடம் பிடித்த காரணத்தால் (கார்ஹர்+அகம்) காரகம் என இத் திவ்ய தேசத்திற்குப் பெயர் அமைந்தது என்பர் சிலர். கார் என்ற சொல்லுக்கு மேகம் என்று பொருள் கொண்டு, மேகத்தை வாழ்விடமாகக் கொண்ட ஒரு மாமுனிவர்க்கு இவர் காட்சி அருளியதாகக் கூறி, அம்முனிவரை மேகநிகேதனரிஷி என்பர். இத்தலத்து எம்பெருமானின் திருப்பெயர் கருணாகரப் பெருமாள் என்று இருத்தலால் "மழை வண்ணத்து அண்ணல்" என்று கம்பர் கூறுவது போன்று, கருணை மழை பொழியும், கருணைக் கடலாக இப்பெருமான் விளங்குகிறான் என்றும் சொல்வர்.

| | | |
|---|---|---|
| பெருமாள் | : | கருணாகரப் பெருமாள் (தெற்கு நோக்கிய நின்ற திருக்கோலம்) காரகத்தான். |
| தாயார் | : | பத்மாஸனி நாச்சியார், ரமாமணி நாச்சியார். |
| தீர்த்தம் | : | அம்பரீஷ ஸரஸ், அக்கராயு தீர்த்தம். |
| விமானம் | : | வாமன / ரம்ய விமானம். |
| ப்ரத்யக்ஷம் | : | காரகமகரிஷி, மேகநிகேதன ரிஷி. |
| ஆகமம் | : | வைகானஸம். |

மங்களாசாஸனம் : திருமங்கை ஆழ்வார்.

**த்யானச்லோகம் :**

*"ச்ரேஷ்டே மேகநிகேதநே ஸ்தலவரே*
*ரமாமணோர் வல்லபம்*
*ஸ்ரீவிஷ்ணும் கருணாகரம் ஸ்தித மமும் ரம்யே*
*விமாநோத்தமே*
*த்யாயாம் யந்வஹம் அம்பரீஷ ஸரஸஸ்தீரேய*
*மாசாமுகம்*
*பூர்வம் மேகநிகேத நாக்ய முநிநா ஸாக்ஷாத்*
*க்ருதம ஸர்வதா"*

– ஸ்ரீவிஷ்ணு ஸ்தலாதர்சம்

**பாசுரம்**

*"...காரகத்தாய்! கார்வானத்து உள்ளாய்!கள்வா!*
*காமரு பூங் காவிரியின் தென்பால் மன்னு*
*பேரகத்தாய்! பேராது என் நெஞ்சில் உள்ளாய்!*
*பெருமான் உன் திருவடியே பேணினேனே!"*

– திருமங்கையாழ்வார்

*"ஓராதார், கல்வி உடையேம், குலம் உடையேம்,*
*ஆராதனம் உடையேம் யாம என்று, - சீர் ஆயன்*
*பூங்காரகம் காணப்போதுவார் தாள் தலைமேல்*
*தாங்கார் அகங்காரத்தால்"*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

**நாமாக்கள்**

*791. ஓம் தந்து வர்த்தந: நம:*

ஸம்ஸாரக்கயிற்றை, பாசங்கள் என்கிற நூல் இழைகளால் வளர்ப்பவன்.

*ஓம் ஸ்துதிப்ரியா: நம:*

ஸ்தோத்திரம் செய்வதாலேயே உகப்பை அடைபவள்.

*792. ஓம் இந்த்ரகர்மா: நம:*

இந்திரனுக்காகச் செயல்புரிபவன்.

*ஓம் க்யாதி: நம:*

இவ்வாறே புகழப்பட்டவள்.

*793. ஓம் மஹாகர்மா நம:*

பெரும் செயல்களைச் செய்பவன்.

*ஓம் ஜீவயந்தீ: நம:*

ஸம்ஸார தாபத்தில் பொசுங்கிய ஜீவாத்மாக் களை அருள்பார்வையில் காப்பாற்றுபவள்.

*794. ஓம் க்ருதகர்மா நம:*

அசுரர்களின் நாஸ்திக ஆசாரங்களையும் அவர்கள் அழிவிற்காக அநுஷ்டித்தவன்.

*ஓம் புநர்வஸு: நம:*

மறுபடியும் அவர்கள் நன்கு வாழும்படி செய்பவள்.

*795. ஓம் க்ருதாகம: நம:*

புத்த ஆகமம் போன்ற சமய நூல்கள் இயற்றியவன்.

*ஓம் தீக்ஷா: நம:*

இப்படிச் செய்வதில் உறுதி உள்ளவன்.

*796. ஓம் உத்பவ: நம:*

ஸம்ஸாரத்தைக் கடந்தவன்போல இருப்பவன்.

*ஓம் பக்தார்த்திஹா: நம:*

அடியார்களின் அல்லலைப் போக்குபவள்.

*797. ஓம் ஸுந்தர: நம:*

அசுரர்களை ஆகர்ஷிக்கும் அழகிய திருவுரு உடையவன்.

*ஓம் ரக்ஷா: நம:*

மறுபடியும் அல்லல் வராமல் ரஷிப்பவள்.

*798. ஓம் ஸுந்த: நம:*

தன் அழகால் அசுரர் மனத்தை மென்மைப் படுத்தியவன்.

*ஓம் பரீக்ஷா: நம:*

அபயர்களைச் சுற்றிப் பாதுகாப்பாக அருட்பார்வையைச் செலுத்துபவள்.

*799. ஓம் ரத்நநாப: நம:*

ரத்னம் போல் ஜ்வலிக்கும் திருநாபியை உடையவன்.

*ஓம் யஜ்ஞஸம்பவா: நம:*

ஆராதனை காலத்திலே ஸ்திரமாக இருக்கும்படி தோன்றுபவள்.

*800. ஓம் ஸுலோசர: நம:*

அழகிய திருக்கண்களை உடையவன்.

*ஓம் ஆர்த்ரா: நம:*

தயையால் எப்போதும் குளிர்ந்து இருப்பவள்.

*ஸ்ரீமதே பத்மாமணி நாயிகா ஸமேத ஸ்ரீகருணாகர பர ப்ரம்மணே நம:*

**குறிப்பு :**

பெரிய காஞ்சிபுரத்தில் உலகளந்த பெருமாள் கோயிலின் தாயார் சந்நிதிக்கு அருகே இந்தத் திவ்ய தேசம் அமைந்து உள்ளது.

*திவ்யதேச வைபவம் வளரும்...*



அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

# இராமாநுசர்

– ஸ்ரீ உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை, 9841884972

பிங்கள வருடம் கி.பி. 1017இல் சித்திரை மாதம் பதின்மூன்றாம் நாள், வியாழக்கிழமை சுக்லபக்ஷ பஞ்சமி திருவாதிரை நக்ஷத்ரத்தில், ஸிம்ஹ லக்னத்தில் தர்சன ஸ்தாபகரான ஸ்ரீராமாநுஜர் ஸ்ரீபெரும்பூதூரில் ஆதிசேஷனின் அம்சமாய் அவதரித்தார். இவருக்கு திருநாமங்கள் பதினொன்று. அவையாவன – இளையாழ்வார், இராமாநுஜர், யதிராஜர், உடையவர், லக்ஷ்மணமுனி, எம்பெருமானார், சடகோபன் பொன்னடி, கோயிலண்ணன், ஸ்ரீபாஷ்யகாரர், பூதபுரீசர், தேசிகேந்த்ரர்.

*சீராரும் எதிராஜர் திருவடிகள் வாழி*
*திருவரையில் சாத்திய செந்துவராடை வாழி*
*ஏராரும் செய்ய வடிவு எப்பொழுதும் வாழி*
*இலங்கிய முந்நூல் வாழி இணைத்தோள்கள் வாழி*
*சோராத துய்ய செய்ய முகச்சோதி வாழி*
*தூமுறுவல் வாழி துணைமலர்க்கண்கள் வாழி*
*ஈராறு திருநாமமணிந்த எழில் வாழி*
*இனிதிருப்போடெழில் ஞானமுத்திரை வாழியே.*

**பதவுரை**

சீர் – கல்யாண குணங்கள், ஆரும் – நிறைந்தவரான, எதிராஜர் – இராமாநுசருடைய, திருவடிகள் – பரம போக்யமாய் நம் தலைக்கு அணியாய் இருக்கிற திருவடிகள், வாழி – நித்யமாக வாழ வேண்டும். திருவரையில் – அழகிய இடையில், சாத்திய – தரித்த, செந்துவராடை – சூரியனைச் சூழ்ந்தாப்போலே மிக்க சிவப்பையுடையதான காஷாய உடை, வாழி – நித்தியமாக வாழ வேண்டும். ஏராரும் – அழகு நிறைந்த, செய்ய – சிவந்த, வடிவு – திவ்ய மங்கள திருமேனி, எப்பொழுதும் வாழி – நித்ய மங்களமாக வாழ வேண்டும்.

இலங்கிய –முந்நூல் – திருமார்பிலே ப்ரகாசிக்கிற ப்ரஹ்மஸூத்ரம் என்னும் பூணூல், வாழி – நித்யமாக வாழ வேண்டும். சோராத – ஒரு நாளும் தளராத, துய்ய – தூய்மையான, செய்ய – சிவந்த, முகச்சோதி – திருமுகமண்டல ஒளி, வாழி – நித்யமாக வாழ வேணும். தூமுறுவல் வெண்மையான அழகிய புன்முறுவல், வாழி – நித்யமாக வாழ வேணும். துணை மலர்க்கண்கள் – ஒன்றுக்கொன்று மலர்ந்த இரு திருக்கண்கள், வாழி – நித்யமாக வாழ வேணும். ஈறாறு திருநாமம் அணிந்த – பன்னிரண்டு திருநாமங்கள் அணிந்த, எழில் – அழகு, வாழி – நித்யமாக வாழ வேண்டும். இனிது– பரம போக்யமாக, இருப்போடு – வீற்றிருக்கும் இருப்பும், எழில் – அழகும், ஞானமுத்திரையும், வாழி – நித்யமாக வாழ வேண்டும்.

**சிறப்புரை**

(சீராரும் எதிராசர் திருவடிகள் வாழி) எதிராசர் – தேவப்பெருமாள் ஸந்நிதியிலே ஸந்யாஸாச்ரம ஸ்வீகாரம் பண்ணியபோது "எதிராசர்" என்ற திருநாமம் தேவப்பெருமாள் சாத்தியது என்று

பெரிய திருமுடி அடைவு கூறும். யதீனாம் ராஜா – யதிராஜ: – துறவிகளுக்குத்தலைவர் என்றபடி. அடியார்களுக்கு அனுபவிக்கத் தக்கதான ஸ்வரூப, ரூப குணங்களோடு வாசியில்லாமல் எல்லாவற்றாலும் பரிபூர்ணராய், யதிகளுக்குத் தலைவரான எம்பெருமானாருடைய "அமரர் சென்னிப்பூ" (திருக்குறு.6) என்னுமாபோலே, "இராமாநுசன் அடிப்பூ" (இ.நூ.108) என்று சொல்லப்படுமதாய், நமது தலைக்கு ஆபரணமாயிருக்கும் திருவடிகள்.

எதிராசருக்குச் சீர்மையாவது "மிக்க சீலம்" என்கிறபடியே தாம் மஹாநுபாவராயிருந்து வைத்தும் மந்தமதிகளோடே புரையறக்கலந்து பரிமாறின சீலகுணம் ஒன்றிலே ஈடுபட்டு அதொழிய வேறொன்றிலும் போகமாட்டாதவர் என்பர். "காரேய் கருணை" என்கிறபடியே நிலம் நீர் என்று பாராமல் பொழியும் மேகம் போல் எல்லா விஷயமாக உபகரிக்கும் கருணை நிரம்பியவர். திருவடிகளுக்கு சீர்மையாவது *"இராமாநுசன் மன்னு மா மலர்த்தாள்"* (இ.நூ.35)என்கிறபடியே நித்யமாய், மகத்தாய், மலர்ந்ததான மலரைப் போலியாகச் சொன்னது. உலகில் சாதாரண மலரை எடுத்துச் சொல்லிற்றன்று. உலகில் மலருக்கு மலர்ச்சி, செவ்வி, குளிர்த்தி, வாசனை தொடக்கமானவை ஒரு கால விசேஷத்தாலே உண்டாகும். ஒரு கால விசேஷத்திலே இல்லாமலும் போகும். அப்படியன்றிக்கே, எப்போதும் உள்ளதாய் மலர்ச்சியும் வாசனையும் மாறாமல் மேன்மேலும் பெருகிவரும்படி உலகோரைத் தன் வசமாக்கும் பெருமையுடைய ஒரு மலர் கிடைத்தால் அத்தை எதிராசர் திருவடிக்கு ஒருபடி போலியாகச் சொல்லலாம் என்பர் பிள்ளைலோகம் சீயர். மேலும் *"இராமாநுசன் தன் இணையடியே"* (இ.நூ.50) என்ற இடத்தில் இந்த ஸம்ஸாரி சேதநரை அதிலிருந்து மீட்கைக்கும், அநுபவிக்கத் தக்கதாய்க்கொண்டு ரஸிப்பிக்கைக்கும், சேர்த்தி அழகையுடைய இந்தத் திருவடிகளே உபாயமாம்படி இருக்கும்.

"மன்னுமா மலர்த்தாள்" (இ.நூ.62) என்கிறபடியே மன்னுகையாவது – தன்னை அடைந்த அடியார்களைக் காப்பதில் தீக்ஷித்து நிச்சலமாயிருக்கை. "திண்கழல்" என்னுமாபோலே, மலருக்கு மகத்துவமாவது ஸௌகுமார்யம், ஸௌலப்யம், தூய்மை முதலான குணத்தோடு கூடியதாயிருக்கை.

இப்படிப்பட்ட தூய்மை, அழகுகளை உடையனவாய் புஷ்பஹாஸ ஸுகுமாரமான திருவடிகள் என்பர். இராமாநுசன் அம்பொற்பாதம் என்கிறார் அமுதனார். அதாவது அழகுக்குக்

## ஸப்தகிரி மார்ச் 2024 விடைகள்

1. போகமண்டபம்.
2. ருத்ரர்.
3. நம்மாழ்வார்.
4. பெரியாழ்வார்.
5. ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி.
6. லக்ஷ்மணன்.
7. ஸ்ரீகோதண்டராமர்.
8. மோகினி ஏகாதசி.
9. பங்குனி, உத்திரம்.
10. ஸ்ரீபுண்டரீகவல்லித் தாயார்.
11. மார்ச் 8.
12. கமதா, பாபமோசினி.
13. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.
14. கைகேயி.
15. பரம், வியூவம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை.



## போட்டி எண். 20




**சரியாகப் பதில் எழுதிய போட்டியாளர்களில் வெற்றி பெற்றவர்கள்**

1. செல்வி சி.தேவரதி,
   சத்யமங்கலம், ஈரோடு மாவட்டம்.
2. செல்வன் வேதாந்த் மதன்
   அடையார், சென்னை.
3. செல்வன் சிவநிதி
   நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

கொள்கலமாகையாலே மிகவும் விலக்ஷணமாய் விரும்பத் தக்கதாகையாலே எல்லார்க்கும் பற்றப்படுவதாயிருக்கும் திருவடிகள் என்றபடி. வேதாந்த தேசிகரும் யதிராஜ ஸப்ததியில் **"அநுகல்ப பூத...''** (20) என்ற சுலோகத்தில் இராமாநுசரின் திருவடியானது எம்பெருமான் திருவடிகளை இரண்டாம் பக்ஷமாக்க வல்லதாகவும், மற்ற இம்மை மறுமைப் பயன்களைக் கலந்து வழங்குவதாகவும் அலைபாயும் நெஞ்சினர்க்கு நிர்ணயம் தரும் அருமருந்தாகவும் இருக்கிற திருவடிகள் என்று சுவைபட உரைப்பர். மேலும் யதிராஜ ஸப்ததி 64வது சுலோகத்தில், எம்பெருமானார் பிக்ஷைக்கு எழுந்தருளும்போது அவரது திருவடிகள் ஆங்காங்கே பூமியில் பதித்துக் கோலமிட்டாற்போல் பூமிக்கு ஆழமாகவும் பாவனமாகவும் ஆகும். அப்போது மேலுலகிலும் இந்தத் திருவடிகள் உழதுபட்ட பாததூளிகளைத் தங்கள் நெற்றியில் நித்ய ஸூரிகள் தரித்துக் கொண்டு தன்யராகிறார்கள் என்பர். இங்ஙனே பல. விரிப்பில் பெருகும். அத்தகைய திருவடிகள் நித்யமாக வாழ வேண்டும்.

(திருவரையில் சாத்திய செந்துவராடை வாழி) ஆறுபிரகாரத்தாலே தூயதான ஆத்ம ஸ்வரூபத்துக்கு பிராட்டியோடு ஒப்புமை உண்டாகையாலே **''ஸீதா காஷாய வாஸிநீ''** என்னும்படி எம்பெருமானுக்கு இட்ட வழக்காயும் அவனுக்கே ஆட்பட்டதையும் குறிப்பிடுகிற திருவரை பூத்தாப்போலே திருவரைக்கு அலங்காரத்தை உண்டு பண்ணுவதாய், சூரியனைச் சுற்றி இருக்குமாபோலே திருவரையில் சூழச்சுற்றி மிக்க சிவப்பான திருப்பரிவட்டம் இருக்கும்.

மேலும், வேறு மதத்திலுள்ள யதிகளுக்குக் காஷாயமும், கையில் ஏகதண்டமுமேயன்றி, சிகை, திரிதண்டம், பூணூல், திருநாமமாகிய இவற்றில் ஒன்றும் இராது. ஸ்ரீவைஷ்ணவ யதிகளில் உயர்ந்தவரான எம்பெருமானார்க்கு இவை எல்லாம் உண்டு. வெறும்புறத்திலே ஆலத்தி வழிக்க வேண்டும்படி இயற்கையாகவே அவர்தம் அழகிய திருமேனியானது காஷாயம் முதலானவற்றால் உண்டான செயற்கை அழகும் சேர்ந்ததான அப்படிப்பட்ட திருமேனியை எப்போதும் ஸேவிக்க வேணும் என்னும் விருப்பம் ஏற்படும் என்பர். இதற்குச் சேர திருவரங்கத்து அமுதனாரும், "கையில் கனி என்னக் கண்ணனைக் காட்டித்தரிலும் உன்தன் மெய்யில் பிறங்கிய சீரன்றி வேண்டிலன் யான்" என்று எம்பெருமானாரின் திருமேனியின் சிறப்பு பற்றி அருளியது காணலாம். எனவே, செந்துவராடை நித்யமாகச் செல்ல வேணும்.

*வாழித்திருநாம உரை தொடரும்....*






## தற்பொழுது விற்பனையில்

## தி.தி.தே. தமிழ் பஞ்சாங்கம்

**திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினரால் வருடந்தோறும் பஞ்சாங்கம் வெளியிடப்படுகிறது. இந்தப் புத்தாண்டின் - ஸ்ரீகுரோதி வருட (2024-2025) பஞ்சாங்கம் தற்பொழுது விற்பனையில் உள்ளது. இப்பஞ்சாங்கத்தில் தினசரி திதி, நக்ஷத்திரம், வாரம், யோகம், கரணம், ஹோரைகள் போன்ற விஷயங்களுடன், பொதுவான பஞ்சாங்கம் சார்ந்த விஷயங்கள், முகூர்த்த நாட்கள், திருமலை ஆலயம் மற்றும் அதைச் சார்ந்த தி.தி.தே. ஆலயங்களில் நடைபெறும் உற்சவங்கள் குறித்த பட்டியல்கள் போன்ற அரிய விஷயங்களுடன் உங்கள் முன்...**




**தகவல்களுக்கு : சிறப்பு அலுவலர், தி.தி.தே. பதிப்பகம் மற்றும் விற்பனையகம், தி.தி.தே. அச்சக வளாகம், கே.டி.சாலை, திருப்பதி-517 501. தொ.எண்.0877-2264209**



# ஏகாதசி விரதம்
## புராண வரலாறுகளுடன்...

*– திரு.துளசி கிருஷ்ணா, சென்னை.*

**நிர்ஜலா ஏகாதசி**

தர்மபுத்திரர் கண்ணனிடம் ஆனி மாத சுக்ல பக்ஷ ஏகாதசியின் பெருமையைக் கூற வேண்டும்படி கேட்டார். அப்பொழுது வியாச பகவான் அங்கு வந்தடைந்தார். உடனே கண்ணன் தர்ம நந்தனா! பிதாமஹரிடம் இதனைக் கேட்பாயாக என்று கூற, தர்மனும் பிதாமஹரிடம் இந்த ஏகாதசியின் பெருமையைக் கூறியருள வேண்டும் என்று கேட்டான். வியாசர் கூறலுற்றார்.

ஆனி மாத சுக்ல பக்ஷ ஏகாதசி நிர்ஜலா என்று அழைக்கப்படும். கலியுகத்தில் பொருட் செலவில்லாமல் சிறிது சரீர சிரமத்தோடு மிகப் பெரிய பலனைக் கொடுப்பது இந்த ஏகாதசி உபவாஸம். ஒரு வருஷத்தில் வருகின்ற சுக்லபக்ஷ, கிருஷ்ணபக்ஷ 25 ஏகாதசி விரதம் அநுட்டித்த பலன் இந்த ஓர் ஏகாதசியை அநுட்டிப்பதால் கிடைக்கிறது. ஒவ்வொரு மாதமும் வரும் ஏகாதசிகளில் உபவாசம் இருக்க இயலாவிட்டாலும் அன்னத்தை புசிக்காமல் பழம், பால் இவற்றை சிறிது உண்டு விரதமிருப்பவனுக்கு எம பயம் இல்லை. உபவாசம் இருந்து ஏகாதசி நோன்பு நோற்றாலே அவன் உத்தமோத்தம லோகங்களை அடைந்து இன்பம் எய்துகின்றான்.

இதைக்கேட்ட பீமசேனன் பிதாமஹரே, எனது தாய், தமையன் அர்ச்சுனன், நகுளன், சகாதேவன், திரௌபதி ஆகியோர் மாதந்தோறும் உபவாசமிருப்பர். என்னையும் இருக்கச் சொல்வர். ஆனால் எனக்கு பட்டினி இருக்க முடியாது. என்ன செய்வேன்?

விருகோதரா சொர்க்காதி, உயர்ந்த போகங்களை அனுபவிக்க விரும்பினால் பொருட்செலவு இல்லாததும், எளியதும் ஆன இந்த ஏகாதசி நோன்பினையாவது அனுட்டிப்பதுதான் சிறந்த வழி என்று கூறினார் வியாசர்.

பகவானே, பசி என் உடன்பிறப்பு. என்னை விட்டுப் பிரியாதது. வயிற்றில் உள்ள ஜாடராக்னி பிரளய காலத் தீயைப் போல் அதில் உக்கிரமானது. பலமுறைச் சாப்பிட்டாலும், பெருமளவு சாப்பிட்டாலும் கூட சாந்தி அடைவதில்லை. இந்த பட்டினி நோன்பிற்கு பதிலாக வேறு ஏதாவது எளிய உபாயத்தைச் சொல்லி எனக்கு சொர்க்காதி போகங்களை அடையும்படியான வழியைச் சொல்லியருள வேண்டும் என்றார். ஒரு வேளையாவது பூரணமாக சாப்பிடுகிறேன். நன்கு ஆராய்ந்து எளியதோர் உபாயம் கூறியருள வேண்டும் என்றான் பீமன்.

இதைக் கேட்ட வியாசர் மற்ற ஏகாதசியில் உபவாசம் இருக்காவிட்டாலும் இந்த நிர்ஜலா ஏகாதசியில் கஷ்டப்பட்டு விரதம் இருந்துவிடு. அன்னம், ஆகாரம் இரண்டும் இல்லாமல் இருப்பதால் நோன்பிற்கு ஊறு ஏற்படாது. உபவாசம் இருந்து மறுநாள் அந்தணர்களை அமுது செய்வித்து ஸ்வர்ணதானம் செய்து பிறகு பாரணை செய். 25 ஏகாதசியின் பலனைப் பெறுவாய். இது ஆன்மா, சரீரம், பொருட்கள் அனைத்தையும் புனிதமாக்குவது. வேத கர்மாக்களை இந்த யுகத்தில் லோபமில்லாமல் செய்வதரிது. புண்ணியத்திற்கு பதிலாக செய்பவன் பாவத்தைக் கட்டிக் கொள்கிறான். இந்த ஏகாதசி உபவாசமிருந்து இந்த எல்லாப் பலன்களையும் பெற்று சுகம்

## நாராபுரம் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம்



ஆந்திர மாநிலம், கடப்பா மாவட்டம், ஜம்மலமடுகு அருகில் பென்னை நதியின் கிழக்கே நாராபுரத்தில் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி கோயில் அமைந்துள்ளது. இவ்வாலயத்தில் ஒவ்வொரு ஆண்டும் தெலுங்கு பஞ்சாங்கத்தின்படி வைசாக சுத்த ஏகாதசி முதல் வைசாக மாதம் கிருஷ்ண பக்ஷம் சஷ்டி வரை பிரம்மோத்ஸவம் நடைபெறுகிறது. இங்கு பிரம்மோத்ஸவம் மட்டும் இல்லாமல் இரதஸப்தமி, வைகுண்ட ஏகாதசி போன்ற உத்ஸவ நாட்களுக்கு பக்தர்கள் திரளாக வந்து எம்பெருமானை தரிசிக்கின்றார்கள்.

ஆந்திர மாநில அறநிலையத் துறை நிர்வாகத்தின் கீழ் இருந்த இவ்வாலயம் 2008, அக்டோபர் 23 முதல் திருமலை திருப்பதி தேவஸ்தான மேற்பார்வையின் கீழ் கொண்டு வரப்பட்டது. அன்று முதல் இந்த ஆலயம் படிப்படியாக மேம்படுத்தப்பட்டு, உத்ஸவங்களையும் சிறப்பாக நடத்தி வருகின்றது. உத்ஸவ காலங்களில் இவ்வாலயம் மக்கள் வெள்ளத்தில் திளைக்கிறது. நாமும் இந்த ஆலயத்திற்கு சென்று ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமியின் அருளைப் பெறுவோம்.

அனுபவிப்பாயாக. இவனுக்கு சரீராவசாநத்தில் வைகுண்ட லோகம் கிடைப்பது உறுதி. இதை உனது கண்ணனும் ஒரு முறை கூறியுள்ளான். இந்த ஏகாதசியில் வஸ்திரம், பசு, படுக்கை, ஆசனம், குடை, கமண்டலம் இவற்றைத் தானம் செய்வது சிறப்பு. பாதரக்ஷை தானம் செய்தால் அவன் தங்க விமானத்தில் மேலுலகம் செல்வான். இதில் உதகும்பதானமே விசேஷம். இந்த ஏகாதசி விரதம் முன் கடந்த நூறு தலைமுறைகளையும், வரப்போகும் நூறு தலைமுறைகளையும் புனிதமாக்கும், பாதுகாக்கும், இன்பம் பயக்கும். பீமனும் அவ்வாறே விரதம் அநுட்டித்து நாராயணனை ஆராதித்து துவாதசி பாரணை இருந்து பெரும் பேறு பெற்றான். அதனால்தான் இந்த ஏகாதசியை பீம ஏகாதசி என்று அழைக்கின்றனர் என்று கூறி முடித்தார்.

### அபரா ஏகாதசி

கண்ணன் தர்மபுத்திரனுக்கு ஆனிமாத கிருஷ்ண பக்ஷ ஏகாதசியின் பெருமையைக் கூறுகின்றான். பாண்டுவந்தனா! ஆனி மாத கிருஷ்ணபக்ஷ ஏகாதசிக்கு அபரா என்று பெயர். இது மிகுந்த புண்ணியத்தை கொடுக்கவல்லது. சந்தான சம்பத்தை அளிக்கவல்லது. பாபங்களை நீக்க வல்லது. பிரும்மஹத்தி, பிறன்மனை விழைதல், பொய்சாட்சி, லஞ்சம், விபசாரம் இவற்றால் உண்டான பாபங்கள், தத்துவம் என்று கூறி கடவுட்கொள்கையில் பிறரை ஏமாற்றுதல், தர்மத்தை விடுதல், ஆசார்ய நிந்தனை இவை யாவும் அபரா ஏகாதசியை அநுட்டிக்க உடன் விலகும்.

தை மாசி மாதங்களில் பிரயாகையில் ஸ்நானம் செய்த பலனும், காசி வாசம் செய்த புண்ணியமும், புண்ணிய நதிகளிலும், சமுத்திரத்திலும், கிரகண கால ஸ்நானமும் செய்த பலனும், கயா சிராத்த பலனும், ஆவணி மாதத்தில் சிம்மத்தில் குரு இருக்கும் பொழுது கோமதி ஸ்நானமும், கன்னியில் குரு இருக்கும்பொழுது கிருஷ்ணாநதி ஸ்நானமும், மாசி மாதத்தில் கேதார தர்சனமும், பலமுறை பத்ரியாத்ரா பலனும், யானை தானம், ஸ்வர்ணதானம், குதிரை தானம் செய்த பலன்களும், பிரசவித்துக் கொண்டு கன்றுடன் கூடிய பசுவைப் பிரதக்ஷண நமஸ்காரங்கள் செய்வதனால் ஏற்படும் பலனும், ஸ்வர்ணத்துடன் கூடிய பூதான பலனும் இந்த ஏகாதசியில் உபவாஸம் இருப்பவர்கள் பெறுவர். எல்லாப் பாவ புண்ணியங்களிலிருந்தும் விடுபட்டு விஷ்ணு லோகத்தை அடைவர். இத்தகைய பெருமையுடைய ஏகாதசி விரதத்தை அநுட்டித்து நீயும் பயனடைவாயாக.

விரதம் தொடரும்....



# மே 2024
# ராசி பலன்கள்



- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94433 86213.

**மேஷம்**

குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். தனவரவு உண்டு. வீடு, மனை, புதுவாகனம் வாங்கும் யோகம் உண்டு. தொழில் துறையில் நல்ல விருத்தி, முன்னேற்றம் உண்டு. உடலை உஷ்ணமாக்கும் பொருட்களைத் தவிர்க்கவும். கணவன்-மனைவி ஒற்றுமை உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு உண்டு. நல்ல ஏற்றம் தரும் மாதமிது.

**ரிஷபம்**

மாத ஆரம்பத்தில் செலவினங்கள் அதிகமாகும். பின்பகுதியில் தனவரவு உண்டு. ஆரோக்யத்தில் மிகுந்த அக்கறை தேவை. நண்பர்கள், உறவினர்களால் சிறு பிரச்சனைகள் ஏற்பட்டு பின் சரியாகும். குழந்தைகள் ஆரோக்யத்தில் அக்கறை தேவை. மாணவர்கள் மிகுந்த ஊக்கத்துடன் படித்தால் மட்டுமே நல்ல மதிப்பெண்கள் பெறலாம். கடும் முயற்சியுடன் வெற்றி பெறும் மாதமிது.

**மிதுனம்**

குடும்பத்தில் சுபச் செலவுகள் நடக்கும். தொழில் துறையில் புதிய முயற்சிகள் வெற்றியையும், தொழில் விஷயத்தில் வெகுமானமும் கிடைக்கும். தோஷ பரிகாரங்கள் செய்ய ஏற்ற மாதமிது. தாயின் ஆரோக்யத்தில் சிறு குறைபாடுகள் ஏற்பட்டு பின் சரியாகும். வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். எதிர்பார்த்த நல்ல மாற்றங்கள் கிடைக்கும் மாதமிது.

**கடகம்**

தொழில் துறையில் வளர்ச்சி நன்றாக இருந்தாலும் பணவரவு பாதிக்கும். சுப நிகழ்ச்சிகள் நடக்கும். வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு விரைவில் கிட்டும். தொழில் வளர்ச்சிக்காகப் புது முயற்சிகள் செய்யலாம். மனைவியின் ஆரோக்யத்தில் எச்சரிக்கை தேவை. கடும் உழைப்பின் பேரில் முன்னேறும் மாதமிது.

**சிம்மம்**

உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வு காரணமாக இடமாற்றம் உண்டாகும். குடும்பத்தில் மனைவியின் ஆலோசனை முன்னேற்றத்தைக் கொடுக்கும். இடம் மாறும் யோகம் உண்டு. தந்தை ஆரோக்யத்தில் அக்கறை தேவை. தாய் ஆரோக்யம் நன்றாக இருக்கும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். கணவன்-மனைவி பிரச்சனை தீரும். மொத்தத்தில் மாற்றம் ஏற்றம் தரும் மாதமிது.

**கன்னி**

தெய்வபலம் கூடும். இதுவரை செய்த பிரார்த்தனையின் பலன் இனி கிடைக்கும். உஷ்ணம் காரணமாக ஆரோக்ய குறைபாடுகள் ஏற்பட்டு பின் சரியாகும். குழந்தைகளால் நல்ல பெயரும் புகழும் கிட்டும். நல்ல மனிதர்கள் நட்பு கிடைக்கும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெறுவர். நிறைவாக, தெய்வ கிருபையினால் முன்னேற்றம் தரும் மாதமிது.

**துலாம்**

அஜீரணம், உஷ்ணம் காரணமாக சிறு பிரச்சனைகள் ஏற்பட்டு பின் சரியாகும். பண விஷயத்தில் எச்சரிக்கை தேவை. பணபரிவர்த்தனை தவிர்ப்பது நலம். புது முயற்சிகளில் எச்சரிக்கை தேவை. குழந்தைகள் பிடிவாதம் பிடித்தாலும் முன்னேற்றம் அடைவது உறுதி. மாணவர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் படித்தால் முன்னேற முடியும்.

**விருச்சிகம்**

தெய்வ பலத்தினால் நினைத்த காரியங்கள் கைகூடும். திருமணம், குழந்தை பாக்கியம் விரைவில் உண்டு. பொதுமக்களின் நன்மதிப்பைப் பெறுவர். பிரார்த்தனைகளுக்கு பலன் கிடைக்கும். நண்பர்கள், உறவினர்களால் ஏற்பட்ட பிரச்சனைகள் விலகும். மாணவர்கள் எதிர்பார்த்த நல்ல மதிப்பெண்கள் பெறுவார்கள். சகல துறைகளிலும் முன்னேறும் மாதமிது.

**தனசு**

வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. தைரியமாகச் செயல்பட்டுக் காரியங்களைச் சாதிக்கலாம். தொழில் துறையில் அலைச்சலுக்கு ஏற்ற வருமானம் உண்டு. புதிய முயற்சியில் வெற்றிக் கிட்டும். நண்பர்கள் உறவினர்களுடன் சிறு பகை ஏற்பட்டு பின் சரியாகும். மாணவர்கள் சுமாரான மதிப்பெண்கள் பெறுவர். எதிரிகளை வென்று சாதனை செய்யும் மாதமிது.

**மகரம்**

திருமணம், குழந்தை பாக்கியம் கைகூடும். திடீர் தனவரவு உண்டு. குழந்தைகள் ஆரோக்யத்தில் சிறு பின்னடைவு ஏற்பட்டு பின் சரியாகும். மாணவர்கள் எதிர்பார்த்த நல்ல மதிப்பெண்கள் பெறுவர். வேலைவாய்ப்பு கிட்டும். சிலருக்கு வெளிநாடு செல்லும் யோகம் உண்டு. இதுவரை செய்த பிரார்த்தனைகளுக்கு நல்ல பலன் தரும் மாதமிது.

**கும்பம்**

பிடிவாதமாக காரியங்களைச் செய்து சாதனை செய்வீர். வேலைபளு அதிகமானாலும் முன்னேற்றம் உண்டு. பேச்சில் விவாதங்கள், இரவு நேரப் பயணங்கள் தவிர்ப்பது நல்லது. இளைய சகோதரர்களுக்கு நல்ல யோகமும், முன்னேற்றமும் உண்டு. புதிய முயற்சிகளில் முதலில் தடையும், பின் வெற்றியும் கிட்டும். கடுமையாக உழைத்து முன்னேறும் மாதமிது.

**மீனம்**

உடல் ஆரோக்யம் காரணமாகத் தூக்கமின்மை ஏற்படும். இளைய சகோதரனுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. பெற்றோர் ஆரோக்யமும் அனுகூலமாக அமையும்.வரவிற்கு ஏற்ற செலவு உண்டு. நல்ல மனிதர்களின் நட்பு கிட்டும். மாணவர்கள் கடுமையாக உழைத்து நல்ல மதிப்பெண்கள் பெறுவர். தொழில் துறையில் இரண்டாவது முயற்சியில் வெற்றி பெறும் மாதமிது.

# நல்லதே பேசுங்கள்!

விஸ்வாமித்திரரின் ஆசிரமத்திற்கு வசிஷ்டர் வந்திருந்தார். இருவரும் பல விஷயங்களைப் பேசினர். வசிஷ்டர் விடை பெறும்போது விஸ்வாமித்திரர் அவருக்கு மறக்க முடியாத அன்பளிப்பு ஒன்றை வழங்க விரும்பி ஆயிரம் ஆண்டுகள் மேற்கொண்ட தவத்தால் தனக்குக் கிடைத்த சக்தியைக் கொடுத்தார். மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்ட வசிஷ்டரும் நன்றி சொல்லி புறப்பட்டார். இன்னொரு சமயத்தில் வசிஷ்டரின் ஆசிரமத்திற்கு விஸ்வாமித்திரர் வர நேர்ந்தது. வசிஷ்டரும் அவரை அன்புடன் உபசரித்தார். புண்ணியம் தரும் ஆன்மீக விஷயங்களை மட்டுமே பேசினார். விடை பெறும் நேரத்தில் வசிஷ்டரும் விஸ்வாமித்திரருக்கு அன்பளிப்பு வழங்க விரும்பினார்.

இவ்வளவு நேரம் நல்ல விஷயங்களைப் பேசியதற்கு கிடைத்த புண்ணிய பலனை உமக்கு அளிக்கின்றேன் என்றார். இதைக் கேட்ட விஸ்வாமித்திரரின் முகம் சுருங்கியது. "நீங்கள் எனக்கு அளித்த ஆயிரம் ஆண்டு தவப்பயனுக்கு இந்த அரை நாள் நல்ல விஷயங்கள் பற்றி பேசிய புண்ணியமும் எப்படி சமமாகும் என்று தானே யோசிக்கிறீர்கள்? என்று கேட்டார். எது உயர்ந்தது என்பதை அறிந்து கொள்ள பாதாள லோகத்தில் இருந்த ஆதிசேஷனின் உதவியை நாடினார். இதற்கு யோசித்தே பதில் சொல்ல வேண்டும். அதுவரை இந்த பூலோகத்தைத் தாங்கும் பணியை நீங்கள் செய்யுங்கள். தலையில் சுமக்க கடினமாக இருக்கும் எனவே இதை ஆகாயத்தில் நிலை நிறுத்தி வையுங்கள் என்றார் ஆதிசேஷன். உடனே விஸ்வாமித்திரர் நான் இப்போதே ஆயிரம் ஆண்டுகள் செய்த தவத்தின் சக்தியைக் கொடுக்கிறேன். அதன் பயனாக பூமி ஆகாயத்தில் நிலை பெற்று நிற்கட்டும் என்றார். ஆனால், பூமியில் எந்த மாற்றமும் உண்டாகவில்லை. அது ஆதிசேஷனின் தலையிலேயே நின்று கொண்டிருந்தது.

வசிஷ்டர் தன் பங்குக்கு அரை மணி நேரம் நல்ல விஷயங்களை பேசியதால் உண்டாகும் புண்ணியத்தை கொடுக்கிறேன். இந்த பூமி அந்தரத்தில் நிற்கட்டும் என்றார். இதைச் சொன்னதும் ஆதிசேஷனின் தலையில் இருந்த பூமி கிளம்பி அந்தரத்தில் நின்றது. ஆதிசேஷன் பூமியை எடுத்து மீண்டும் வைத்துக்கொண்டு நல்லது நீங்கள் இருவரும் வந்த வேலை முடிந்து விட்டது போய் வரலாம் என்றார். கேட்ட விஷயத்திற்கு தீர்ப்பு சொல்லாமல் வழியனுப்பினால் எப்படி என்றனர் ரிஷிகள் இருவரும் ஒருமித்த குரலில்.

உண்மையை நேரில் பார்த்த பிறகு தீர்ப்பு சொல்வதற்கு ஒன்றுமில்லை. ஆயிரம் ஆண்டுகள் மேற்கொண்ட தவ சக்தியால் அசையாத பூமி அரைமணி நேரம் நல்ல விஷயங்கள் பேசிய பலனுக்கு அசைந்து விட்டது பார்த்தீர்களா! நல்லவர் உறவால் கிடைக்கும் புண்ணியமே தவத்தால் கிடைக்கும் புண்ணியத்தை விடச் சிறந்தது என்றார் ஆதிசேஷன்.

எனவே, குழந்தைகளே எப்பொழுதும் நல்லதை பேசுங்கள். நல்லோர்களோடு மட்டுமே உறவாடுங்கள்.




திரு. எம். அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி,
9750333265.






# பல்சுவை பகுதி

எண்களை இணைத்து வண்ணம் தீட்டுங்கள்



## சித்திரப் பகுதி

படத்தைப் பாருங்கள் !



வண்ணம் தீட்டுங்கள் !!












1) அக்ஷய திருதியை
2) பாற்கடலுடன் தொடர்புடையவை
3) பிரகலாதன் அடைந்த துன்பங்கள்

*மேலே குறிப்பிட்ட பண்டிகை மற்றும் பருவ தினங்களுக்கு பொருத்தமான சித்திரங்களுக்குறிய வட்டத்தில் அந்தந்த எண்களை எழுதுங்கள்*








## வார்த்தைகளைச் சரியாக எழுதி "ஆத்திசூடி"யைப் படிப்போமா!

இலவம் துயில் பஞ்சில், ஆட்டேல் அரவம், பேசேல் வஞ்சகம்.

(தலைகீழாக அச்சிடப்பட்டது:) அரவம் ஆட்டேல், இலவம் பஞ்சில் துயில், வஞ்சகம் பேசேல்.

## சரியான பாதையைக் கண்டுபிடி



| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 6 | 7 | 11 | 8 | 6 | 7 | 9 |
| | | 5 | 3 | 4 | 8 | 12 | 5 | 9 | 14 | 12 |
| 11 | 10 | 7 | 8 | 5 | 6 | 7 | 10 | 15 | 7 | 9 |
| 8 | 9 | 12 | 5 | 16 | 10 | 8 | 9 | 11 | 8 | 13 |
| 13 | 7 | 10 | 11 | 13 | 12 | 11 | 10 | 15 | 19 | 18 |
| 15 | 14 | 16 | 17 | 14 | 15 | 20 | 19 | 20 | | |
| 17 | 18 | 8 | 19 | 18 | 16 | 17 | 18 | 17 | | |



சிறார்களே! ஸ்ரீமத் இராமானுஜரிடம் முக்திக்கான சிபாரிசு சீட்டினைப் பெற்ற பாட்டியை அழைத்துச் செல்லும் அந்த மோக்ஷவிமானத்திற்கு 1,2 முதல் 20 வரை பாதையை வகுத்து வழிகாட்டுங்கள்

## மாநிலத்தைக் கண்டுபிடி



போரான்தேவ் ஆலயம், புது ராய்பூர், லக்ஷ்மன் ஆலயம், பிலாய் அமைந்துள்ள மாநிலம்...

(தலைகீழாக அச்சிடப்பட்டது:) சத்தீஸ்கர்

வினாடி வினா



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி போட்டி எண்-22

**ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!**

1. நரசிம்ம அவதாரம் நிகழ்ந்த மாதம், நட்சத்திரம் ..............................................
2. கம்பர் இராமாயணத்தை அரங்கேற்றியத் திருத்தலம் .............................. ..............................
3. பாற்கடலைக் கடையும் போது அமிர்த கலசத்துடன் தோன்றியவர்.................. ..............................
4. வைகுந்த வாயிலின் துவார பாலகர்கள்..............................................
5. உபதேச ரத்தின மாலையை இயற்றியவர் ..............................................
6. கம்பராமாயணத்தில் இரணிய வதைப்படலத்திற்கு இசைவு தந்தவர்..............................................
7. இராமாநுஜர் அவதரித்த மாதம், நட்சத்திரம்..............................................
8. வைகாசி விசாக நட்சத்திரத்தில் அவதரித்த ஆழ்வார்..............................................
9. இளையாழ்வார் என்று அழைக்கப்படும் ஆசாரியர்..............................................
10. அசுரனான விபிஷணனுக்கு அடைக்கலம் தந்தவர் ...... ..............................................
11. ஆதிசங்கரரின் பெற்றோர் பெயர் ..............................................
12. ரகுகுலத்தின் நாயகனாகப் போற்றப்படுபவர் ..............................................
13. யானைமலை நரசிம்மப் பெருமான் எழுந்தருளி இருக்கும் நகரம்..............................................
14. ஒன்றென்று இரு; தெய்வம் உண்டென்று இரு என்று கூறியவர்..............................................
15. ராமுடு ராகவுடு ரவிகுலடிதடு என்று கீர்த்தனைப் பாடியவர்.......... ..............................................

## போட்டிக்கான நிபந்தனைகள்



- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்கு உட்பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்திய குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்த பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, T.T.D. Press Compound, K.T. Road, Tirupati-517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல் எடுத்து அனுப்புவோர் கட்டாயம் சந்தா எண்ணைக் குறிப்பிடவும். ஒரு சந்தாவிற்கு ஒன்று மட்டுமே அனுப்பவும்.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியைக் குறித்து எவ்வித தகவல்களும் தொலைபேசி வாயிலாகத் தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.05.2024.

**விடையை எழுதுங்கள்!**
**திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்!!**



| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதாரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |



## சக்கரத்தைச் சுற்றுங்கள்!
## அதே வண்ணக்கட்டத்தில் விடையை எழுதுங்கள்!!

- பக்த பிரகலாதன் வழிபட்ட தெய்வம்?
- பாலகன் பிரகலாதன் தந்தை பெயர்?
- பிரகலாதனுக்கு பிரசன்னமான தெய்வம்?
- தூணிலிருந்து வெளிப்பட்டு பிரகலாதனைக் காத்த பெருமாள்?
- நரசிம்ம ஸ்வாமியின் பட்டமஹிஷி?
- நரசிம்ம ஸ்வாமி தூணிலிருந்து வெளிப்பட்ட திதி
- நரசிம்மர் அவதரித்த திருநட்சத்திரம்
- நரசிம்ம ஸ்வாமி தூணிலிருந்து வெளிப்பட்ட வேளை



**விடைகள்**

1) நரசிம்மர், 2) ஹிரண்யகசிபு, 3)நரசிம்மர், 4) நரசிம்மர்,
5)லக்ஷ்மித் தாயார், 6)சதுர்தசி, 7)சுவாதி, 8) அந்தி சாயும் நேரம்.



மேலே காணப்படும் சித்திரத்தில் ஒரு தவறு உள்ளது. குழந்தைகளே! அதை என்னவென்று கண்டுபிடித்து கீழே உள்ள கட்டத்தில் எழுதி மகிழவும்

கடிகாரத்தில் சிறிய முள்

**விடைகள்**

## சேமிக்க பழகு!



எறும்பு எத்தனை சிறியது
பணியில் மிகவும் முன்னது
எதிர்காலத்தை அறிந்து
சேமிக்க வல்லது



# பக்தர்களைத் துன்புறுத்தினால்...

சித்திரக் கதை

கதை மூலம் :டாக்டர் கே.ரவிச்சந்திரன்

சித்திரம் :திரு. து. சிவாஜி




அக்காராமனின் சீடன் வீட்டிலிருந்து வந்து...
ஐயா! வீட்டிலிருக்கும் பசுக்கள் திடீரென மடிந்து போய் விட்டன. வீட்டில் உள்ளோர் அனைவருக்கும் வாந்தி, வயிற்றுப்போக்கு ஏற்பட்டு, வீடே மயானமாக மாறிவிட்டது.
அம்மா தாயே என் தவறை மன்னித்து எனக்கு கருணைக் காட்டுங்கள். தங்களைப் பற்றி அறியாமல் அவமதித்து விட்டேன். தங்களின் திருப்பாதங்களே எனக்கு தஞ்சம்.
இனிமேலாவது நற்சிந்தனையோடு இரு. இறைவன் தம் பக்தர்களைத் துன்புறுத்தினால் மன்னிக்க மாட்டான். பாகவத அபசாரம் மகா பாவமாகும். பக்தர்கள் தம் பாவங்களைப் போக்கவே இங்கு வருகின்றனர். அவர்களைத் துன்புறுத்தாதீர்.அவர்களின் கர்மாக்கள் உம்மையே வந்து சேரும். இனி இத்தவற்றினைச் செய்யாதீர்.
ஸ்வாமி! வேங்கடவா!
அழைத்தாயா வெங்கமாம்பா.
நான் அமைதியாக தவம் மேற்கொள்ள வேண்டும். இங்கு என் தவத்திற்கும், பக்திக்கும் இன்னல்கள் ஏற்படுகின்றன. ஏதாவது ஒரு நல்ல இடத்தினைக் காட்டுங்கள் ஸ்வாமி.
வெங்கமாம்பா! தும்புரு தீர்த்தத்திற்குச் சென்று அங்கு யோகத்தில் ஈடுபடு, அங்கு யாரும் வர மாட்டார்கள்.
பேறு பெற்றேன் ஸ்வாமி! ஆபத்தில் காப்பவனே! அனாதைரக்ஷகனே! கோவிந்தா! கோவிந்தா!
சுபம்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

*(சமய மாத இதழ்)*

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________
(பெரிய எழுத்துக்களில்) ________________
________________
________________

அலைபேசி எண் ☐☐☐☐☐☐☐☐☐☐

2.தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3.வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ ரூ.2,400/-(12 வருடங்கள்)

4.சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5.செலுத்திய தொகை :

6.செலுத்திய வழி :

பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ./ஐ.பி.ஓ)

ரசீது எண் : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை/காசோலை

எண். : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

---

**திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.**

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்சென்டர்

**உங்களுக்காக**

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-**
**2233333**
**2277777**

---

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) காசோலை, இ.எம்.ஓ.,ஐ.பி.ஓ., டி.டி. -யை பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.



ரிஷிகேஷ்



நாராயணவனம்

## ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

**2024 மே 21 முதல் 29 வரை**

21-05-2024, செவ்வாய்க்கிழமை
பகல் : துவஜாரோஹணம்
இரவு : பெரிய சேஷ வாகனம்
22-05-2024, புதன்கிழமை
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ஸ வாகனம்
23-05-2024, வியாழக்கிழமை
பகல் : சிம்ம வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்
24-05-2024, வெள்ளிக்கிழமை
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : சர்வபூபால வாகனம்
25-05-2024, சனிக்கிழமை
பகல் : பல்லக்கில் மோகினி அவதாரம்
இரவு : கருட வாகனம்
26-05-2024, ஞாயிற்றுக்கிழமை
பகல் : ஹனுமத்வாகனம்
மாலை : வஸந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்
27-05-2024, திங்கட்கிழமை
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்
28-05-2024, செவ்வாய்க்கிழமை
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்
29-05-2024, புதன்கிழமை
பகல் : சக்ரஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்



## ஜம்மலமடுகு ஸ்ரீபூசமேத ஸ்ரீநாராபுர வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

**2024 மே 21 முதல் 29 வரை**

21-05-2024, செவ்வாய்க்கிழமை
பகல் : துவஜாரோஹணம்
இரவு : பெரிய சேஷ வாகனம்
22-05-2024, புதன்கிழமை
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ஸ வாகனம்
23-05-2024, வியாழக்கிழமை
பகல் : முத்துப்பந்தல் வாகனம்
இரவு : சிம்ம வாகனம்
24-05-2024, வெள்ளிக்கிழமை
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : ஹனுமத்வாகனம்
25-05-2024, சனிக்கிழமை
பகல் : பல்லக்கில் மோகினி அவதாரம்
இரவு : கருட வாகனம்
26-05-2024, ஞாயிற்றுக்கிழமை
பகல் : சர்வபூபால வாகனம்
இரவு : யானை வாகனம், திருக்கல்யாணம்
27-05-2024, திங்கட்கிழமை
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்
28-05-2024, செவ்வாய்க்கிழமை
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்
29-05-2024, புதன்கிழமை
பகல் : சக்ரஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்

SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-04-2024 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/ 2024-2026 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(05)/2024-2026" Posting on 5th of Every month.

